விலை ரூபா 20 பக்கங்கள் 36

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 181 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 13, புதன்கிழமை 27.05.2015

தென் பகுதி அரசியலில் குழப்பமான சூழ்நிலை

16ஆம் பக்கத்தில்...

## ஆர்ப்பாட்டம், பேரணிக்கு மல்லாகம் நீதிமன்று தடை

யாழ்ப்பாணம், மே 27
ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், நடைபவனிகள், எதிர்ப்பு நடவடிக்கை என்பவற்றை மேற்கொள்ள மல்லாகம் நீதிமன்று 14 நாள்களுக்குத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
சுன்னாகம் நகர்ப் பகுதியில் நேற்றுப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையிலேயே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
சுன்னாகம் பொலிஸார் சமாதானக் குலைவு, மக்கள் குழப்பம் ஏற்படும் என்று தெரிவித்து மல்லாகம் நீதிமன்றூடாக இந்தத் தடையுத்தரவைப் பெற்றுக் கொண்டுள்ளனர். தடையுத்தரவு காரணமாக நேற்று நடைபெறவிருந்த பேரணி நடைபெறவில்லை. (ந-4)

## போராட்டங்களைத் தடுப்பது பெரும் மனித உரிமை மீறல்

### சாடுகின்றன ஆசிரியர் சங்கங்கள்

யாழ்ப்பாணம், மே 27
புங்குடுதீவு மாணவி கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து முன்னெடுக்கப்படும் போராட்டத்தைத் தடுக்க நீதிமன்று ஊடாக பொலிஸார் அனுமதி பெற்றுள்ளமை உரிமை மீறல் செயற்பாடு என்று சாடியுள்ளன ஆசிரிய சங்கங்கள்.
ஜனநாயக வழியில் முன்னெடுக்கும் போராட்டங்களை பொலிஸார் தடுப்பது ஜனநாயக விரோத போராட்டங்களுக்கு வழி வகுக்கும் என்றும் அவை குறிப்பிட்டுள்ளன.
இலங்கை தமிழ் ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்த சரா புவனேஸ்வரன் கூறுகையில்; பக்.2



புங்குடுதீவு மாணவி கொலைச் சம்பவம்

# விசேட நீதிமன்றில் விரைவு விசாரணை

## யாழ்ப்பாணத்தில் உறுதியளித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

யாழ்ப்பாணம், மே 27
புங்குடுதீவு மாணவிக்கு நடந்தது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்கக் கூடாது. மாணவி கொலை தொடர்பில் விசேட நீதிமன்றில் விசாரணை நடத்தப்படும். தண்டனை வழங்கப்படும்.- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதை அடுத்து வடக்கில் அசாதரண நிலைமை தோன்றியது. அது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி நேற்று வடக்குக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டார். தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை அவர் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
சந்திப்பில் கலந்துகொண்டிருந்த மாணவர்கள் புங்குடுதீவு மாணவி கொலை விடயத்தில் உரிய விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோரினர்.
அதற்குப் பதில பக்.2

## புங்குடுதீவு மாணவி குடும்பத்துக்கு உதவி

### ஜனாதிபதி உறுதியளித்தார்

யாழ்ப்பாணம், மே 27
படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் குடும்பத்தினரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.
அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுடன், ஒரு தொகை உதவிப் பணமும் வழங்கப்படும் என அவர் உறுதியளித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பக்.2

## மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியமில்லை *-மஹிந்த*

கொழும்பு, மே 27
தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெண்களுக்கு அநீதி இழைக்காததால் அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் கிடையாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
வித்தியாவின் படுகொலைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் வேறு நோக்கம் இருக்கின்றதா என ஆராயவேண்டும் என்றே தாம் சுட்டிக்காட்டியிருந்தார் என்றும், இதைத் திரிபுபடுத்தி கருத்துகள் வெளியிடப்படுகின்றன என்றும் மஹிந்த சுட்டிக்காட்டினார்.
அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடை பக்.2

### மாணவியின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறினார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், மே 27
யாழ்ப்பாணத்துக்கு நேற்று திடீர்ப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் தாய் மற்றும் சகோதரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பக்.2

## ஆட்சி மாற்றம் அவசியம்

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, மே 27
பழிவாங்கல்களை மாத்திரம் இலக்காகக்கொண்டு புதிய அரசு செயற்படுவதால் நாட்டில் அவசர ஆட்சி மாற்றமொன்று அவசியம் என வலியுறுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
இதற்காக மக்கள் அனைவரும் அணிதிரளவேண்டும் எனவும் அவர் பக்.2

## இன்று காலையில் ஒரு நிமிடம் மாணவியை அஞ்சலியுங்கள்

### இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, மே 27
புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவியை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் இன்று ஒரு நிமிட அஞ்சலி செலுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
அந்தச் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க பக்.2

## பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு அனுமதியளித்தது மஹிந்த அரசே

### சாடுகின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, மே 27
"பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு அனுமதியளித்தது மஹிந்த அரசு. தற்போது பெண் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை வைத்து தனது அரசியலுக்கான ஒட்சிசனைப் பெற மஹிந்த முயற்சிக்கின்றார்"? என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.
உண்மையிலேயே மஹிந்த மீண்டும் நாட்டின் ஜனாதிபதியானால், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நாளும் பெண்ணொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவார். நாம் அவரைத் தோற்கடித்து எமது பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படு பக்.2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களிடம் மைத்திரி மன்னிப்புக் கோரவேண்டும்

## தேசப்பற்றுள்ள முஸ்லிம் முன்னணி வலியுறுத்து

கொழும்பு, மே 27

"மன்னாரில் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்காக முஸ்லிம் மக்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்புக் கோரவேண்டும்" – என தேசப்பற்றுள்ள முஸ்லிம் முன்னணி என்ற அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதக் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியதால் அலரிமாளிகையிலிருந்து அம்பாந்தோட்டைக்குச் செல்ல வேண்டிய நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டது. எனவே, தவறிழைத்து பொலன்னறுவைக்குச் செல்லும் பாதையை தேடிக்கொள்ள வேண்டாம் என்று மேற்படி அமைப்பின் தலைவர் மிய்லார் தெரிவித்தார்.

தேசிய நூலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

"மறிச்சுக்கட்டி குடியேற்றம் தொடர்பில் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை நாம் நிராகரிக்கிறோம். அங்கு காடுகள் அழிக்கப்படவில்லை. மாற்றுக் குடியேற்றங்களும் இடம்பெறவில்லை.

இந்நிலையில், வில்பத்துவில் காடு அழிக்கப்படுவதாகவும், அப்பகுதியில் மீள்குடியமர்த்த அனுமதிக்கப் போவதில்லை எனவும், முன்னைய அரசு இதுவிடயம் பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதற்காக முஸ்லிம்களிடம் அவர் மன்னிப்புக் கோர வேண்டும். முன்னைய அரசு 10 வருடங்களாக முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கையை இந்த அரசு 150 நாள்களிலேயே செய்துள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும். அத்துடன், ஊடகங்கள் ஒரு நிலையாகச் செயற்படவேண்டும். எனினும், ஒருசில ஊடகங்கள் வில்பத்து விவகாரத்தைப் பெரிதுபடுத்துகின்றன. இதனூடாக இனவாதத்தைப் பரப்புவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

சுற்றாடல் அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க கூட இதில் குழப்பம் இல்லை எனக் கூறியுள்ளார். எனினும், ஒருசிலர் இதை பெரிதுபடுத்துகின்றனர்" – என்றார்.

(ற–சி)

### பெண்கள்

வதைத் தடுத்து விட்டோம் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டி, கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க சமூக வலைத்தளங்கள் வழங்கிய பங்களிப்புக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிகாரமில்லாததால் – பணம் தேட முடியாததால் தமது ஆதரவாளர்களைக்கொண்டு எமக்கு எதிராக புரட்சியொன்றை ஆரம்பிக்க மஹிந்த படையணி முயற்சிக்கின்றது. அதனால், மஹிந்த படையணியின் புரட்சியை நாம் உடனடியாக முறியடிக்கவேண்டும்.

தமது அரசியல் வங்குரோத்தை மூடி மறைப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ இன வாதத்தைத் தூண்டிவிட நடவடிக்கை எடுக்கின்றார். நாட்டில் பெண்ணொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டால் அதை வைத்து அரசியல் நடத்தும் நிலைக்கு ராஜபக்ஷ படையணி வந்துள்ளது.

நாட்டில் பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு தமது பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதி வழங்கியது மஹிந்த அரசு, பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தை வைத்து தனது அரசியலுக்கு ஒட்சிசன் பெற அது தற்போது முயற்சிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்த சம்பவம் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவும், அவரது படையணியும் தமது கவலையைத் தெரிவிக்காமல், மஹிந்த நாட்டில் ஜனாதிபதியாக இல்லாததால்தான் இந்த நிலை என்று கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு இப்படியொரு கருத்தை வெளியிடும் மஹிந்த ராஜபக்ஷ, தனது ஆட்சிக்காலத்தில் 100, 200 பெண்களை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கி பிரதேச சபைத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாரா?

யாழில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த துஷ்பிரயோக சம்பவத்தினூடாக எதிர்மாறான புரட்சியொன்றை ஏற்படுத்த முயற்சிப்பதனூடாக மஹிந்த அரசியலில் எந்தளவுக்கு வங்குரோத்தடைந்துள்ளார் என்பது தெரியவருகின்றது.

தெற்கில் இதுபோன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தால், இங்கும் பாரிய கலவர நிலை தோற்றம் பெற்றிருக்கும். பாடசாலை மாணவி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப் பட்டால் எங்கும் முரண்பாடான நிலைமைதான் உருவாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின்கீழ் பெண்ணொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதற்கு எதிராக கிளர்ந்தெழ மக்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது.

இனவாத அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கும் ராஜபக்ஷவின் எதிர்மாறான புரட்சிக்கு உடனடியாக நசுக்கி, சர்வாதிகார மஹிந்த படையணி மீண்டும் தலைதூக்க இடமளிக்கக் கூடாது. – என்றார். (ற–சி)

### போராட்டங்களைத்

"இது ஜனநாயக நாடு. போராட்டம் செய்ய உரிமை உண்டு. பருத்தித்துறை நீதிமன்று அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. வன்முறை ஏற்படாது பாதுகாப்பது பொலிஸாரின் கடமை என்றும் கூறியுள்ளது. இப்படியிருக்கையில் சுன்னாகம் பொலிஸார் தடையுத்தரவு கோருவது நியாயமற்றது. மாணவி கொலையைக் கண்டித்து தெற்கிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. அதற்கு தடையில்லை. பொலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டுமே தவிர தடுக்கக் கூடாது."– என்றார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஸ்டாலின், "போராட்டம் செய்வது ஜனநாயக உரிமை. யாழ்.நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்தச் சம்பவத்தை முன்னிறுத்தி ஏனைய இடங்களில் நடக்கும் போராட்டங்களைத் தடுக்கக் கூடாது. அது மனித உரிமை மீறல் செயற்பாடே."– என்றார்.

யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் இதுகுறித்துக் குறிப்பிடும்போது,

"வன்முறைப் போராட்டங்களுக்கே பொலிஸார் தடையுத்தரவு கோர வேண்டும். அமைதியான போராட்டங்களைத் தடுக்கக் கூடாது. யாழ்.நீதிமன்றம் தாக்கப்பட்டதைக் காரணம் காட்டி ஏனைய போராட்டங்களைத் தடுக்கக் கூடாது."– என்றார். (ற–4)

### மன்னிப்பு

பெற்ற சந்திப்பொன்றின்போது கருத்து வெளியிட்ட பிரதமர், "புங்குடுதீவில் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வித்தியாவுக்கு அனுதாபம் தெரிவிக்காது, மேற்படி சம்பவம் தொடர்பில் அரசியலை முன்னிலைப்படுத்தி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிடுகிறார். இதற்காக பெண்களிடம் அவர் மன்னிப்பு கேட்கவேண்டும்" எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டார்.

"நான் பெண்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என பிரதமர் கூறியுள்ளார். எதற்காக நான் மன்னிப்பு கோரவேண்டும்? நான் பெண்களுக்கு அநீதி இழைத்ததில்லை. அவர்களை துன்பப்படுத்தியதில்லை. எனது ஆட்சியில் பெண்களுக்கு நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துள்ளேன். ஆகவே, மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியம் கிடையாது.

யாழில் பாடசாலை மாணவியொருவர் 9 பேரால் வன் புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் இவ்வாறானதொரு சம்பவம் இங்கு நடைபெற்றதில்லை. இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அந்தக் கொலைக்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்களையே நான் சுட்டிக்காட்டியிருந்தேன். ஆர்ப்பாட்டம், ஹர்த்தால்களின் பின்னணியில் வேறு குழுவொன்று இயங்கியதா என்றே நாம் கேள்வி எழுப்பியுள்ளோம்" – என்றார். (ற–சி)

### புங்குடுதீவு

இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியில் வடக்குக்கான திடீர்ப் பயணம் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு ஆளுநர் சுகவீனம் காரணமாக கொழும்பில் தங்கியுள்ளார் என்றும், ஜனாதிபதியை வரவேற்குமாறு எனக்குக் கூறப்பட்டது."– என்றும் அவர் கூறினார்.

"யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஜனாதிபதி மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போது மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்துத் தெரிவித்தனர். ஜனாதிபதி அவர்களுக்குப் பதிலளித்தார்.

அதன்பின்னர் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் குடும்பத்தை ஆளுநர் அலுவலகத்தில் அவர் சந்தித்தார். அவர்களுக்கு ஆறுதல் கூறிய துடன், பல விடயங்களை கேட்டறிந்தார்.

அவர்களுக்கு வீடு ஒன்று வழங்கப்படும் என்றும், ஜனாதிபதி நிதியத்தில் இருந்து ஒரு தொகை உதவிப் பணம் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்." – என்றும் முதலமைச்சர் கூறினார். (ற–5)

### மாணவியின்

இறந்தவர்களை மீட்க முடியாது என்று கூறி ஆறுதல் படுத்திய ஜனாதிபதி, அவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாகக் கூறினார். தேவையான உதவிகளை வடக்கு முதலமைச்சர் ஊடாக விண்ணப்பியுங்கள் என்றும் அவர் தெரிவித்தார். அதன்போது வடக்கு முதலமைச்சரும் கூடவிருந்தருந்தார். (ற–4)

### விசேட

ளித்த ஜனாதிபதி "அந்தப் பிள்ளையை எனது பிள்ளையாகவே பார்க்கின்றேன். இதுபோன்ற சம்பவங்கள் இனி நடக்கக் கூடாது. விசேட நீதிமன்றின் ஊடாக குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படும்."– என்றார்.

வடக்கில் பாடசாலைகளுக்கு அண்மித்த இடங்களில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவது குறித்தும் மாணவர்கள் சுட்டிக்காட்டினர். அதற்குரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

வடக்கில் உள்ள வீதிகள் பல சேதமடைந்துள்ளன என்று கூறிய மாணவர்கள், புங்குடுதீவு மாணவிக்கு இந்த நிலைமை ஏற்படுவதற்கு வீதியில் மழை வெள்ளம் தேங்கி நின்றமையும் ஒரு காரணம் என்று ஜனாதிபதியிடம் கூறினார்கள்.

அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி வடக்கு மாகாண சபையூடாக அதை நிவர்த்தி செய்வதாகக் கூறினார்.

அப்போது கருத்துத் தெரிவித்த வடக்கு முதலமைச்சர், அதற்கான நிதி வளம் தம்மிடம் இல்லை என்பதை எடுத்துக் கூறினார். அது குறித்தும் தான் கவனம் செலுத்துவதாகக் கூறினார் ஜனாதிபதி.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி நேற்று முற்பகல் யாழ். மாநகர சபையின் முன்னைய மைதானத்தில் வந்திறங்கினார். அவரை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் வரவேற்றிருந்தனர். (ற–4)

### இன்று

இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

"அனைத்துப் பாடசாலைகளிலும் இன்று காலைப் பிரார்த்தனையில் மாணவிக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துங்கள். இந்தக் கொடூர சம்பவத்துக்கு எதிராக ஒவ்வொருவரும் தமது கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும்."– என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, மாணவியின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து நாளை வியாழக்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆசிரியர் சேவை சங்கத்தால் ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜெயசிங்க, "பாடசாலை மாணவியின் சாவை சில அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயம் தேடவும், இனவாதத்தைத் தூண்டிவிடவும் பயன்படுத்துகின்றனர். அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது வெட்கக் கேடான செயலாகும்."– என்றார். (ற–5,22)

### ஆட்சி

அறை கூவல் விடுத்துள்ளார்.

மகளிர் அமைப்பு பிரதிநிதிகளுடன் அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"அச்சமும், பீதியும் நிலைகொண்டிருந்த யுகத்தை மாற்றியமைத்தோம். சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காகத் தீவிரவாதிகளுக்கு எதிராகவே நாம் யுத்தம் செய்தோம். தமிழர்களுக்கு எதிராக யுத்தம் நடத்தவில்லை. வடக்கு மக்களின் சுதந்திரத்தையும் கருத்திற்கொண்டே எமது செயற்பாடுகள் அமைந்தன.

குறிப்பாக, எமது அரசில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை எதிர்க்கட்சியினர் சரமாரியாக விமர்சிக்கின்றனர்; கப்பம் பெறப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டினர். கொழும்பு துறைமுக நகரத்திட்டம் பற்றியும் விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால், மோசடி எதுவும் அத்திட்டத்தில் தற்போது இல்லை எனக் கூறுகின்றனர்.

அரசியல் பழிவாங்கல்களே இந்த அரசின் நோக்கமாக இருக்கிறது. வைராக்கியம், குரோதம், பொறாமை ஆகிய தீய எண்ணங்களுடனேயே அரசிலுள்ளவர்கள் செயற்படுகின்றனர். இவர்களிடம் மேற்படி குணங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவே நான் போதி பூஜைகளை நடத்தி வருகின்றேன்.

வாழ்க்கைச்சுமை குறைந்துள்ளதா? இல்லை. பெயர்ப்பலகைகளை மாற்றும் அபிவிருத்தியையே புதிய அரசு முன்னெடுக்கிறது. எனவே, மாற்றமொன்று அவசியம். விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்குத் தயாராகுங்கள்"– என்றார். (ற–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோக்களுக்கு கட்டண நிர்ணயம்

## யாழ். மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27
யாழ்.மாவட்டச் செயலக விலைக் கட்டுப்பாட்டு நிர்ணய சபையால், ஓட்டோக்களுக்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண ஒழுங்குக்கு அமைவயே, ஓட்டோக்கள் பணம் அறவிட வேண்டும். – யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக் கலந்துரையாடலிலேயே, மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.
யாழ்.மாவட்டத்தில் ஓட்டோக்கள் முதலாவது கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும், இரண்டாவது கிலோ மீற்றர் தொடக்கம் பத்தாவது கிலோ மீற்றர் வரையில் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 43 ரூபாவும், பத்தாவது கிலோ மீற்றருக்கு அப்பால் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 34 ரூபாவும் வீதம் அறவிட வேண்டும்.
இவ்வாறு மாவட்ட விலைக் கட்டுப்பாட்டு நிர்ணய சபை தீர்மானித்துள்ளது.
ஆனால் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களில், ஓட்டோக்கள் அதிகமாக கட்டணங்கள் அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அத்துடன் சகல ஓட்டோக்களும், மீற்றர் கட்டாயம் பொருத்த வேண்டும். ஓட்டோ ஓட்டுநர்கள் பொதுவான சீருடை அணிவதுடன், ஆள் அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும்.
மேலும், ஓட்டோக்களுக்கு ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்தில், நிறுத்தப்படும் வண்டிகளில் இலக்கங்கள் அதில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும். இதனை சகல ஓட்டோ சாரதிகளும் செயற்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## முன்பள்ளி விளையாட்டு விழா நாளை

சாவகச்சேரி,மே 27
வரணி நாவற்காடு வாணி முன்பள்ளி சமூகத்தினரின் விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
முன்பள்ளி முகாமைத்துவ குழு தலைவர் திருமதி ந.திருச்செல்வி அவர்களின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்பள்ளி ஸ்தாபகரும், வரணி வடக்கு அ.த.க.பாடசாலை அதிபருமான ந. வசந்தரூபனும் கலந்துகொள்ளவுள்ளனர்.
சிறப்பு விருந்தினராக நாவற்காடு கிராம அலுவலகர் ந.ராஜகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.
கௌரவ விருந்தினராக பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்க தலைவர் ஆ.சாந்தகுமாரும் கலந்துகொள்ளவுள்ளார். (ந-122)

## கணினி அலகு திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், மே 27
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் விழிப்புலனிழந்தோர் நலன் கருதி யாழ். மாநகர சபையின் ஆதரவுடன் யாழ் பொது நூலகத்தில் விழிப்புலனற்றோருக்கான கணினி மயப்படுத்தப்பட்ட அலகு ஒன்று இன்று புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு திறக்கப்படவுள்ளது. யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எஸ்.அற்புத ராஜா திறந்து வைக்கவுள்ளார்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.எஸ்.பிரணவநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-288)

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் புங்குடுதீவு மாணவிக்கு அஞ்சலி

கொழும்பு, மே 27
புங்குடுதீவு மாணவியின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்தும், அஞ்சலி செலுத்துவதற்குமான கூட்டம் நாளை கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. சம்ப தீவக மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 7 மணி வரை நடைபெறவுள்ளது.
நிகழ்வின் ஆரம்பத்தில் மலர் அஞ்சலி செலுத்தத்பட்டு மெழுகுவர்த்திப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பெண்கள் உரிமைகள் காப்பாளர் திருமதி ரெ.நளினி, தகைமைசார் பேராசிரியர் சி.பத்மநாதன், ஐக்கிய சோஷலிஸக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீதுங்கஜயசூரிய, விழுதுகள் அமைப்பு திருமதி ச.சாந்தி, மேல்மாகாண சபை உறுப்பினர் சண்முகவரதன், றோயல் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ந-10)



வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கலை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளை சிலாவத்தை தீர்த்தக்கரைக் கடலில் கடல் நீரில் தீர்த்தம் எடுத்து வரப்பட்டு முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அம்மன் மண்டபத்தில் அந்தக் கடல் நீரில் விளக்கெரிக்கும் அற்புத நிகழ்வு அங்கு இடம்பெற்று வருகின்றது. (ந-102)

## சட்டவிரோத மீன்பிடி: 24 மீனவருக்கு அபராதம்



முல்லைத்தீவு, மே 27
முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரும் முள்ளியவளைப் பொலிஸாரும் இணைந்து நேற்று அதிகாலை 2 மணிமுதல் முற்பகல் 10 மணி வரை நந்திக்கடற்பரப்பில் மேற்கொண்ட நடவடிக்கையில் தடை செய்யப்பட்ட கூட்டு வலை தங்கூசி வலை போன்றவற்றை உபயோகித்து கடற்றொழில் ஈடுபட்ட 24 பேர் கைது செய்யப்பட்டனர்.
இதுகுறித்துக் கூறிய நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெயராசசிங்கம் சுதாகரன், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவித்தார். (ந-102)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலவள திரட்டு விரைவில்

### நடவடிக்கை மேற்கொள்கின்றார் அரச அதிபர் வேதநாயகன்

மானிப்பாய், மே 27
பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக யாழ். மாவட்ட மூலவளத் திரட்டு தயாரிக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் முன்னெடுத்துள்ளார்.
இதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்கள் ரீதியிலான விவரங்களைத் தயார் செய்து அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். மாவட்ட மட்டத்தில் பிரதேச சபைகள், நகர சபைகளின் விவரங்களை உள்ளடக்கி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஊடாக அவற்றைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்.மாவட்டத்தின் சகல விவரங்களையும் உள்ளடக்கிய மூலவளத் திரட்டு உருவாக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-50)

## நள்ளிரவில் வீட்டில் பற்றி எரிந்தது தீ: 15வயதுச் சிறுவன் சாவு: இருவர் காயம்

மன்னார், மே 27
மன்னார் எமிழ் நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஜிம்றோன் நகர் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன், இருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
விபத்தில் படுகாயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அன்ரனி யூட் கெவின் (வயது–15) என்ற சிறுவன் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு குறித்த வீட்டில் தீ விபத்து ஏற்பட்ட போது, வீட்டினுள் தாய் மற்றும் நான்கு பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர்.
அப்போது தீ பெரியளவில் அளவில் பரவியுள்ளது. அதையடுத்து வீட்டில் இருந்தவர்கள் கத்தி கூக்குரலிட அயலவர்கள் விரைந்து வந்து [illegible] விபத்தில் தாய் மற்றும் இரண்டு மகனகளும் காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனைய இரு மகள்களுக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.



இந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களில் அன்ரனி யூட் கெவின் (வயது–15) என்ற சிறுவன் கடும் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நேற்று திங்கட்கிழமை காலை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் குறித்த சிறுவன் சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
தாய் மற்றும் மற்றைய மகன் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-56)

## உட்கட்டமைப்பு வசதிகள் பாடசாலைகளில் இல்லை

### ஜனாதிபதியிடம் மாணவர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 27
தமது பாடசாலைகளில் காணப்படும் ஒரு சில குறைபாடுகள் தொடர்பாக மாணவர்கள் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினர். உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவின்மை, விளையாட்டு மைதான நிர்மாணிப்பு, ஆசிரியர்களின் பற்றாக்குறைகளைப் போன்று, விசேடமாக வவுனியா பாடசாலை மாணவர்கள் எதிர் கொண்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகள், தொடர்பிலும் எடுத்துக் கூறினர்.
ஒரு சில பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி அதே சந்தர்ப்பத்தில் உரிய உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார். எழுத்துமூலம் பல பிரச்சினைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதற்காக தனியான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.
யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரை அறிவுறுத்தி விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என் றும் ஜனாதிபதி கூறினார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன மழையால் பெரும் நட்டம்

## வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் கவலை



வலி.வடக்கு, மே 27

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெருத்த நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பெருமழை காரணமாக பல ஆயிரக்கணக்கான பரப்பில் செய்கை செய்யப்பட்டிருந்த வெங்காயங்கள் அழுகியுள்ளதுடன், பல இடங்களில் முளைவிட்ட நிலையில் காணப்பட்ட வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தால் அள்ளுண்டு சென்றுள்ளன என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறுகியகாலப் பயிர் என்பதால் அவற்றுக்கு காப்புறுதி செய்வதில் அதிக அக்கறை காண்பிக்கவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இழப்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் தமது விவசாய அமைப்புகள் ஊடாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள்.

"சித்திரை மாதத்தில் இவ்வாறு மழை பெய்வதில்லை. ஆனால் இம்முறை வழமைக்கு மாறாகப் பலத்த காற்றுடன் பெரும் மழை பெய்து விட்டது. இதை ஒரு இடராகக் கருத வேண்டும். பாதிக்கப்பட்ட எமக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்."– என்று அவர் கோரியுள்ளனர். (ற–86)



நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரைக் கிராமத்தில் அமைந்துள்ள சிறி விநாயகர் ஆலயத்தின் அன்னதான மடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. மடுக்கரைக் கிராம மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குண சீலன் ஆகியோரின் நிதியுதவியுடன் இந்த மடம் அமைக்கப்படவுள்ளது.

(ற–56)

## அராலி கடல் வளப் பகுதியில் புதிய கடல் தொழில் முதலீடு

மானிப்பாய், மே 27

அராலி கடல் வளப் பிரதேசத்தில் புதிய தொழில் நுணுக்க முறையின் கீழ் இறால், நண்டு என்பவற்றை வளர்ப்பதற்கும், புதிய கடற்றொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன், வலி.மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட அராலி கடல்வளப் பிரதேசத்தின் பெரும்பகுதி உபயோகமற்றுள்ளது. இறால், நண்டு உற்பத்தி தொடர்பான பயிற்சிகளையும், அதற்கான உயிரினங்களையும் பெற்றுக்கொடுத்து வளர்ப்பதன் ஊடாக முதலீட்டு வருவாய்களை மேம்பாடு செய்வதனை அடிப்படையாகக் கொண்டே இந்தத் திட்டம் முன்நகர்த்தப்படவுள்ளது. – என்று கூறினார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:–

இந்தத் திட்டத்தை விரைந்து நடத்துவது தொடர்பில் அராலி கடல் சார் உற்பத்தியாளர்களுடன் முதற் கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. விரைவில் இதன் எதிர் காலத் திட்டம் தொடர்பில் அராலியில் உள்ள அனைத்து கடற்றொழில் உற்பத்தியாளர்களுடன் பேசப்படவுள்ளது.– என்றார்.

இந்தத் திட்டம் படிப்படியாகப் பொன்னாலை, சுழிபுரம் பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–50)

## கார் பற்றரி திருடியவருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மே 27

காரில் இருந்த பற்றரியைத் திருடியவருக்கு ஏழுமாத கால கடூழிய சிறைத் தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தது யாழ். நீதிவான் நீதிமன்றம்.

குறித்த நபர் கடந்த 27ஆம் திகதி கொக்குவில் மேற்கு, பிடாரி அம்மன் கோயில் பகுதியில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்கு வேலைக்குச் சென்றுள்ளார். அப்போது அங்கிருந்த காரின் பற்றரியை அவர் திருடியிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த நபரின் கைவிரல் அடையாள அறிக்கை நீதிமன்றால் பெறப்பட்டது. ஏற்கனவே சந்தேகநபருக்கு முற்குற்றங்கள் காணப்பட்டன. அதனடிப்படையில் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.(ற–103)



போதிய வசதிகள் ஏற்படுத்தப்படாது நெல்லியடி மத்திய பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள், விசேட தேவையுடையோர் போன்ற பல தரப்பினரால் குறித்த பஸ் நிலையம் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் அங்கு பயணிகள் அமர்வதற்கான இருக்கைகள் அமைக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். உரிய தரப்பினர் இவற்றைக் கருத்தில் கொண்டு பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற–422)

## மோ.சைக்கிள்களின் மிகுதிப் பணத்தை உடன் அறவிட்டு அனுப்புமாறு பணிப்பு

தென்மராட்சி, மே 27

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்குரிய மிகுதிப் பணத்தை (50 ஆயிரம் ரூபா) உடனடிய அறவிடுமாறு அரச உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே அறிவித்துள்ளார்.

'திவிநெகும' அபிவிருத்தித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட நிதி மீள வழங்கப்பட வேண்டி உள்ளதாலேயே மிகுதிப் பணத்தை உடனடியாக அறவிட்டு அனுப்பி வைக்குமாறு அவர் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்களிள் வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அதற்கு முற்பணமாக 50 ஆயிரம் ரூபாவையும், மிகுதி 50 ஆயிரம் ரூபாவை 18 தவணைகளில் செலுத்த முடியும் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ற–9)

## வீதியால் சென்றவரை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, மே 27

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தவரை விசப்பாம்பு தீண்டிய சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மறவன்புலோ மத்தியில் நடந்துள்ளது.

கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை வீதியில் பாம்பு தீண்டியது என்று கூறப்படுகின்றது. அதே இடத்தைச் சேர்ந்த வாரி சிவராசா (வயது–52) என்பவரையே பாம்பு தீண்டியுள்ளது.

அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். [illegible]

## எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்காததால் திண்டாட்டம்

### காத்தான்குடி மீனவர்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு, காத்தான்குடி கடற்கரையோரத்தில் இரண்டு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீனவர்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்காதுள்ளதால், அது அழிவடைந்து வருகின்றது என்று அந்தப் பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்காக கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் [illegible] துறை அமைச்சால் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தினூடாக இந்த எரிபொருள் நிரப்பு நிலையம், காத்தான்குடி, ஏத்துக்கால் கடற்கரையில் 2012ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது.

இதன் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்து பல வருடங்களானபோதிலும் இதுவரையில் இயங்காமலுள்ளது [illegible] எரிபொருள் தாங்கிகள் மற்றும் உதிரிபாகங்கள் துருப் [illegible] மீனவர்கள் கூறினர். இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் இந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் றுக்சன் குறூஸ் தெரிவித்தாவது:–

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்காக அப் [illegible] கடல் மீனவர் சங்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்தச் சங்கம் எரிபொருளை அப்பகுதி மீனவர்களுக்கு விநியோகித்தனர். எனினும், கடனுக்கு எரிபொருள் வழங்கியதால் கடனை அறவிடமுடியாமல் போனது. இந்த நிலையில், இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள் [illegible] – என்றார். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைக் கடையில் துப்பாக்கிச் சூடு: நால்வர் காயம்

கொழும்பு, மே 27
கண்டி, கெலி ஓயா பகுதியில் முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசத்தைஅணிந்து கொண்டு அப்பகுதியிலிருந்த நகைக் கடையொன்றில்கொள்ளையடிக்கமுயற்சி செய்த நால்வர் மேற்கொண்ட, துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நால்வரும் கண்டி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## இரத்மலானைத் தொகுதியில் போட்டியிடுவாராம் கோத்தா

கொழும்பு, மே 27
எதிர்வரும் பொதுத் தேர்தலில் இரத்மலானைத் தொகுதியில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளதாக அவருக்கு நெருக்கமான தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது தொடர்பில் நேற்று முன் தினம் மாலை கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
தற்போதைய அரசுக்கு முக்கிய தாக்குதல் நடத்துவதோடு, பிரசார நிறுவனங்களின் ஊடாகவும் சமூக வலைத்தளங்களின் ஊடாகவும் அவரது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலேயே கோத்தபாய போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப் படுவதாகக் கூறப்படுகின்றது.
இதேவேளை, இதற்கு முன்னர் கோட்டைத் தொகுதியில் கோத்தபாய போட்டியிடுவதாக இருந்தது.
இரத்மலானைத் தொகுதியில் மஹிந்த ஆதரவாளர்களில் ஒருவரான ஜீவன் குமாரதுங்க கடந்த காலத்தில் மஹிந்தவுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.
இதனையடுத்தே இரத்மலானைக்கு மகிந்த ஆதரவாளர் ஒருவரைக் களமிறக்கும் நோக்கில் கோத்தபாய தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் பைசர் முஸ்தபா

கொழும்பு, மே 27
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சட்ட விவகாரங்கள் தொடர்பான ஆலோசகராக இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைசர் முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த நியமனம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பைசர் முஸ்தபா, தற்போதைய அரசின் விமானசேவைகள்ராஜாங்கஅமைச்சராகவும் பதவி வகித்து வருகிறார்.
முஸ்தபா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசில் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சராக பணியாற்றினார். முஸ்தபா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு தொகுதி அமைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வித்தியாவின் படுகொலைக்கு நுவரெலியாவில் நேற்று எதிர்ப்பு



கொழும்பு, மே 27
புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதி ஊர்வலமும் ஆத்ம சாந்தி நிகழ்வும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நுவரெலியாவில் நடைபெற்றது.
புனித சவேரியார் கல்லூரிக்கு அருகிலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி, நுவரெலியா பிரதான வீதி ஊடாக லோசன் சுற்றுவட்டத்தை வந்தடைந்ததுடன், அங்கு இரங்கல் உரையும் சர்வமத வழிபாடுகளும் இடம்பெற்றன.
இதற்கான ஏற்பாடுகளை மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர். ராஜாராம் மேற்கொண்டிருந்தார்.
இந்த ஊர்வலத்தில், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான புத்திரசிகாமனி, மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த)

## சமூகசேவை அலுவலர் நேற்று சுட்டுக்கொலை

### மட்டக்களப்பு மண்டூர் பிரதேசத்தில் வீடு புகுந்து ஆயுததாரிகள் கைவரிசை

மட்டக்களப்பு, மே 27
மட்டக்களப்பு மண்டூர் பிரதேசத்தில் நேற்றுக் காலை சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
சுட்டுக்கொல்லப்பட்டவர் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் சமூகசேவை உத்தியோகத்தர் மதி தயான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-
கொல்லப்பட்டவர் சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொண்டதன் காரணமாக வீட்டில் இருந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரிடம் உரையாடியுள்ளனர்.
இதன்போது திடீரென துப்பாக்கி சத்தம் கேட்கவே உயிரிழந்தவரின் மனைவி வெளியே ஓடி வந்து பார்த்தபோது கணவர் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். அவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் உடனடியாக அந்தப் பகுதியில் இருந்து தப்பிச் சென்றதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
மைக்ரோ ரக பிஸ்டல் மூலமே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. தலையில் காயமடைந்த மதி தயான் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்



வழியிலேயே உயிரிழந்துள்ளார்.
சம்பவ இடத்துக்கு சென்ற வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு.பி.ரசிக்க சம்பத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மாவட்ட தடயவியல் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)

## புலிகளை நினைவு கூர்ந்தார் வடமாகாண முதலமைச்சர்

### பொதுபல சேனா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27
தடையுத்தரவு இருக்கும் தருவாயில் கூட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினர் விளக்கேற்றி விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்ததாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்
நேற்று ஞானசார தேரர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுப் பிணையில் விடுதலையாகி வெளியே வந்தபோது அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது நாட்டிலுள்ள நல்லாட்சிக்கு அமையவே நான் நீதிமன்றில் முன்னிலையானேன். ஜப்பான் சென்றிருந்ததால் உரிய நேரத்தில் நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை. எனினும், நல்லாட்சியிலுள்ள சட்டத்தை நாம் மதிக்கின்றோம்.
எனினும், தற்போது வடக்கில் ஒரு சட்டமும், தெற்கில் ஒரு சட்டமும் இருக்கிறது.அமைச்சர் ரிஷாத் பதியூதீன் 100 கணக்கான ஏக்கர் காணிகளை அழித்து வருகிறார். அவருக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
வடக்கில் தடையுத்தரவை மீறி வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் விளக்கேற்றி விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்தனர். இதற்கெதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
எனவே தற்போது வடக்கில் ஒரு சட்டமும், தெற்கில் ஒரு சட்டமும் காணப்படுகிறது. எனினும், இந்த அரசு அனைத்து இடங்களிலும் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரையில் பார்த்துக் கொண்டிருப்போம்-என்றார். (த)

## ஞானசார தேரருக்கு நீதிவான் எச்சரிக்கை

கொழும்பு, மே 27
பொதுபலசேனாஅமைப்பின்பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று கறுவாத்தோட்டப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 10 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அத்துடன் எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி மீண்டும் நீதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் அவருக்கு உத்தரவிட்டிருந்தார்.
கலகொடஅத்தே ஞானசார தேரரின், காவி உடைக்கு மதிப்பளித்தே பிணை வழங்குவதாக கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய கூறி னார். நீதிமன்ற உத்தரவை மதித்து நீதிமன்றில் முன்னிலையாகவேண் டும் எனவும் நீதிபதி ஞானசார தேரரை எச்சரித்தார்.
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அழைத்தமைக்கு எதிப்புத் தெரிவித்து அண்மையில் நீதிமன்ற உத்தரவை மீறி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமைக்காக ஞானசார தேரர் உள்ளிட்டோருக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.
எனினும், உத்தரவிட்ட தினத்தில் ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. இதனால், அவரைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.
ஜப்பான் சென்றிருந்த ஞானசார தேரர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய நிலையில் கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலமொன்றை வழங்கியிருந்தார்.
பின்னர் நேற்றுப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்த ஞானசார தேரர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.
இதன்போதே அவருக்கு நீதிவான் இவ்வாறான அறிவுறுத்தலுடன் பிணை வழங்கியுள்ளார். (த)

## ரணிலிடம் மன்னிப்பு கேட்கவேமாட்டேன்

### வாசுதேவ திட்டவட்டம்



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை தான் திட்டமிட்டுத் திட்டவில்லை. எப்படியிருப்பினும் பிரதமரிடம் நான் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மனதின் தூண்டுதலினால் இப்படியான வார்த்தைகள் வெளியேறின. குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமருக்கு வாலைச் சுருட்டிக்கொள்ள நேரிட்டது. எப்படியிருப்பினும் பிரதமரிடம் தான் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை.
கோத்தபாய மற்றும் பஸில் ராஜபக்ஷ ஜனநாயக அரசியலுக்குப் பொருத்தமற்றவர்கள். எங்களுடைய அவசியம் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவது மாத்திரமே. எப்படியிருப்பினும் நாங்கள் மஹிந்தவுக்கு நடத்தைச் சான்றிதழ் வழங்க மாட்டோம். எங்கள் ஜென்ம எதிரி ஐக்கிய தேசியக் கட்சியே.
பெரும்பான்மை அதிகாரம் அற்ற தற்போதைய அரசை வெளியேற்றிவிட்டு, எதிர்வரும் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் மஹிந்த மைத்திரி இணைந்த அரசு ஒன்று உருவாக வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் செயல் கண்டு பெருமைப் படுவீர்கள் வாகன பயணத்தில் கவனம் தேவை.

**இடபம்:** தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர் பயணம் மேற்கொள்ள வாய்ப்புண்டு. மாணவர்கள், படிப்பில் அக்கறை செலுத்துவர்.

**மிதுனம்:** மனதில் இரக்க சிந்தனை அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். சவாலை வென்று, சாதனைபுரிவீர்கள்.

**கடகம்:** தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். அதிக விலையுள்ள பொருளை, கவனமுடன் பாதுகாக்கவும். பிள்ளைகளின் செயற்பாடு, பெருமையைத் தேடித் தரும்.

**சிங்கம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி நிலை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணவரவை விட, நிர்வாக செலவு அதிகரிக்கும். மின் உபகரணங்களை கவனமுடன் கையாளவும். உறவினர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**துலாம்:** திறமையுடன் செயல்பட்டு, வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் கூடும். விருந்து, விழாவில் கலந்துகொள்வீர்கள். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்க யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் சிறப்பாகச் செயல்பட்டு பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**தனுசு:** யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். அதிக பயன்தராத பொருளை, விலைக்கு வாங்க வேண்டாம். பிள்ளைகளின் செயல் கண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். அதிக விலைமதிப்புள்ள பொருள்களை கவனமுடன் பயன்படுத்தவும். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.

**கும்பம்:** மற்றவர்கள் உங்களை வியப்புடன் பார்க்கிற சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் பணப் பரிவர்த்தனை திருப்தி தரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்கு, சலுகைப் பயன் வந்து சேரும்.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும். பணியாளர்கள், சுதந்திர உணர்வுடன் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உறவினருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

# கூகுளில் புதுசு

கூகுள் நிறுவனம் ஒளிப்படங்களை எடிட் செய்து பயன்படுத்தும் புதிய அப்ளிகேசனை வெளியிட உள்ளது. இது தன்னுடைய சமூக வலைத்தளமான கூகுள் பிளஸ்சில் மட்டுமல்லாது பேஸ்புக், ருவிட்டர் போன்றவற்றிலும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.
ஏற்கனவே கூகுள் பிளஸ் உடன் இணைப்பில் இருக்கும் போட்டோ அப்ளிகேசன் சரிவர பிரபலம் அடையாததால் தற்போது பொது பயன்பாட்டிற்கும் உதவும் வகையில் இந்த புதிய அப்ளிகேசனை வெளியிட உள்ளனர். நாளை இது வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# எனக்கு கூச்சமில்லை

திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கியதும் தனது கூச்ச சுபாவம் மாறிவிட்டதாக சமந்தா தெரிவித்துள்ளார். தெலுங்கு திரை உலகில் கவர்ச்சி காட்டி நடித்து வந்த சமந்தா தற்போது தமிழ் படங்களில் நடிக்க முன்னுரிமை கொடுத்து வருகிறார். தமிழ் படங்களிலும் சமந்தா படுகவர்ச்சியாக நடிக்கத் தொடங்கியுள்ளார்.
சமந்தாவுக்கு நடிக்க வரும் முன்பு ரொம்பவே கூச்ச சுபாவமாம். 4 பேர் சேர்ந்து நின்றால் கூட அந்த இடத்திற்கு செல்ல கூச்சப்படுவாராம். இப்படி அநியாயத்திற்கு கூச்சப்பட்ட சமந்தா படங்களில் நடிக்க வந்தார். நடிகையான பிறகு கூச்சம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய்விட்டதாம்.
பள்ளி நாள்களில் சமந்தாவை நடனமாடுமாறு அவரது ஆசிரியைகள் வலியுறுத்தினார்களாம். ஆனால் பலர் முன்பு ஆட கூச்சமாக இருந்ததால் அவர் நடனமாடவில்லையாம். ஆனால் அந்தக் கூச்சம் எல்லாம் தற்போது இல்லை என்கிறார் சமந்தா.


# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ஹீரோவில சின்ன ஹீரோ பெரிய ஹீரோ இருக்கலாம்.
ஜீரோவில சின்ன ஜிரோ பெரிய ஜிரோ இருக்க முடியுமா?

கையால் போட்டால் கையெழுத்து
காலால் போட்டால் காலெழுத்தா?

கைவெட்டு என்றால்
கைதுண்டாகும்
கால்வெட்டு என்றால்
கால்துண்டாகும்
மின்வெட்டு என்றால்
மின்சாரம் துண்டாகுமா?

# புதுமைப் பேனா



அமெரிக்காவின் போர்ட்லாண்ட் நகரத்தை சேர்ந்த ஜெசிகா ஷஜுன் என்பவர் புதுமையான பேனா ஒன்றை வடிவமைத்துள்ளார். வழக்கமான மைப் பேனாக்களில் இருந்து முற்றிலும் புதுமையை உருவாக்குவதற்காக அதில் சில மாற்றங்களை முயற்சித்துப் பார்த்தார்.
மை மட்டுமல்லாது எந்த விதமான திரவம் அல்லது சாயத்தைக் கொண்டும் எழுதும் வகையில் பேனாவை வடிவமைத்து முடித்தார். உதாரணமாக இதில் குடிக்கும் தேநீரைக்கூட ஊற்றி எழுதலாம், வரையலாம். மதுபானங்களையும் பயன்படுத்தலாம்.
பேனா முனைக்கு, ரப்பரை பயன்படுத்தி இருப்பதால் எந்தவித சாயத்திலும் தடையின்றி எழுதுகிறது. விங்க்பேனா எனப்படும் இதை கிக்ஸ்டார்டர் நிறுவனம் சந்தைக்கு கொண்டு வர உள்ளது.

# பாஸாகிட்டாங்க



தமிழில் சொல்லிக் கொள்ளும் படியாக முன்னணி நடிகைகளுள் ஒருவராக இருப்பவர் லட்சுமி மேனன். அவர் இந்தியாவில் நடைபெற்ற பிளஸ்டூ பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.
தேர்ச்சி குறித்து அவரது பேஸ்புக்கில் அவரது ஆசிரியர் மற்றும் குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவித்துள்ளார். தற்போது லட்சுமி மேனன் அஜித் நடித்து வரும் படத்தில் அவருக்கு தங்கையாக நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியக் கல்வி நூல் நாளை சாவகச்சேரியில் வெளியீடு

தென்மராட்சி,மே 27

தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் சமய பாடத்தினூடாக விழுமியங்களை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மனதில் நிலை நிறுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விழுமியக் கல்வி நூலை மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலில் தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வேள்ட்விஷன் நிறுவன அனுசரணையுடன் ஆக்கப்பட்ட விழுமியக் கல்வி நூல் கடந்த வருடம் வெளியிடப்பட்டு வலயப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா இந்த நூலை மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் வேள்ட் விஷன் நிறுவனத்தினர் 5000 பிரதிகளை மறுபதிப்புச் செய்து வழங்கியுள்ளனர்.

இந்த நூல்கள் ஏனைய கல்வி வலயங்களுக்கு வழங்கும் வெளியீட்டு நிகழ்வே நடத்தப்படவுள்ளது. மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வேள்ட் விஷன் லங்கா நிறுவன தேசிய பணிப்பாளர் சுரேஸ் வட்லெட் ஆகியோரும், கௌரவ விருந்தினராக ஒலிம்பியன் கலாநிதி என்.எதிர்வீரசிங்கம், வேள்ட் விஷன் நிறுவன வெளிக்களச் செயற்பாட்டு வலய முகாமையாளர் ஜே.ஏ.ரமேஸ்குமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள இரு பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட இலத்திரனியல் கற்கை முறைகளைக் கற்ற மாணவர்களால் சுயமாக உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்படவுள்ளன. அத்துடன் கணினி வன்பொருள் குழுவுக்கான சான்றிதழ் வழங்கல், மடிக் கணினிகள் வழங்கல், இலத்திரனியல் கற்கை நெறியை மேற்கொண்ட குழுவைக் கௌரவித்தல் போன்றவையும் இடம்பெறும். (த-9)


## நல்லூர் பிரதேசசபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி நல்லூர் பிரதேசசபையினால் கோரப்படுகின்றது. இவ்வேலைக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி, படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 27.05.2015 தொடக்கம் 09.06.2015 பி.ப 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 10.06.2015 மு.ப10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 10.06.2015 பி.ப 3.00 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருமைப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | திருநெல்வேலிச் சந்தை நுழைவாயில் கதவு அமைத்தல். | 3000.00 | 1000.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை
ப.வசந்தகுமர் கொக்குவில்.
தவிசாளர்.

(சி.16173) (45.6.3)



## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2014/2015

**நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்/நடனம்/ நாடகமும் அரங்கியலும்/கட்புல, தொழில்நுட்பக் கலைகள்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை**

விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்கை நெறிகளை தெரிவுசெய்த பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதிவு செய்வதற்கான தகைமைகள்**

ஓகஸ்ட், 2014 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 3.2 பிரிவைப் பார்க்கவும்) அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**பரீட்சை மொழி**

செய்முறைத் திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடத்தப்படும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 8.1.8 பிரிவைப் பார்க்கவும்)

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா. 300/- செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டும். இக்கொடுப்பனவை "சிரேஷ்ட உதவி நிதியாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயருக்கு வங்கிக் கணக்கிலக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி, மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பப்படத் தேவையில்லை.

பரீட்சார்த்திகள் சுய விலாசம் இடப்பட்ட ரூபா 30/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை (23x10 செ.மீ) யினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்கடித உறை அனுமதி அட்டை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட இருப்பதனால் சரியான அஞ்சல் முகவரி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்திலும் கல்விச்சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரே நபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதியில் மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில், **"சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு** என்ற முகவரிக்கு **12.06.2015 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.** கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செய்முறைத்திறன்காண் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

செய்முறைத் திறன்காண் பரீட்சை தொடர்பான விவரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.esn.ac.lk) பார்வையிடவும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்யவும் முடியும். இது தொடர்பில் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர்**
**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
கல்லடி, மட்டக்களப்பு

**SWAMI VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES,**
**EASTERN UNIVERSITY, SRILANKA.**
**APPLICATION FOR UNIVERSITY ADMISSIONS- 2014/2015**
**Admission for BFA (Carnatic Music/Dance/Drama & Theatre/Visual &Technological Arts) Degree Programmes**

01. Name of the Applicant:
(With Initials)
Name Denoted by Initials:
National Identity Card Number:
02. Permanent Address:
Telephone Number:
Fax No: (if available)
E-Mail Address (if available)
03. Result of the G.C.E (Advanced Level) Examination:
Index Number:
Z Score:
General Aptitude Test Marks:

| No | Subjects | Grade | Medium |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

04. Name and Address of Parent/Guardian:
05. Course of Study Applied for University Admission – 2014/2015:

| | |
|---|---|
| Music | |
| Dance | |
| Drama & Theatre | |
| Visual & Technological Arts | |

06. Documents to be attached (**Please tick the appropriate column**)

1. Paying-in Voucher
2. Certified Copy of G.C.E (A/L) Certificate/s
3. Certified Copy of G.C.E (O/L) Certificate/s
4. Certificate in Proof of Eligibility for University Admission Including Z Score/District
5. Affidavit in support of any change in names appearing in different Documents/Certificates

I certify that the above particulars furnished by me are true and accurate.

............................ ............................
Date Signature of Applicant


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சான் வியாபாரியின் கொட்டகை அழிப்பு

## ஆலயத்தில் விஷமிகள் கைவரிசை

கச்சான் விற்பனை செய்வதற்காக அனுமதி பெற்று ஆலய வீதியில் அமைக்கப்பட்ட கொட்டகை விஷமிகளால் இரவோடிரவாகப் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

இது குறித்து மனவேதனைக்குள்ளான கச்சான் வியாபாரி இந்த அடாவடித்தனத்தினால் ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளார். சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திருவிழாவை முன்னிட்டு கச்சான் வியாபாரி ஒருவர் அனுமதி பெற்று வடக்கு வீதியின் ஓரமாக ஆயிரம் ரூபா செலவில் கொட்டகை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார். அமைக்கப்பட்ட இந்தக் கொட்டகை எவரும் இல்லாத சமயம் பார்த்து அன்றிரவே விஷமிகளால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. விஷமிகளின் இந்தச் செயல் குறித்து மனவேதனை அடைந்த வியாபாரி, இதனால் தனக்கு ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்ததுடன் எந்த நோக்கத்துடன் அனுமதி வழங்கப்பட்டதீ என்று கேள்வியும் எழுப்பியுள்ளார். இதேவேளை, தெற்கு வீதியில் பல இனிப்பு; கச்சான் வியாபாரிகள் கொட்டகை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-115)

# போதனா வைத்தியசாலையின் உணவகத்தில் சுகாதாரக் கேடு

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.போதனா வைத்தியசாலையின் உணவகத்தில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும், உணவகத்துக்குப் பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்துக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


யாழ்.போதனா வைத்தியசாலையின் அடிப்படைத்தேவைகளில் ஒன்றான சிற்றுண்டிச்சாலைக்கு பொருத்தமான இடத்தைச் சுகாதாரத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்படுத்திக் கொடுக்கவும், யாழ். போதனா வைத்தியசாலையின் உணவகத்துக்கான உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குப் பக்கசார்பின்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஏற்கனவே நீதிமன்றினால் கடந்த மார்ச் 23 ஆம் திகதி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 19ஆம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிமன்றினால் விதிக்கப்பட்ட கட்டளைக்கு அமைய சுகாதார அமைச்சின் செயலாளரினால் எந்த வித அறிக்கைகளும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

ஏற்கனவே போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கும் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருந்த போதும் அவரும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என நீதிமன்றம் தெரிவித்தது.

தொடர்ந்தும் சிற்றுண்டிச்சாலையில் சுகாதாரக் குறைபாடுகள் நிலவுவதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து நீதிமன்றம் சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்துக்கு இவ்விடயம் தொடர்பாக தீர்வைக் காணுமாறு பணித்துள்ளது. (த-103)

# மரண அறிவித்தல்



### விநாசித்தம்பி ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி ஆறுமுகம் நேற்று (26.05.2015) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், விஜயராசா, கிருஷ்ணராசா, நகுலேஸ்வரி, ஜெயராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசிறிதரன், சிவப்பிரியா ஆகியோரின் மாமனும், ராகுலன், ரஜீவன், சோபிகா, சாருஜன், கபின்ஷன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2015) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம், (சி.16171) (45.3.7)

தகவல்:
ஆ.ஜெயராசா (மகன்)

# மரண அறிவித்தல்

### வைத்தியகலாநிதி S.A இராஜதுரை

(லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர்)



தோற்றம் 05.05.1939 — மறைவு 24.05.2015

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், இல11 இராமலிங்கம் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா இராஜதுரை 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - தங்கம் தம்பதியர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசாமி - சுபத்திரை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜகுலேஸ்வரி(டென்மார்க்), வேதவல்லி(பிரான்ஸ்), நகுலேஸ்வரன்(இலங்கை), வேதநந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகநாதன் (டென்மார்க்), சிவகுமார் (பிரான்ஸ்), நந்தகுமரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்(மறவன்புலோ சகலகலா வித்தியசாலை முன்னாள் அதிபர்) கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகராசா, தர்மலிங்கம், பரமேஸ்வரி, சண்முகலிங்கம் (மேஜர்சண்), நடேசலிங்கம் மற்றும் மகேந்திரநாதன்(இந்தியா), சற்குணமூர்த்தி (மணிக்குரல் விளம்பரசேவை உரிமையாளர்), புவனேஸ்வரி(இந்தியா), கணேசலிங்கம்(டென்மார்க்), சர்வேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், தியாகராசா, பாலச்சந்திரன், பரமேஸ்வரி, சரோஜினிதேவி, ஆசாதேவா, லீலாவதி, ருக்மணி, பத்மாவதி ஆகியோரின் நேசமிகு சகலனும், டெனிற்றா, சரணிற்றா (டென்மார்க்), லவன் - வராகி, திலீப்குமார், தினேஷ்குமார், விதுஷ்குமார், ரிதிஷ்குமார் (பிரான்ஸ்), சுவன்சங்கித், சனத்சங்கித், நிதுஷா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2015) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பயனாளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.11, இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி. (41152)(9.3.8)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# சிதம்பரநாதக் குருக்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்

## இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 27

திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் கலாபூஷணம் சி.சிதம்பரநாதக் குருக்களின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்து மக்களின் வாழ்வின் அடிப்படை அம்சமாகக் கருதப்படுகின்ற பஞ்சாங்கங்களில் ஒன்றான திருக்கணித பங்சாங்கத்தை பல்லாண்டுகளாக வெளியிட்டு இந்து மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற குருக்கள் ஐயா வேத ஆகம மற்றும் சோதிட அறிவை இலங்கை சைவ உலகுக்கு வழங்கவேண்டும் எனும் பெரு விருப்புடன் செயற்பட்டவர்.

இவ்வாறு திருக்கணித பங்சாங்கக் கணிதரான சிதம்பரநாதக்குருக்களின் மறைவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குருக்கள் அவர்கள் சரசாலை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தின் பூசகராக கிரியைப் பணிகளை மேற்கொண்டவர். 1970ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சோதிடத் துறையில் ஈடுபட்டு தமது இறுதிக் காலம்வரை திருக்கணித பஞ்சாங்கத்தைக் கணித்துத் தொகுத்து வெளியிடும் பணியை மேற்கொண்டார்.

குருக்கள் அவர்கள் அந்தணர்க்கே உரிய அற ஒழுக்கத்தோடு வாழ்ந்ததோடு முக்கியமான பல ஆலயங்களின் கும்பாபிஷேகங்களுக்கு பிரதிஷ்டா குருவாக இருந்து கைங்கரியங்களை நிறைவேற்றியுள்ளார்.

தாம்பெற்ற அறிவும், அனுபவமும், இன்பமும் பலரும் பெற வேண்டும் எனும் நன்னோக்கத்தோடு ஸ்நபன மஞ்சரி, சோதிடம் கற்போம், திருமணப் பொருத்தம், சோதிட மலர் போன்ற நூல்களை வெளியிட்டு, இந்து மக்களுக்கு ஆகம கிரியை விளக்கங்களை வழங்கியதோடு சோதிட அறிவையும் தெளிவுபடுத்தினார். ஆர்வம் உள்ள இந்து இளைஞர்கள் பலர் ஸ்ரீ லலிதா சகஸ்ர நாமத்தை மனனம் செய்து பாராயணம் செய்கின்ற ஒரு மரபையும் ஏற்படுத்தினார்.

அன்னாரின் அறிவு மற்றும் புலமை கருதி சைவத்தமிழ் அமைப்புக்கள் பலவும் கௌரவப் பட்டங்களை வழங்கி அவரைப் பாராட்டியுள்ளன. இலங்கை அரசு வழங்கிய கலாபூஷணம் எனும் விருதும் லண்டன் சைவதிருக் கோயில் சபை வழங்கிய வேதாகம வித்தகர் என்ற பட்டமும் அவற்றுள் பிரதானமானவையாகும்.

இலங்கையின் மூத்த ஒரு சோதிடக் கலைஞராக, கிரியைகளை மேற்கொள்ளும் அந்தண சிரேஷ்டராக துயருறுகின்ற மக்கள் மனதுக்கு ஆறுதல் கூறும் மென்மையான வார்த்தைகளை தருபவராக தமது வாழ்நாளை இந்து மக்களின் மேம்பாட்டுக்காகவே அர்ப்பணித்த குருக்கள் ஐயாவின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய பெரியோரின் பணிகள் என்றென்றும் விதந்து போற்றப்படும். அவர்தம் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எல்லாம் வல்ல இறைவன் திருவடியில் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்-என்றுள்ளது. (த)

# பஞ்சாங்க மேதையின் மறைவுக்கு இந்து சமயப் பேரவை இரங்கல்

யாழ்ப்பாணம், மே 27

திருக்கணித பஞ்சாங்கமேதை கலாபூஷணம் சி.சிதம்பரநாதக்குருக்களின் மறைவு பேரிழப்பாகும் என இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல ஆலயங்களின் பிரதம குருவாக இருந்து தென்மராட்சியில் பல நித்திய நைமித்திய கிரியைகளை சிறப்பாக நடத்தியவர். இந்து மக்களிடையே விரதங்கள், சமய விழாக்கள் பற்றிய சர்ச்சைகள் எழுந்தபோதெல்லாம் தமது திருக்கணித கணிப்பீட்டின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியவர். சந்தேகங்களைத் தீர்த்தவர். சோதிட பூஷணமாகத் திகழ்ந்த ஐயா பல சந்தர்ப்பங்களில் எழுந்த பிரச்சினை களுக்கெல்லாம் நியாயமான ஆதாரங்களையும் உதாரணங்களையும் எடுத்துக்காட்டி பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார். இவரது இழப்பினால் இந்து மக்கள் ஒரு சமயத்தலைவரை இழந்துவிட்டனர். எம்மோடு இணைந்துசெயற்பட்ட கலாபூஷணம்சி.சிதம்பரநாதக் குருக்களின் மறைவுக்கு எமது இரங்கல் செய்தியை இந்து மக்கள் சார்பாக வெளியிடுகின்றோம்-என்றுள்ளது. (த)

# மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கல்

அச்சுவேலி, மே 27

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் மற்றும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிற்சர்லாந்தில் ஜூன் 20 இல் சிவராம் நினைவு விருது விழா

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சுவிஸ் கிளை, சுவிற்சர்லாந்து சிவராம் நினைவுப் பணி மன்றத்துடன் இணைந்து ஊடகர்களுக்கான விருது விழா ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

அமரர் மாமனிதர் சிவராம் அவர்களின் பத்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு சிவராம் நினைவு விருது விழா என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுவிஸ் தலைநகர் பேர்ணில் நடைபெறும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் ஊடகக் குழுமத்தின் தலைவருமான ஈ. சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அமரர் சிவராமின் பாரியார் யோகரஞ்சினி சிவராம் கலந்து கொள்வார்.

விருது விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார். எழுத்து, வானொலி மற்றும் காணொலித் துறைகளில் சாதனை படைத்த 9 பேர் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவர். சிறப்பு விருதுகளை ஊடகச் சாதனையாளர்களான எஸ். திருச்செல்வம், ஈ.கே. ராஜகோபால், ஞா. குகநாதன், பி. விக்னேஸ்வரன், விமல் சொக்கநாதன், வி.என். மதியழகன், இளையபாரதி, இளையதம்பி தயானந்தா, பூபாலரத்தினம் சீவகன் ஆகியோர் பெற்றுக் கொள்வர்.

சமூகத்திற்கும், தேசியத்துக்கும் உழைத்த ஊடகவியலாளர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்விலே சகோதர மொழி ஊடகவியலாளர்கள் மூவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர். தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகவும், அரசியல் உரிமைகளுக்காகவும் அயராது உழைக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களான சுனந்த தேஷப்பிரிய, பாஷண அபேவர்த்தன மற்றும் சந்தன கீர்த்தி பண்டார ஆகியோர் இந்தக் கௌரவத்தைப் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## வலி.தென்மேற்கு அபிவிருத்திக்கு சித்தார்த்தன் ரூபா 3லட்சம் ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு, மே 27

வலி.தென்மேற்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ள வடமாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் 2015 ஆம் ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து நான்கு பொது அமைப்புக்களுக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். வடலியடைப்பு பண்டத்தரிப்பு கலைவாணி சனசமூக நிலையத் திறந்த வெளி அரங்கு புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும், நவாலி அட்டகிரி முருகன் கோயில் குடிதண்ணீர் பொதுக் கிணறு புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், உயரப்புலம் ஆனைக்கோட்டை பாரதி சனசமூக நிலையம் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், காக்கைதீவு மீன்பிடித் துறைமுகத்துக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார். மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் பண்டத்தரிப்பு வேளாங்கண்ணி சனசமூக நிலைய புனரமைப்பு வேலைக்கு 50 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளார். (த-115)

70 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
70
27.05.2015
Wish is you a Happy Birthday

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த
வல்லிபுரம் விக்கினேஸ்வரன்
தனது 70 ஆவது பிறந்தநாளை
இன்று (27.05.2015)
புதன்கிழமை தவது இல்லத்தில்
கொண்டாடுகின்றார். இவரை மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரன்மார்,
பேர்த்திமார் வாழ்க வாழ்க வென
வாழ்த்துகின்றார்கள்.
வாழ்த்துவோர் : குடும்பத்தினர்.
(60179)(45.63)

ஓம்

சுதுமலை
அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்
புதிய சித்திர திருமஞ்சம்
வெள்ளோட்ட பெருவிழா
மன்மத வருடம் வைகாசி மாதம் 13ம் நாள் (27-05-2015)
புதன்கிழமை மாலை 3.30 மணி ஆரம்பம்
திருமஞ்சம் உருவாக்கம்
திருநெல்வேலி விநாயகர் சிற்பாலயம்
"தேவரத சிற்பமணி", "சிற்பஜோதி", "கலாபூஷணம்"
ச. இராசரத்தினம் (ஆச்சாரி) அவர்கள்
அம்பிகை அடியார்கள் அனைவரும் வருக!
அம்பாளின் திருவருள் பெறுக!
இங்ஙனம்
12ம் திருவிழா உபயகாரர்கள்

**பணிப்பெண் தேவை**
வெள்ளவத்தையில் இரு குழந்தைகளை கொண்ட கௌரவமான குடும்பத்திற்கு தங்கியிருந்து வேலை செய்ய ஆள் தேவை
Call : 0779350833

**வாடகைக்குண்டு**
கே.கே .எஸ். வீதி, தாவடியில் சகல வசதிகளுடன் வீட்டின் ஒரு பகுதி (ANNEX) வாடகைக்கு. சிறிய குடும்பத்திற்கு ஏற்றது.
(60200) (3.5.6) தொடர்பு: 077 242 5509

**வீடு தேவை**
உரும்பிராய், கோண்டாவில் பகுதிகளில் வீடு விலைக்குத் தேவை. வாடகைக்கும் இன்னொரு வீடு தேவை.
(60252) (3.6.5) தொடர்பு: 077 241 0795

**தவறிவிட்டது**
ச.லக்ஷன் என்பவரது நியமனக் கடிதம், சான்றிதழ்கள், கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறியுள்ளன. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வ்ழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0773241755

**வீடு வாடகைக்கு உண்டு**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகில் 4200 சதுர அடி கொண்ட புதுவீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், அரச அலுவலகங்களுக்கும் ஏற்றதும் விரும்பத்தக்கதும்.
வாகனத்தரிப்பிட வசதி உண்டு.
(60192) (9.3) தொடர்பு: 077 668 1547

**வாடகைக்குத் தேவை**
யாழ் நகரிலிருந்து 2km சுற்றாடலுக்குள் கடையும், வீடும் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 639 1344
(60160)(3.5)

**தவறிவிட்டது**
K.பூபாலபிள்ளை என்பவர் மருந்து எடுக்கும் யாழ் போதனா வைத்தியசாலை கிளினிக் கொப்பியை 25.05.2015 திங்கட்கிழமை மாலை சுதுமலையிலிருந்து மானிப்பாய்க்கு ஓட்டோவில் செல்லும்போது தவறவிட்டு விட்டார். ஒரு பச்சைப்பையுடன், பையில் பணம் இல்லை. கண்டு எடுத்தவர்கள் தந்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.
(60191) (9.3) தொடர்பு: 077 808 9602

STUDY IN INDIA / இந்தியாவில் உயர்கல்வி
ENGINEERING DEGREES
இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள பிரபல பொறியியல் கல்லூரியான EXCEL ENGINEERING COLLEGE யில் சேர்ந்து உலகளாவியரீதியில் புகழ்பெற்ற ANNA UNIVERSITY யின் ENGINEER ஆகுவதற்கான அரிய வாய்ப்பு.
- Aeronautical Engineering
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics & Communication Eng.
- Mechanical Engineering
- B.Tech - Information Technology
முதல் 5 விண்ணப்பதாரிகளுக்கும் 50% SCHOLARSHIP
தேவையான தகமை • GCE A/L Pass in Maths, Chemistry and • Psychics + GCE O/L Credit Pass in English.
O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு வருட FOUNDATION COURSE ஐ முடித்து, பின் ENGINEERING DEGREE ஐ தொடரமுடியும் (A/L தேவையில்லை).
மேற்கூறிய ANNA UNIVERSITY ENGINEERING DEGREE இலங்கை UGC இனால் அங்கீகரிக்கப்பட்டதுடன் ENGINEERING DEGREEயைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் CANADA, AUSTRALIA, NEW ZEALAND, UK ஆகிய நாடுகளில் PERMANENT RESIDENCE (PR) பெற வாய்ப்புள்ளது.
Excel Engineering College
NH 47, Salem Main Rd, Komarapalayam - 637 303
Namakkal Dt, Tamil Nadu, INDIA
www.excelinstitutions.com
Call : (தமிழில்) 0777 - 767 818
scholinfo@yahoo.com

ஓம் சக்தி ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள
பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.


* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.
* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)
றோயல் மெடிக்கல் சென்ரர்
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரிலும் ஆரம்பமாகின்றது
நீங்களும் இரண்டு வருடத்தில் முகாமைத்துவ கணக்காளராகுவதுடன் மாதாந்தம் 150000/= மேல் சம்பாதியுங்கள்
Institute of Certified Management Accountants of Sri Lanka.
CMA
Certified Management Accountants
அடிப்படைத் தகைமை A/L இல் ஏதாவது ஒரு பிரிவில் இரண்டு பாடச் சித்தி
தமிழ்/ஆங்கில மொழிமூலம்
MBA ← CMA ← A/L
விண்ணப்பத்திற்கும், பதிவுகளுக்கும்
0777-596148, 077-8927639
இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம்
29/24, Visakha Rd, Colombo-04.
Accredited Centre & Implement Partnar
BRITISH COLLEGE
23, Kachcharinallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
585, Peradeniya Rd, Kandy.
20, Galle Rd, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் வெற்றிடம் நிரப்பப்படும்

வலி.தென்மேற்கு, மே 27
வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் பல மாதங்களாக வெற்றிடமாக இருக்கும் உறுப்பினர் பதவி மிக விரைவாக நிரப்பப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கடந்த தேர்தலின்போது வேட்பாளர் பட்டியலில் 13ஆவதாகத் தெரிவு செய்யப்பட்ட எம்.கந்தசாமியை நியமிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வடபகுதியிலுள்ள 134 உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 31 திகதியுடன் முடிவடைகிறது. இதுபற்றி அறிவித்துள்ள அரசு எக்காரணம் கொண்டும் பிரதேச சபைகளின் ஆயுள்காலம் நீடிக்கப்படாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் ஒரு உறுப்பினர் பதவி பல மாதங்களாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளது. பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தவிசாளராக நியமிக்கப்பட்ட அ.ஜெபநேசன் உறுப்பினர் மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக தவிசாளர் பதவியிலிருந்து விலகினார். இதையடுத்து வாக்குகளின் அடிப்படையில் இரண்டாவதாகத் தெரிவு செய்யப்பட்டு உபதவிசாளராக தெரிவு செய்யப்பட்ட எஸ்.சிவகுமார் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

பல மாதங்களாக தவிசாளராகக் கடமையாற்றி வந்த சிவகுமார் சுகவீனம் காரணமாக ஆறு மாதங்களுக்கு முன் காலமானார். வாக்குகளின் அடிப்படையில் மூன்றாவது நான்காவதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆ.சி.கணேஷவேல், எஸ்.சுப்பிரமணியம் ஆகிய உறுப்பினர்கள் இருந்தபோதிலும், ஐந்தாவதாகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.மகேந்திரன் உபதவிசாளராக கட்சியினால் நியமிக்கப்பட்டார்.

பிரதேச சபையின் ஆயுள்காலம் ஜூலை 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில் காலியாகவிருக்கும் உறுப்பினர் பதவியை நிரப்ப முன்வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வேட்பாளர் பட்டியலில் 13 ஆவதாகத் தெரிவு செய்யப்பட்ட எம். கந்தசாமியை நியமிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

16 உறுப்பினர்களைக்கொண்ட இந்தப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் ஐ.ம.சு.முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவுறுத்தலுக்கமைய உதவித் தேர்தல் ஆணையாளரினால் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கே.கௌரிகாந்தன் தன்னைக் கட்சியிலிருந்து நீக்கியதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-115)




## இறை அஞ்சலி

வேதாகம சோதிட பூஷணம், கலாபூஷணம்

**சி.சிதம்பரநாதக் குருக்கள்**

24.05.2015 இல் சிவானந்தபேற்றினை அடைந்த குருக்கள் அவர்களின் ஆன்மா தில்லைக் கூத்தன் பாதகமலங்களில் நித்தியபேற்றையடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி, அறங்காவலர், நிர்வாகசபை உறுப்பினர்கள்,
மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி

(60251)
(10.6.3)

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அருளம்பலம் முத்துராஜா

[முன்னாள் உபதபாலதிபர் தொண்டமானாறு]



தோற்றம்
03★04★1930

மறைவு
27★05★1987

ஆண்டுகள் இருபத்தெட்டைக் கடந்தாலும் ஆறுமோ எமது மனம்
இவ்வுலகில் எப்போ உங்கள் இனியமுகத்தைக்
காண்போம் இனி!

"முத்து வாசா"
கெருடாவில், தொண்டமானாறு.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேர்த்தி.

(59722)(45.6.3)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
03.08.1956

உதிர்வு
07.06.2014



அமரர்
இராசையா இரவீந்திரன்
(ரவி)

அன்பு அப்பாவே!
குறைவில்லாது எமை வளர்த்த
பாசத்தின் பிறப்பிடமே
அன்பின் உறைவிடமே
நிறைவான வாழ்வின் வழிகாட்டி நீங்கள்
எம் இன்பமான வாழ்வுக்கு உழைத்தவர் நீங்கள்
நிகரில்லா நண்பர்களால் நிறைந்தவர் நீங்கள்
அன்பான பேச்சால் அரவணைத்தவர் நீங்கள்
எத்தனை காலங்கள் கடந்து சென்றாலும்
ஒவ்வொரு நொடிகளிலும் உங்கள்
நினைவுதான்
எம் இதயத்தின் துடிப்பாக நீங்கள்
உங்கள் காலடித்தடங்கள் வழிகாட்டும்...
எம் வாழ்வின் தெய்வமாய்
என்றென்றும் நீங்கள்
காலங்கள் உருண்டோடினாலும்
நேசமும் பாசமும் என்றும் நினைவாகும்
என்றென்றும் உங்கள் கால்தடம் வழிகாட்டும்
ஈடற்ற உம் இழப்பு ஆறாது எம் நெஞ்சமதில்

கே.கே.எஸ். வீதி,
தோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


# நவாலி வடக்கு வீதியின் நிலையோ படுமோசம்

வலி.தென்மேற்கு, மே 27
வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி வடக்குதலுவில் வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

சுமார் 40 வருடங்களுக்கு மேல் இந்த வீதி மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வலி.தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உரித்தான பிப்பிலி வீதியையும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான சங்கரத்தை–வட்டுக்கோட்டை வீதியையும் இணைக்கும் வீதியாக நவாலி வடக்கு தலுவில் வீதி உள்ளது.

விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைவிரிவுரையாளர்கள், அரச அதிகாரிகள் என தினமும் 800 முதல் 1200 க்கும் மேற்பட்டோர் இந்த தலுவில் வீதியை முழுமையாகப் பயன்படுத்துகின்றனர்.

இதனைப் புனரமைக்குமாறு பிரதேச சபையிடம் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்து மக்கள் பங்கேற்புத் திட்டத்திலும் இது முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இனிமேலாவது வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர், மக்கள் பயன்படுத்தும் முக்கிய வீதிககு முன்னுரிமை வழங்கி உதவ வேண்டும் என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(த-50)

## ஞானாசிரியர் கல்லூரி அமுதவிழா கட்டுரைப் போட்டி முடிவுகள்

கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி அமுத விழாவை முன்னிட்டு உதயன் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:–
முதலாம் இடம்– செங்கதிர்ச் செல்வன் சேந்தன் (யாழ். இந்துக் கல்லூரி)
இரண்டாம் இடம்– ராஜ்குமார் யுவரூபன் (இணுவில் மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம்–சில்வெஸ்டர் சுகிர்தா (இராமநாதன் கல்லூரி)
ஆறுதல் பரிசு பெறுவோர்–
சு.சுகப்பிரதா (மகாஜனக் கல்லூரி), ச.சயந்தினி (திரு இருதயக் கல்லூரி), ச.விமலா (இராமநாதன் கல்லூரி), பே.பவித்திரா (திரு இருதயக் கல்லூரி), த.துளசிகா (இணுவில் மத்திய கல்லூரி).

பரிசளிப்பு நிகழ்வு இன்று (27.05.2015) காலை 8.30 மணியளவில் இடம்பெறும் என பாடசாலை அதிபர் பி.செல்வவிநாயகம் அறிவித்துள்ளார்.

(அ)

## புகைத்தல் தினத்தையொட்டி சாவகச்சேரியில் விழிப்புணர்வு

தென்மராட்சி, மே 27
உலகப் புகைத்தல் தினத்தையொட்டிச் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நேற்று முன்தினம் தொடக்கம் விழிப்புணர்வுச் செயற்பாட்டு நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலைகள் மற்றும் இளைஞர் கழகங்கள் ஆகியவற்றில் பொது சுகாதார பரிசோதகர் புகைத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டிச் சுகாதார அமைச்சினால் மே 25 தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பொதுமக்களிடையே புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துமாறு விடுக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் செயலமர்வுகள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

## வருடாந்த திருவிழா

குருநகர், மே 27
குருநகர் புதிய கடற்கரை வீதியின் அருகாமையில், சின்ன ஜெற்றிக்கு அருகில் அமைந்துள்ள குருநகர் வேளாங்கண்ணி அன்னை சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஜீன் முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-51)


## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம் வேதாகம சோதிடபூஷணம்,
சிவாகம பூஷணம், வேதாகம வித்தகர்

அமரர் **சி.சிதம்பரநாதக் குருக்கள்**

(இந்து சமய ஒன்றிய பிரதம தலைவரும், திருக்கணித பஞ்சாங்க கணிதரும், சோதிடரும்)

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பரிபாலகர்
வீரபத்திரர் கோவில்
மீசாலை கிழக்கு, மீசாலை

18.12.1935 24.05.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்













உதயன் நாளிதழால் நடத்தப்பட்ட மாபெரும் கலை இலக்கிய போட்டி களில் வெற்றியீட்டிய மாணவர்களுக் கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற் றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள், ஓவியப் போட்டி பிரிவு 'ஏ' யில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்குவதை இங்கு காணலாம்.

*இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதயனில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான ஒளிப் படங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0718628380.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெயில் கொடுமை 700 பேர் சாவு

ஐதராபாத்,மே27

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் சுட்டெரிக்கும் வெயிலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 700 இற்கும் மேல் உயர்ந்துள்ளது. இன்னும் சில நாள்களுக்கு வெயிலின் உக்கிரம் தொடரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.



இந்தக் கோடைக்காலத்தில் இந்தியாவில் பல மாநிலங்களில் உச்சக்கட்ட வெயில் சுட்டெரித்து வருகின்றது. இதில் தெலுங்கானா மாநிலத்தில் மட்டும் 199 பேர் உயிரிழந்துள்ளனர். ஆந்திராவில் இந்த எண்ணிக்கை 551 அதிகரித்துள்ளது. இந்தியாவிலேயே வெயிலால் இந்த இரு மாநிலங்களில் தான் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியின் ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள துளைகள் மற்றும் வாகனப் புகை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகை போன்றவற்றால் பருவநிலையில் ஏற்படும் பெரும் மாற்றம் காரணமாக தற்போதெல்லாம், வெயில், மழை, பனி உள்ளிட்ட அனைத்து பருவகாலங்களும் உக்கிரமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# முதல்வராக பதவியேற்ற கையோடு 'ஜெ' தொடங்கிய நலத்திட்டங்கள்

சென்னை,மே27

தமிழக முதல்வராக பொறுப்பேற்றுக்கொண்ட ஜெயலலிதா, திறக்கப்படாமல் இருந்த அம்மா உணவகங்கள் உட்பட பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளார்.





அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா, 5 ஆவது முறையாக தமிழக முதலமைச்சராக கடந்த 23 ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். அவருடன் 28 அமைச்சர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பொறுப்பேற்ற பின்னர், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வீதி மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய குடும்பங்களுக்கான வீட்டு வசதித் திட்டம், குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மற்றும் மகளிரை குடும்பத் தலை வராகக் கொண்ட நலிவுற்ற குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சென்னை, சேலம், திருவாரூர், விழுப்புரம், பெரம்பலூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, நாகர்கோவில் உட்பட பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 201அம்மாஉணவகங்களைகாணொலி காட்சி மூலம் முதல்வர் ஜெயலலிதா தொடக்கி வைத்தார்.

அதே போன்று பொலிஸாருக்குப் புதிய வாகனங்களையும், கடலோர பாதுகாப்பு படையினருக்கானரோந்து வாகனங்களையும் முதல்வர் ஜெயலலிதா வழங்கியுள்ளார். (14)



# கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் தேவாலயம் தீ வைத்து எரிப்பு

லாகூர்,மே27

பாகிஸ்தானில் லாகூர் புறநகர் பகுதியான சாண்டா என்ற இடத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவர் இஸ்லாம் மத்ததை அவமதித்துள்ளார். இதனால் மத அவமதிப்பு சட்டத்தில் அவரைப் பெலிஸார் கைது செய்துள்ளனர். இதனை அறிந்த ஒரு குழுவினர் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

அதன் பின்னர் குறித்த நபரின் வீட்டுக்குச் சென்ற அந்தக்குழுவினர் அவரது வீட்டை இடித்து நொறுக்கியதுடன், மேலும் அந்தப்பகுதியில் இருந்த ஏராளமான கிறிஸ்தவர்களின் வீடுகளையும் நொறுக்கி கிறிஸ்தவர்களையும் தாக்கியுள்ளனர்.

பல வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. தேவாலயத்துக்கும் தீ வைத்துள்ளனர். இதற்கிடையே கலவரம் நடந்த பகுதிக்கு பொலிஸார் தாமதமாக வந்ததால் தான் இந்தச் சம்பவம் நடந்ததாக கிறிஸ்தவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். (14)



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நேபாளத்தில் பௌத்த பிக்குகள் மெழுகுவர்த்தி ஏந்தி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லும் காட்சி.

# 'ஜெ'சொத்துக்குவிப்பு வழக்கு மேல்முறையீடு செய்யும் தி.மு.க

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை,மே27

ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் தி.மு.க மேல்முறையீடு செய்யும் என்று கருணாநிதி அறிவித்துள்ளார். வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக்குவித்த வழக்கில் ஜெயலலிதாவை கர்நாடக உயர் நீதிமன்றம் விடுதலை செய்ததைத் தொடர்ந்து, அவர் தமிழகத்தின் முதல்வராக மீண்டும் பதவியேற்றுள்ளார்.

இந்த நிலையில் சென்னையில் நேற்று நடைபெற்ற தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்யாவிட்டால் அது தவறான சட்ட முன்னுதாரணமாக அமைந்து விடும் என்று அரச வழக்கறிஞர் ஆச்சார்யா கருத்து தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (14)

# ஓராண்டு பூர்த்தியுறும் நிலையில் பிரதமர் மோடியின் திறந்த மடல்

டில்லி,மே27

இந்தியப் பிரதமர் மோடி பிரதமராக பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி திறந்த மடல் ஒன்றை எழுதியுள்ளார்.

பொதுமக்கள் மத்தியில் அரசு மீதான நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க அரசு ஊழலற்ற ஆட்சியை உறுதிப்படுத்தியுள்ளது. மாநில அரசுகளை சரிநிகராக நடத்துவதன் மூலம் இந்தியாவின் ஒற்றுமை மேலோங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நாங்கள் ஆட்சி அமைக்கும்போது, இந்திய அரசின் மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் மங்கிக் கொண்டிருந்தது. கடுமையான ஊழல், முக்கிய முடிவெடுப்பதில் உறுதியின்மை ஆகியனவற்றால் அரசு முடங்கிப்போய் இருந்தது. விண்ணை முட்டும் பணவீக்கம், பொருளாதார நிலையற்ற தன்மை ஆகியனவற்றால் மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவசர கால அடிப்படையில், வலுவான முடிவெடுக்க வேண்டிய தருணம் அது. அத்தகைய சவாலான சூழலில் ஆட்சிப்பொறுப்பைஎடுத்துக்கொண்ட நாங்கள் இன்று ஓராண்டுக்கான தரச் சான்றிதழை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம். அந்த தரச் சான்றிதழில், தற்போதைய அரசு மேற்கூறிய சவால்களை முறையாக எதிர்கொண்டிருப்பது தெரியும். விலைவாசி உயர்வு உடனடியாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (14)

# இராணுவ நடவடிக்கை குறித்து சீனா அறிக்கை வெளியீடு

பீஜிங்,மே27

சீனா தனது இராணுவ நடவடிக்கை குறித்து நேற்று வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.அதில் தீவிர பாதுகாப்புக்கு வழிகாட்டுதலும் சர்வதேச பாதுகாப்புக்கு நெருக்கமான ஒத்துழைப்பு அளிப்பது குறித்தும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. சீனாவின் இராணுவ நடவடிக்கை குறித்த வெள்ளை அறிக்கையை மாநில சபை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அதில் 'நாங்கள் தாக்கப்படாத வரை தேவை இல்லாமல் தாக்கமாட்டோம், ஆனால் நாங்கள், தாக்குதலுக்கு உறுதியாக எதிர்த் தாக்குதல் நடத்துவோம் எனச் சீன இராணுவம் அதில் கூறியுள்ளது.

போர் உருவாகி வரும் வடிவத்துக்கு ஏற்ப மற்றும் நாட்டின் பாதுகாப்பு நிலைமையை மையமாக வைத்து சீனா இராணுவ போராட்டத்துக்குத் தயாராகிறது என்றும், உள்ளூர் போர்களின் வெற்றி விவரங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கியமாக சீனாவின் வெளிநாட்டு நலன்கள் கருதி சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பு பகுதிகளில் ஆயுதப் படைகள் பலப்படுத்தப்படும். (14)

# ஆப்கானிஸ்தானில் தாக்குதல்; 38 தீவிரவாதிகள் சாவு

காபூல்,மே27

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் உள்நாட்டு பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகிறார்கள். தெற்கு ஆப்கானிஸ்தானில் சாங்கின் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 10 பொலிஸ் சோதனை சாவடிகளில் அதிரடித் தாக்குதல் நடத்திய தலிபான்கள் அங்கிருந்த 10 பொலிஸ் அதிகாரிகளை கொன்றனர். மேலும், 16



பேர் படுகாயம் அடைந்தனர். இதனையடுத்து தலிபான்கள் மீதான தாக்குதலை ஆப்கன் அரசு தீவிரப்படுத்தியது. ஆப்கன் தேசிய பாதுகாப்புப் படையினர் பாக்லான், குண்டூஸ், படாக்சான், [illegible], [illegible], லோகர் மற்றும் ஹெல்மந்த் மாகாணங்களில் அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அதன்போது பதுங்கி இருந்த தீவிரவாதிகள் மீது பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் 38 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர். 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகளிடம் இருந்து சக்தி வாய்ந்த வெடிபொருள்களும், போருக்கு பயன்படுத்தும் தளபாடங்களும் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகளவில் பெரும் புகழ்பெற்ற கொமிக்ஸ் கதாப்பாத்திரங்களைப் பெருமைப்படுத்தும் விதமாக வருடந்தோறும் கொமிக் கான் திருவிழா நடைபெற்று வருகின்றன. பிரிட்டனின் தலைநகர் லண்டனில் இந்த வருடத்துக்கான கொமிக் கான் திருவிழா கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதில் உலகில் பல பகுதிகளில் இருந்தும் வந்த ஏராளமான கொமிக் கதாப்பாத்திரக் காதலர்கள் வித்தியாசமாக ஒப்பனை செய்தவாறு கலந்து கொண்டனர். (14)

# பிரேஸில் சிறையில் கலவரம் 9 பேர் சாவு

ரியோ டி ஜெனிரோ,மே27
பிரேசிலின் இரண்டாவது பெரிய நகரமான பியரா டி சன்டானாவில் அமைந்துள்ள சிறைச்சாலையில் கலவரம் ஏற்பட்டதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறையில் உள்ள கைதிகளைப் பார்க்க அவர்களின் உறவினர்கள் சென்றுள்ளனர். அதன்போது கைதிகள், பலர் கத்தியுடன் பார்வையாளர்கள் பகுதிக்குள் நுழைந்து சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பலரையும் பிணைக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டனர். பின்னர் சிறைச்சாலையில் அடிப்படை வசதிகள் இல்லையெனக் கூறிய கைதிகள், இது குறித்து மனித உரிமை ஆணையத்தை சேர்ந்தவர்களிடம் பேச அனுமதிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.
இந்த நிலையில் கைதிகளின் இரு பிரிவினருக்கிடையே திடீரென மோதல் மூண்டதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். அதில் ஒருவர் தலைதுண்டித்துக் கொல்லப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் கைதிகளிடம் பேச்சு நடத்தினர். . அந்தப்பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.
644 கைதிகளை மட்டுமே சிறையிலடைக்க வசதி உள்ள நிலையில், ஆயிரத்து 467 கைதிகள் அடைக்கப்பட்டதே கலவரம் உருவாகக் காரணம் என்று கூறப்படுகிறது. (14)

# அமெரிக்காவை தாக்க ஐ.எஸ் அமைப்பு திட்டம்

வொஷிங்டன்,மே27
ஐ.எஸ் தீவிரவாதிகள் அமெரிக்காவைத் தாக்கும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது என்று பிரிட்டன் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



ஐ.எஸ் அமைப்பின் இதழான 'டபிக் கில்' வெளியான அறிவிப்பில், தங்கள் அமைப்பு மிகப் பெரிய அளவில் விரிவடைந்து வருவதாகவும், 12 மாதங்களுக்குள் பாகிஸ்தானில் இருந்து அணு ஆயுதங்களை வாங்குவோம் எனவும் கூறியுள்ளனர்.
இந்த நிலையில் இந்தத் தகவலை மேற்கோள் காட்டி, பிரிட்டனின் 'டெலிகிராப்' நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், பாகிஸ்தானில் உள்ள ஊழல் அதிகாரிகளுடன் தொடர்புடைய ஆயுதத் தரகர்கள் மூலமாக, அணு ஆயுதத்தை ஐ.எஸ் தீவிரவாதிகள் வாங்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் அணு ஆயுதத்தை லிபியா, நைஜீரியா, மெக்ஸிகோ வழியாக அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்லலாம். இந்தத் திட்டம் கற்பனைக்கு எட்டாததாகவுள்ளது எனத் தோன்றக் கூடும். ஆனால் மேற்கத்திய உளவு அமைப்புகள் இவ்வாறு நடக்கும் என அஞ்சுகின்றன. இவ்வாறு நடக்குமா என்ற நிலை இருந்தது போக, ஒரே வருடத்தில் இது நடக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா மீது மாபெரும் தாக்குதலை நிகழ்த்த ஐ.எஸ். திட்டமிட்டு வருகிறது என்பதில் எந்த இரகசியமும் இல்லை. அணு ஆயுதம் இல்லாவிட்டால் என்ன? சில ஆயிரம் டன் அளவு அமோனியம் நைட்ரேட் வெடிபொருள் போதாதா? அதை உருவாக்குவது சுலபம்தான் என்று ஐ.எஸ் நாளிதழ் 'டபிக் கில்' குறிப்பிட்டிருப்பதாக 'டெலிகிராப்' தெரிவித்துள்ளது. (14)



# சீனாவில் தீ விபத்து 38 பேர் சாவு முதியோர் இல்லத்தில்

பீஜிங்,மே27
மத்திய சீனாவில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 பேர் உடல் கருகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். மேலும் ஆறு பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.
நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ள பிங்டிங்ஷான் பகுதியில் இருக்கும் தனியாருக்குச் சொந்தமான முதியோர் ஓய்வு இல்லம் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.
இந்த விபத்தில் 38 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன், 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
தீ விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (14)

# ஊழலை ஒழிப்பதற்கு சீனாவில் புதிய திட்டம்

பீஜிங்,மே27
சீனாவில் அரச அதிகாரிகளிடையே பெருகியுள்ள லஞ்ச–ஊழல் விவகாரம், அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. எனவே ஊழல் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக தற்போதைய ஜனாதிபதி ஜின்பிங், கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.
இதன் பயனாக பல்வேறு மூத்த அதிகாரிகள், இராணுவ தலைவர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் என ஏராளமானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர். எனினும் அரச நிர்வாகத்தில் இருந்து ஊழலை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. எனவே இது தொடர்பாக அரச அதிகாரிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவு செய்த அரசு, இதற்காக புதிய வழி ஒன்றை கையாண்டுள்ளது. அதன்படி அரச அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஒருநாள் சுற்றுலாவாக சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டது. ஊழலில் பிடிபட்டு சிறையில் இருக்கும் அதிகாரிகள், அங்கு படும் துன்பங்களைப் பார்த்துத்திருந்துவதற்காகவே இந்தத் திட்டம் ஆகும்.
அதன்படி அங்குள்ள ஹுபேய் மாகாணத்தை சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 70 தலைவர்கள் மற்றும் மூத்த அரச அதிகாரிகள், அவர்களது குடும்பத்தினருடன் அங்குள்ள சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஒருநாள் முழுவதும் தங்கியிருந்த அவர்கள், சிறையில் தங்களது மூத்த அதிகாரிகள் படும் துன்பங்களைப் பார்த்து விட்டுத் திரும்பினர். (14)



# உலகின் முதல் சூரிய ஒளி விமானம் பயணத்தை ஆரம்பிக்கிறது

பீஜிங்,மே27
உலகின் முதல் சூரிய சக்தி விமானமான சோலர் இம்பல்ஸ் தனது மிக முக்கியமான பயணமான சீனாவில் இருந்து மத்திய பசிபிக் நோக்கி தொடர்ந்து 6 நாள்கள் பறக்கும் கனவுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.
ஏறத்தாழ 5 மாதங்கள் சூரிய ஒளியைக் கொண்டே உலகைச் சுற்றவுள்ள இந்த விமானம், சுமார் 22 ஆயிரம் மைல் தூரத்தை தனது பயணத்தில் கடக்க இருக்கிறது. 500 மணி நேரம் வானில் பறக்கும் இந்த விமானம், ஒரு சொட்டு விமான எரிபொருளைக் கூட உபயோகப்படுத்தாமல் மூன்று கண்டங்களையும், இரண்டு கடற் பரப்புகளையும் கடக்கவுள்ளது.
மற்ற விமானங்களில் சீனாவில் இருந்து ஹவாய்க்கு செல்ல 10 மணி நேரம் மட்டுமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. வானம் மேகம் மூட்டத்துடன் இல்லாமல் விமானம் பறக்க ஏதுவான நிலை இருக்கும்போது சோலார் இம்பல்ஸ் தனது சாதனைப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. (14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு

ராஜராஜன்



சாவு என்பது உயிர்கள் அனைத்துக்குமே இறுதியானது. நாம் இந்த உலகில் காலடி எடுத்து வைக்கும்போது மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகின்றோம். ஆனால் உறவுகளைப் பிரிந்து இந்த உலகைவிட்டு நீங்கிச் செல்லும்போது கண்ணீருடன் வழியனுப்பி வைக்கப்படுகின்றோம். சாவை எவருமே மகிழ்ச்சியுடன் வரவேற்பதில்லை. அதை விரும்புவோரும் இல்லை. ஆனால் எமது விருப்பத்தை எதிர்பார்த்து சாவு காத்து நிற்பதில்லை.

நீண்ட காலமாகத் தவமிருந்து வரங்களைப் பெற்றுக்கொண்ட முனிவர்களால் கூட, தமது சாவைத் தவிர்க்க முடியவில்லை. இவர்கள் இறைவனிடம் சாகா வரம் பெற்றுக் கொண்டதுமில்லை. மனிதர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட 36ஆயிரத்து 500 நாள்கள் ஒருநீண்ட கால அளவு அல்ல. மிகக் குறுகிய காலமே அது. இதற்குள் நாம் வாழ்ந்து முடித்தாக வேண்டும். ஆனால் எப்படி வாழ்கின்றோம் என்பதுதான் முக்கியமானது.

சிலர் தமது வாழ்நாளின் பெரும் பகுதியை தீய விடயங்களில் கழித்திருப்பார்கள். நல்லதை இவர்கள் சிந்தித்துக் கூடப் பார்ப்பதில்லை. ஆனால் தமது வாழ்க்கையின் இறுதி நாள்களில் நிற்கும்போது ஏதோ ஞானம் வந்தவர்களைப் போன்று வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பார்கள். இதில்சாவு பற்றியும் தெரிவிக்கப்படும். இத்தகைய சிலர் தமக்குச் சாவுஏற்கனவே வந்திருக்கலாம் என்று கூட கூறுவார்கள். ஆனால் இவை யாவுமே காலம் கடந்த சுடலை ஞானம் என்றுதான் கூறவேண்டும்.

சித்தர்கள் சிலர் தமது சாவு தொடர்பாக ஏற்கனவே அறிந்து வைத்திருப்பார்கள். தமது சாவுக்கான தினம், நேரம் ஆகியவற்றைக் கூட இவர்கள் தெரிவித்திருப்பார்கள். பின்னாளில் அது சரியாகவும் அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எம்மில் சிலர் எப்போதோ நிகழ்ந்துவிடக்கூடிய சாவு தொடர்பாக இப்போதே பயப்பட ஆரம்பித்து விடுவார்கள். பயந்து பயந்து இவர்கள் தினம் தினம் செத்துக்கொண்டிருப்பார்கள். இதனால் வாழ்க்கையில் ஒரேயொரு முறைவருகின்ற சாவு இவர்களுக்குப் பலமுறை வந்துவிடுவதுண்டு.

சிலர்தம்மால் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டிய கடமைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டுத் தமதுஇறுதி நாள்களுக்காகக் காத்திருப்பார்கள். சாவு தொடர்பான பயமே இவர்களிடம் இருப்பதில்லை. சாவை மகிழ்ச்சியாகச் சந்திப்பவர்கள் இவர்கள்தான். இத்தகைய மனப்பாங்கை நாம் அனைவரிடமும் எதிர்பார்க்க முடி யாது.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் குற்றங்களைக் கருத்தில் கொண்டு சாவுத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு பல தரப்பிலிருந்தும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது. கொடிய குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்கப்படுவதால் இத்தகைய குற்றங்களைச் செய்வதற்கு ஏனையவர்கள் துணிய மாட்டார்கள் என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது.

ஒரு மனிதன் வேறொருவனைக் கொலை செய்யும்போது அவன் கொலைக் குற்றவாளியாக மாறிவிடுகின்றான். ஆனால் பிற உயிர்களைக்கொலை செய்பவர்கள் மீது கொலைக்குற்றம் சுமத்தப்படுவதில்லை. இது மனிதர்களின் ஓரவஞ்சனையான குணவியல்பைத்தான் காட்டி நிற்கின்றது.

இராமலிங்க வள்ளலார் நீரின்றி வாடிய மரங்களைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறியதாகவும் சிறு எறும்பு, பூச்சி இனங்களுக்குக் கெடுதல் விளைந்து விடுமோ என்ற அச்சத்தில் திருவள்ளுவர் நிழலை நாடிச் செல்வதில்லையெனவும் அறிந்து வைத்திருக்கின்றோம். அவர்கள் பெரும் மகான்கள். சகல உயிர்களையும் சமனாக நினைத்த ஞானிகள். ஆனால் சாமானியர்களான நாம் எம்மை மட்டுமே சிந்திக்கின்றோம். எமது சாவு தான் எமக்குப் பெரிதாகத் தெரிகின்றது. ஆனால் சாவிலிருந்து எந்த உயிரும் தப்பிக்கவே முடியாது.

# கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் 1 பில்லியன் தொகுதிக்கடன் வழங்கல்

COMMERCIAL CREDIT

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் ஒவ்வொன்றும் ரூபா 100 பெறுமதியான மதிப்பிடப்பட்ட பிரதியீடான உத்தரவாதத்துடனான, மீட்கக்கூடிய ஐந்து வருடங்களுக்கான 10 மில்லியன் தொகுதிக் கடன் பத்திரம் வழங்கலானது மிகை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தொகுதிக்கடன் பத்திரங்கள் மீதான வட்டி ஆண்டுக்கு 10.50 வீதம் என்ற நிலையான வீதத்தில் அமைந்திருப்பதுடன், இது காலாண்டு அடிப்படையில் கணிப்பிடப்பட்டு ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும். இந்த தொகுதிக்கடன் வழங்கல் 2015 மே 21ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி ரஜீவ் காசி சிட்டி கூறுகையில்,

இந்த தொகுதிக்கடன் பத்திரம் வழங்கலின் சிறப்பான தொழிற்பாடு குறித்து நாம் உண்மையி லேயே மிகவும் மகிழ்ச்சியடைகின் றோம். எம்மை ஆச்சரியமூட்டும் வகையில் கொமர்ஷல் கிரெடிட் மீது நம்பிக்கை வைத்திருக்கும் இலங்கை பொது மக்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இந்த நாட்டில் உள்ள மேலும் அதிகமான மக் களை சென்றடைவதற்காகவும் அதேபோல் அதனூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முன்முயற்சிகளில் ஒரு அங்கமாக பங்கேற்பதற்கான நல்லதொரு வாய்ப்பை ஏககாலத்தில் எமது முதலீட்டாளர்களுக்கு இந்த தொகுதிக் கடன் பத்திரம் வழங்கல் வழங்கியிருக்கின்றது என்று தெரிவித்தார்.

ஐந்து வருடத்தை கொண்ட மதிப்பிடப்பட்ட, பிரதியீடான, உத்தரவாதத்துடனான, மீட்கக்கூடிய இத் தொகுதிக்கடன் பத்திரங்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படும்.

தொகுதிக்கடன் பத்திரம் வழங்கலின் வங்கியியலாளராக ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி. திகழ்வதுடன், இந்த வழங்கலின் முகாமையாளர் மற்றும் பதிவாளராக முறையே ஃபெர்ஸ்ட் கெப்பிடல் லிமிடட் மற்றும் எஸ்.எஸ்.பி.கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட் ஆகிய நிறுவனங்கள் செயற்படுகின்றன.

அதேவேளை இத் தொகுதிக்கடன் பத்திரம் வழங்கலின் அறங்காவலராக இலங்கை வங்கி செயற்படும். லங்கா ரேடிங் ஏஜன்ஸி லிமிட்டட் ஆனது இந்த தொகுதிக்கடன் பத்திரங்களுக்கு ஏஏ என்ற ஒரு நீண்ட கால தரப்படுத்தலை அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



உதயன் –சுடர்ஒளி பத்திரிகைகளின் இனை வெளியிடான ஒளி அரசி மற்றும் புலமை சுடர் ஆகிய சஞ்சிகைகளின் அறிமுக நிகழ்வு வவுனியாவில் இடம் பெற்ற போது வவுனியா வேப்பங்குளம் தேவாலயத்தின் பங்கு தந்தை வெளியிட்டு வைக்கிறார். (த-421)



திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் இரத்தச் சுத்திகரிப்புச் சிகிச்சை முதன் முறையாக கொழும்பு வெஸ்ரேன் வைத் திய சாலையுடன் இணைந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் வெஸ் ரேன் வைத்தியசாலையில் பணிபுரியும் பேராசிரியர் செரிப் மற்றும் நொதன் சென்றல் வைத்திசாலை முகாமைத்துவப் பணிப்பாளர், வைத்திய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (த)





சம்பத் வங்கி, சங்கானைக் கிளையினால் சமூக அக்கறை நலத் [illegible] பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களான சுளிபுரம், அராலி, பண்ணாகம் சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் பகுதிகளில் அடையாள[illegible]ழ் இயங்கும் 10 சிறுவர் கழகங்களுக்கு மாலை நேரக் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவும் நோக்கில் வாசிப்பு மேசைகள், வாங்குகள் வழங்கி வைக்கப்பட்டன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியா? பணமா?

சட்டக்கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று நீதி தேவனுக்கு முன்னால் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த நீங்கள் இறந்து போன மாணவி வித்தியா சிவலோகநாதனின் மனம் சாந்தி அடைவதற்காகவாவது குற்றவாளிகளுக்குச் சார்பாக நீதிமன்றத்தில் பிரவேசிக்கக்கூடாது. வித்தியா போன்று உங்கள் பிள்ளைகள், சகோதரிகளுக்கு இடம்பெற்றிருந்தால் உங்கள் நிலை என்னவாக இருக்கும் என்பதைச் சிந்தியுங்கள். பணத்துக்கு விலைபோகாமல் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும், இனியாவது பெண்கள் நிம்மதியாக இருப்பதற்குத் துணையாக நில்லுங்கள். நாய்களிலும் கேடு கெட்டவர்களுக்காக வாதாடி உங்கள் மதிப்பை இழந்து பணத்துக்கு ஆசைப் பட்டு காமுகர்களைக் காப்பாற்றக் கூடாது. எத்தனையோ இளம் பெண்கள் துடிதுடித்து சாவடைந்துள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். இனியாவது பெண்கள் நிம்மதி யாக வாழ்வதற்கு புங்குடு தீவில் பிடிபட்ட கேடுகெட்ட நாய்களுக்குக் கொடுக்கப்படும் தீர்ப்பு உதவட்டும். பெண்கள் சமுதாயம் வாழட்டும். மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கின்றேன். பணத்துக்காக ஆசைப்பட வேண்டாம். நீதி நிலைக்கட்டும் ஒழிக வன்முறைக் கலாசாரம்.

*பொது நலத்தொண்டன்*
*அன்ரனி*

## வாசகர் திருமுகம்

# ஒரு சமூகத்துக்கு மட்டும் தனி உரிமையா?

வீணா கான குருபீட அங்குரார்ப்பண நிகழ்வு குறித்த செய்தியை 19.05.2015 செவ்வாய்க்கிழமை வெளிவந்த உதயன் நாளிதழ் மூலம் அறிந்து கொண்டேன். நாளிதழ்ச் செய்தி அடிப்படையில் வட பிரதேசத்தில் இந்து சமய மறுமலர்ச்சியை முன்னெடுக்கும் குறிக்கோளுடன், வீணா கான குருபீடமொன்றை அங்குராப்பணம் செய்யும் நிகழ்வு என்ற தொனிப்பொருளில் அமைந்ததாகவே காணப்பட்டது. இந்த நிகழ்வானது குறிப்பிட்ட ஒரு சமூகத்தவருக்கு என்ற வகையில் நாளிதழில் பிரசுரிக்கப்படவில்லை. அந்த வகையில் யானும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டேன்.

ஆனால், அந்த நிகழ்வானது தனியே அந்தணர்களுக்கு உரித்தானதோர் நிகழ்வாகவே காணப்பட்டது.

எமது பிரதேசத்தில் இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பல்வேறு சமூகத் தொகுதியினரும் தங்களால் ஏற்ற பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். ஆலயங்களோடு தொடர்பான வகையிலும், தமது அரிய பங்களிப்பைப் புரிந்து வருகின்றனர். ஆனால், குறித்த நிகழ்வின்படி அந்தணர்கள் தான் குறித்த மறுமலர்ச்சி செயல்பாட்டை தனியுரிமைப்படுத்திக் கொள்வதும் எந்த வகையிலும் ஏற்புடையதானது ஒன்றல்ல. இவ்வாறான ஒரு நிகழ்வுக்கு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், அங்குராப்பணதாரராகவும் அழைக்கப்பட்டிருந்தார், கூடவே நாடாளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன், அரச அதிகாரிகள் போன்றோரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறானதொரு நிகழ்வுக்கு சைவத் தமிழர்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்வது குறித்த சமூகத்துக்கு மட்டும் அந்தச் செயற்பாடு தனியுரிமையானது என்பதை அவர்களுமே ஏற்றுக் கொள்கின்றார்களா என்று எண்ணத்தோன்றுகிறது.

அந்த வகையில் இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஏற்ற பங்களிப்பைப் போற்றுமாறு ஆற்றும் இந்து சமயப் பேரவை, இந்து இளைஞர் மன்றங்கள், இந்து கலாசாரத் திணைக்களங்கள், நல்லை ஆதீனம், திவ்விஜீவன சங்கம் போன்றவற்றின் அரும் பணியை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த அரிய கைங்கரியத்தைக் குறித்த ஒரு சமூகத்தொகுதியினர் தமதாக்கி ஏனையோரின் அரும்பணியை மறைக்க முனையும் இவ்வாறான செயற்பாடு மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

*–ஒரு பார்வையாளர்.*

# வீதிப் புனரமைப்பு இடம்பெறுமா?

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு வடக்குப் புறமாக அமைந்துள்ள வீதியில் மழை பெய்யும் போது, பயணிக்க முடியாத அவலநிலை காணப்படுகின்றது.


கே.கே.எஸ். வீதியிலிருந்து இந்த வீதி ஆரம்பமாகிச் செல்கின்றது. சிறிது தூரம் சென்றதும், வீதியிலே பெரிய பள்ளம் காணப்படுகின்றது. மழை வெள்ளம் இதில் தேங்கி நிற்பதால், நடந்து செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. காலில் புண் மற்றும் இயலாத தன்மையுள்ளவர்கள் வெள்ள நீரிலும், சேற்றிலும் கால்களை நனைத்தவாறு செல்ல வேண்டியுள்ளது.

மேலும், இந்த வீதியின் பல பகுதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால், மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களின் சில்லுகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையினர் மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இந்த வீதியைப் புனரமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*– ந.தேவராசா, சுன்னாகம்.*

## கேலிச் சித்திரம்




# இனவாத அரசியலில் குளிர் காயும் மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் இலாபம் கருதி தமிழ் – சிங்கள மக்கள் மத்தி யில் இனவாதத்தைத் தூண்டி வருகின்றார் – இப்படி நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டி யுள்ளார். தமது அரசியல் நோக்கத்துக்காக நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்த மஹிந்த விரும்புகிறார் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 8 தேர்தலில் தோல்வியடைந்து தமது சொந்த ஊர் திரும்பியபோது தமது தோல்விக்கு தமிழ் –முஸ்லிம் வாக்குகள்தான் காரணம் என்பதைத் தமது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது பகிரங்கமாகத் தெரிவித்தவர் மஹிந்த. முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இப்படி இனவாதச் சிந்தனையுடன் கருத்து வெளியிடலாமா என்று அப்பொழுது விமர்சனங்கள் எழுந்தன. மஹிந்தவின் ஆதரவு எம்.பிக்களும் மஹிந்தவின் தோல்வியை இன்னும் ஏற்கத் தயாராக இல்லை. தமிழ்– முஸ்லிம் வாக்குகளை அவர்கள் கணக்கெடுக்கவில்லை.

இப்படியான நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ஆதரவு அணியின் பிரதான பிரசார ஆயுதம் எதுவாக இருக்கும் என்பது சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. இதன் வெளிப் பாடுதான் தேர்தல் நெருங்கிவரும் வேளையில் யாழ். நீதிமன்றம் மீதான தாக்குதல் குறித்து மஹிந்த வெளியிட்ட கருத்து. யாழ். நீதிமன்றம் மீதான தாக்குதல் புலிகள் மீண்டும் தலையெடுப்பதைக் காட்டுகிறது. 1970 காலப் பகுதியில் இப்படிக் கற்களை வீசித்தான் தமிழர்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்று மஹிந்த தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் இன வாதம் பூசிச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறும் அவரது திட் டத்தை இது வெளிக்காட்டுகிறது. தாக்குதலின் பின்னணியில் அரசி யல் சக்திகளின் கரம் குறித் தும் மஹிந்த குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு வித்தியா பாலியல் வல்லுறவு, கொலைச் சந்தேக நபர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட சமயம் அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்கு மாறு மக்கள் கோஷமிட்டனர். அவர்களைத் தடுத்து நிறுத்த பொலிஸார் எத்தனித்தனர். அப்பொழுது நீதிமன்று கல்வீச்சுக்குள்ளானது. சில பொலிஸார் காயமடைந்தனர். இதை வைத்துத்தான் சிங்களப் பொலிஸார் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்று தெற்கில் இனவாதம் பேசப்படுகிறது. மஹிந்தவின் கருத்துகளும் இனவாதிகளை ஊக்குவிக்கக் கூடியவை. சில அரசியல் சக்திகள் என்று மஹிந்த கூறியது, ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்க மறுத்த கூட்டமைப்பை மனத்தில் கொண்டதாக இருக் கலாம். ஆனால் இந்தத் தாக்குதலில் மூன்றாவது தரப்பு ஒன்று சம்பந்தப்பட்டிருப்பது உறுதியாகத் தெரிகிறது. கூட்டமைப்பும் இதைத்தான் கூறுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் அதிகபட்ச நடவடிக்கை – துப்பாக்கிச் சூடு மேற்கொள்வார்கள் என்று இந்த சக்திகள் எதிர்பார்த்திருக்கலாம். இதன் மூலம் தேர்தலுக்கு முன் அரசுக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பை உருவாக்கத் திட்டமிட்டிருக்கலாம். அதே சமயம் வடக்கில் இராணுவத்தை தொடர்ந்து வைத்தி ருக்கவும் திட்டம் போட்டிருக்கலாம். அதனால் தான் இராணுவத்தின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக் குழுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சாட்டுகிறார். கூட்டமைப்பும் சந்தேகம் வெளியிடுகிறது. அமைதியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பின்னால் நின்ற ஒரு தரப்பினரின் திட்டமிட்ட செயல் இது. இந்தச் சம்பவத்துக்கும் புலிகளுக்கும் தொடர்பை ஏற்படுத்துவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயலாகும்.

அவ்வப்போது நாட்டில் ஏற்படும் சில சிறிய குழப்பங்களைப் பயன்படுத்தி, அரசியல் இலாபம் தேடுவதற்கு பெரும்பான்மை இனக் கட்சிகள் முயற்சி செய்து வருவது இது முதற்தடவையல்ல. அதே நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இது புதிய விடயமுமல்ல. தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரி பால சிறிசேன வெற்றியீட்டி ஜனாதிபதியாகப் போகிறார் என்பதைத் தெரிந்துகொண்ட மஹிந்த, நாட்டில் இராணுவப் புரட்சி ஒன்றை உண்டுபண்ணித் தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குப் பல வழிகளிலும் முயன்றமை அனைவருக்கும் தெரிந்த விடயம். அவ்வாறான ஓர் எண்ணம் கொண்டவர் புங்குடுதீவு மாணவியின் கொலையில் அரசியல் நடத்த விளைவது புதிய விடயம் அல்ல.

அரசியல் ஆதாயத்துக்காக எதையும் செய்வதற்குத் துணிந்த இந்த இனவாதத் தலைவர்கள் இருக்கும்வரை இலங்கையில் ஒரு சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவது என்பது கல்லில் நார் உரித்த விடயமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் இவ்வாறான குறுகிய எண்ணம் கொண்ட அரசியல் தலைவர்களை வைத்துக் கொள்வது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பேராபத்தான விடயமே. எனவே இவர்கள் முகவரி இல்லாத அளவுக்கு ஓரம் கட்டப்பட்டு ஒதுக்கப்படவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகிறது. இனவாதம் என்பது ஒழிக்கப்படும்போதுதான் இலங்கை யில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கும் ஒரு வழி ஏற்படும் என்பது தெளிவு.

நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்தவே பிரதமர் வேட்பாளர் என்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற மஹிந்த ஆதரவு அணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் இனவாதம் தான் இவர்களின் முக்கிய ஆயுதமாக இருந்து, தென்னிலங்கை வாக்கு வங்கி மூலம் இவர்கள் ஆட்சி அமைப்பார்களானால் சிங்கள– பௌத்த பாசிச ஆட்சிக்கே இவர்களின் வெற்றி வழி வகுக்கும். தோல்வி ஏற்பட்டால் இனவாதத்தால் குறுகிய காலத்தில் இவர்கள் பெற்ற இரண்டாவது படிப்பினையாக இருக்கும். அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தைப் பயன்படுத்துவதை அரசியல்தலைவர்கள்கைவிட வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெண்களுக்கு எதிரான வன்முறை; முற்றுப்புள்ளிக்கு நடவடிக்கை ஏது?

♦ கூட்டு வன்புணர்வுடன்கூடிய கொலைகளை விசாரிக்க, சிறப்பு நீதிமன்றங்களை அமைத்து, விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

♦ குற்றவாளிகளுக்குரிய தண்டனையை விரைவில் கிடைக்கச் செய்வதன் மூலமே, மேற்போந்த பெரும் குற்றங்களைக் குறைக்க இயலும்.

♦ இவை போன்ற குற்றங்களை விசாரித்து, விரைந்து தீர்ப்புகளை வழங்குவதன் ஊடாகவே அவற்றைக் குறைப்பதற்கு வழி பிறக்கும்.

♦ அதன் ஊடாகவே, நீதித்துறை மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தக்க வைக்க இயலும்.

♦ இப்போதுள்ள சட்டங்களுக்கு அமைவாக, குற்றவாளிகளை மிகக் கடுமையாகத் தண்டிப்பதன் ஊடாகவே, அவற்றைத் தடுக்க இயலும்.

♦ இத்தகைய படுபாதகச் செயல் புரிவோருக்கு மரண தண்டனை என்ற உச்ச வகை நடவடிக்கை எடுக்கப்பட்டாலே, அதில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க வாய்ப்புவரும்.

♦ இவ்வகை சார்ந்த வழக்குகளின் தீர்ப்பு வருடக்கணக்கில் தாமதிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

♦ புங்குடுதீவில் நடைபெற்றது போன்ற கூட்டுவன்புணர்வுக் குற்றத்துக்கு இந்திய அரசு, சிறப்பு நீதிமன்றங்களை நிறுவி, குற்றவாளிகளை மிகக் குறுகிய காலத்தில் தண்டிக்கிறது. அவை போன்ற சிறப்பு ஏற்பாடுகள் இந்த நாட்டிலும் தேவை.

மேற்போந்த கருத்துக்கள், புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வக்கிரமான கோரக் கொலை குறித்து, குடாநாட்டு மக்கள் சார்பில் தனிப்பட்ட முறையில் பலரும் வெளிப்படுத்திய கருத்துக்களாகும்.

மொத்தத்தில், மக்களின் கருத்துக்கள், அவர்களின் மனச்சாட்சிகளின் வெளிப்பாடுகள்.

பாலியல் குற்றங்கள் மற்றும் கூட்டு வன்புணர்வு போன்றவற்றுக்கு, நீதிமன்றங்கள் விரைந்து தீர்ப்பு வழங்குவதற்கான அதிவிசேட சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஆகக்கூடியது ஆறு மாத காலத்துக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று தனியார்துறையைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் வெளிப்படுத்திய கருத்தும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கற்புக்கரசி கண்ணகி வழிவந்த தமிழ்ப் பெண்கள், தம்மவர்களாலேயே, கோரமாகக் கெடுக்கப்படுவது போன்ற சம்பவங்கள், எமது மக்களின் -- முன்னையவர்களின்-- அப்பழுக்கற்ற நாகரிகம் சிதைக்கப்படும் பெருங்கேடு, பேர ழிவை நோக்கி நகர்கிறதா என்ற வினாவையே மேலுயர்த்தி உள்ளது.

சமூகப் பாதிப்புத் தரும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்க அமெரிக்கா, பிரிட்டன், சீனா போன்ற நாடுகளில் விசேட நீதிமன்றங்கள் இயங்குகின்றன.

அதேபோன்று, எமது நாட்டில், பிரதேசங்களில் அதிகரித்து வரும் பாலியல் வன்புணர்வு, மற்றும் வக்கிரமான கோரச் செயல்களுக்கு சிறப்பு நீதிமன்றங்களை நிறுவ வேண்டிய தவிர்க்க முடியாத நிலை மேல் எழுந்துள்ளது.

தாமதித்த நீதி, கொலைக் குற்றத்தை விடவும் கொடுமையானது. அந்த வகை நாடி கொழும்பு அரசு கால் பதிக்கக் கூடாது என்பதே பாதிப் புற்ற மக்கள் சார்பில் மேலெழும் வேட்கை.

அரசியல் விவகாரங்களில் ஒன்றைக் கூறி, மற்றொன்றை செயற்படுத்துவது, வெளிப்படுத்துவது போன்ற தான்தோன்றித்தனம், தமிழ் மக்களைத் தனித்து மட்டுமன்றி, நாடளாவிய முழு மட்டத்தில் அரசுக்குப் பெரும் பாதிப்பைத் தரும். அதனை உணர்ந்து கொள்ளவும் கொழும்பு அரசு பின்னிற்கக் கூடாது.

மொத்தத்தில், இந்த வன்கொடுமைக்கு எதிராக நாட்டின் அனைத்துத் தரப்பினரும் காட்டி வரும் ஒத்த உணர்வு, அரசினரதும், நீதித்துறையினரதும் கண்களை அகலவிரித்துச் செயற்பட வழி திறக்கட்டும்.

வடக்கில் நடைபெற்றது போன்ற கோரச் சம்பவங்கள், நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இடம்பிடிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று எண்ணலாகாது. இதனை மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான அமைச்சர் ரோஸி சேனநாயக்கா எடுத் துக் கூறியுள்ளார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அணிதிரளுமாறு அறை கூவல் விடுத்துள்ளார்.

அதற்கு அவரே தலைமைவகித்து நாட்டின் அனைத்துப் பெண்களையும் அணி திரட்டி காத்திரமான, காட்டமான செயல் வடிவங்களை முன்னெடுக்கட்டும். எதிர்பார்க்கலாமா? என்ன?

# தென்பகுதி அரசியலில் குழப்பமான சூழ்நிலை



மஹிந்தவும் அவரைச் சேர்ந்தவர்களும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ளதால் மைத்திரி அவருடன் இணங்கிப் போவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. இவர்கள் இருவரும் இணங்கிப் போவதை ஐக்கிய தேசியக் கட்சியும் விரும்பமாட்டாது.

● ராஜராஜன்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே பிளவை ஏற்படுத்தக் கூடிய முயற்சிகள் திரைமறைவில் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர் தமது பதவிகளிலிருந்து விலகியமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான வெறுப்பின் உச்சக் கட்டமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியானதுமஹிந்த பிரிவு, மைத்திரி பிரிவு என இரண்டாகப் பிளவுபட்டுக் காணப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அந்தக் கட்சியின் போஷகராக விளங்குவதுடன், தமது எதிர்கால அரசியல் நகர்வுகளுக்கான வியூகங்களையும் இரகசியமாக மேற்கொண்டு வருகின்றார். ஆரம்பத்தில் அடுத்த ஜனாதிபதியாக வருவதே அவரது நோக்கமாக இருந்துள்ளது. ஆனால் ஜனாதிபதியின் முக்கியமான நிறைவேற்று அதிகாரங்கள் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலமாக அகற்றப்பட்ட பின்னர் மஹிந்தவுக்கு அந்தப் பதவியின் மீது நாட்டம் இருக்கவில்லை. இந்தநிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கும் எண்ணமும்அவரிடம் காணப்பட்டது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக பிரதமரே அதிகளவில் அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றமை இதற்கான காரணமாகும்.

ஆனால் மஹிந்தவின் இந்த விருப்பத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இதனால் ஏதாவதொரு பதவி கிடைத்தால் போதுமென்ற எண்ணத்தில் மஹிந்த இருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் பிளவுகளையும், சரிவுகளையும் சந்தித்த போதிலும், தற்போது பலம் வாய்ந்ததொரு கட்சியாக விளங்குகின்றது. அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகிப்பதும், வேறுபலர் அமைச்சர்களாக உள்ளதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பலம் சேர்த்துள்ளது. இதனை விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஐக்கிய தேசியக்கட்சியின் மீதும் அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீதும் சேறு பூசுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அடுத்து இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்து விடுமோ என்ற அச்சமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரிடம் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவின் தயவினால் இந்தப் பதவிக்கு வந்தவர் என்பதனால் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது நடப்பதையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.



அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதி பதியின் முக்கியமான அதிகாரங்கள் இல்லா தொழிக்கப் பட்டதால் ஜனாதிபதி பதவி வெறும் சம்பிரதாய பூர்வமான பதவியாகவே இருக்கப் போகின்றது. இந்த நிலையில்நாடாளுமன்றத்தைக்கைப்பற்றும் போராட்டங்களே எதிர்காலத்தில் இடம் பெறப் போகின்றன.




மஹிந்தவும் அவரைச் சேர்ந்தவர்களும் ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்களில் சிக்கியுள்ளதால் மைத்திரி அவருடன் இணங்கிப் போவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. இவர்கள்இருவரும் இணங்கிப் போவதை ஐக்கிய தேசியக் கட்சியும் விரும்பமாட்டாது. ரணிலைப் பொறுத்தவரையில் மஹிந்தவையும் அவரது கூட்டாளிகளையும் மன்னித்துவிடும் மனநிலையில் இல்லை. அதிலும் மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடி களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் அவர் குறியாக உள்ளார்.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான மோதல்கள் நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறும்போது உச்ச நிலையை எட்டிவிடும் ஏது நிலைகள் அதிகளவில் காணப்படுகின்றன. இது, யார் ஆட்சியை அமைப்பது என்பதற்கான போராகவே இடம்பெறப் போகின்றது.

இதனால் எதிர்வரும் நாள்கள் சுவாரஸ்யம் மிக்கனவாகவே அமைந்து விடப் போகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து
ரெங்கன்



# செப்ரெம்பரில் புதிய அரசு பதவியில் இருக்கும்

## தேர்தல் திகதி நிச்சயமில்லை

நாடாளுமன்றம் எப்பொழுது கலைக்கப்படும் அதன் மூலம் பொதுத் தேர்தலுக்கான திகதி எதுவாக அறிவிக்கப்படும். நாட்டு மக்கள் அனைவருமே இந்த விதமான கேள்விகளைக் கேட்டு திகதிகளையும் தமக்கேற்றவாறு யூகித்து வருகிறார்கள். கடந்த வாரம் அரசு தரப்பு மற்றும் தனியார் துறை ஊடக நிறுவனங்களின் தலைவர்களை கலை விருந்தில் சந்தித்த போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பின்வருமாறு பதில் கூறியிருந்தார். செப்ரெம்பரில் புதிய அரசு ஒன்று பதவியில் இருக்கும் என்பதை என்னால் உறுதிபடக் கூற முடியும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் வேட்பு மனுக்களைக் கோருவதற்கு இரண்டு கிழமைகள் எடுக்கும். அதன்பின் ஐந்து அல்லது ஏழு வாரங்களுக்குள் தேர்தல் நடந்தாக வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் திகதியை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டார்.

செப்ரெம்பரில் புதிய அரசு பதவியில் இருக்குமென்றால், அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படுவது சாத்தியப்பட மாட்டாது. அதேசமயம் ஜனாதிபதி விரும்பினால் முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் சாத்தியமும் காணப்படுகின்றது. ஆனால் அவ்வாறு அவர் செய்வாரா என்பதும் கேள்வியாகவுள்ளது.

முதலில் தேர்தல் சீரமைப்புக்களை செய்யவேண்டிய 20 ஆவது திருத்தம் இன்னமும் முடிவுறாமல் தடைக்கல்லாக இருந்து வருகின்றது. இரண்டாவதாக ஒருவேளை 20 ஆவது திருத்த வரைவு முடிவுற்று முன்னெடுக்கப்பட்டாலும்கூட அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பொது மக்கள் அதன் சரத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு இரண்டு வாரம் அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அதில் ஏதாகிலும் சரத்து அரசமைப்புக்கு மாறாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் உயர் நீதிமன்றுக்கு முறையீடு செய்ய இக்கால அவகாசம் தேவைப்படுவதாக இருக்கும். மூன்றாவதும் மிக முக்கியமானதுமான விடயம், நாடாளுமன்றத்தில் அது நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக சிறிசேன இருந்தபோதிலும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்டுப்பாட்டை அவர் இழந்து நிற்கின்றார். இந்த உண்மையை அவர் உணராமலில்லை. இவை அனைத்தும் என்னத்தை எடுத்துக்காட்டுகின்றனவென்றால் அடுத்துவரும் தேர்தல் இப்போதிருக்கும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலேயே நடைபெறும் என்பதுதான்.

ஊடகத் தலைவர்களுடன் சிறிசேன கலந்துரையாடுகையில், புதிய தேர்தல் வாக்களிப்பு முறை தொடர்பாக மக்கள் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு கால அவகாசம் தேவைப்படும் என்ற வகையில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தினார்.


மேலும், புதிய முறைக்கு ஏற்ற வகையில் அரசியல் கட்சிகளும் தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள அவகாசம் தேவைப்படலாம். அதுவே பொதுவான நிலைப்பாடு என்று அவர் மேலும் சொன்னார்.

### சர்வதேசத்துக்கும் ஒரு செய்தி

செப்ரெம்பர் மாதத்தில் புதிய அரசு பதவியில் இருக்கும் என்று சிறிசேன கூறியிருந்தமை சர்வதேசத்துக்கு விடுத்த ஒரு செய்தியாகவும் அமைந்தது. அமெரிக்க அரசின் இராஜாங்க செயலர் ஜோன் கெரி இலங்கைக்கு அண்மையில் வந்திருந்தபோது தேர்தலை எப்போது வைக்கப் போகிறீர்கள் என்றும் சிறிசேனவிடம் வினவியிருந்தார். இதேபோன்றுதான் அனேகமாக செப்ரெம்பரில் அது சாத்தியமாகலாம் என்று ஜனாதிபதி பதிலளித்திருந்தார். இலங்கையின் மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மூன்று நிபுணர்கள் குழுவினால் செப்ரெம்பரில் தாக்கல் செய்யப்படவிருக்கும் அறிக்கையின் எதிர்விளைவுகளை புதிய அரசே கையாள்வதாக இருக்கும் என்று சிறிசேன அப்போது தெளிவுபடுத்தியிருந்தார். ஊடகவியலாளர்களிடம் சிறிசேன இதுபற்றிப் பேசும் போது மேற்படி விடயமான உள்ளக விசாரணைகள் அடுத்த மாதம் தொடங்கும் என்று குறிப்பிட்டார்.

இந்த விசாரணைகள் குறிப்பாக மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதத்துவ சட்ட மீறல்களிலேயே அதிக கவனம் செலுத்தப்படுவதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெளிவுபடுத்தியிருந்தார்.

இவ்வாறான உள்ளக விசாரணைகள் மூலம் கிடைக்கும் விவரங்களின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமை சபையிடம் வெளியிடக்கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்று அரசு கருதுகின்றது.



> அமெரிக்க அரசின் இராஜாங்க செயலர் ஜோன் கெரி இலங்கைக்கு அண்மையில் வந்தி ருந்தபோது தேர்தலை எப்போது வைக்கப் போகிறீர்கள் என்றும் சிறிசேனவிடம் வினவியிருந்தார். இதேபோன்றுதான் அனேகமாக செப்ரெம்பரில் அது சாத்தியமாகலாம் என்று ஜனாதிபதி பதிலளித்திருந்தார். இலங்கையின் மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மூன்று நிபுணர்கள் குழுவி னால் செப்ரெம்பரில் தாக்கல் செய்யப்படவிருக்கும் அறிக்கை யின் எதிர்விளைவுகளை புதிய அரசே கையாள்வதாக இருக்கும் என்று சிறிசேன அப்போது தெளிவு படுத்தியிருந்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் அரசுத் தலைவர்களைக் கவலைக்குள்ளாக்கியிருந்தது. அது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்று வாய்க்கு அவல் கிடைத்தாற்போல் ஆயிற்று. தெற்கில் உச்சமட்ட உணர்ச்சியைத் தூண்டுவதான விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை நினைவுபடுத்தி, இது விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்குவதைக் [illegible]பதாகும் என்று பகிரங்க நிகழ்வொன்றில் அவர் குறிப்பிட்டிருந்தார். ராஜபக்ஜவின் கருத்து உண்மைக்கு மிக மாறானதாக இருந்தபோதிலும் என்ன நடந்திருக்கின்றது என்பதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டியுள்ளது. முகாமைத்துவத்தில் இறுக்கமான நிலைமை காணப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளும் பொது ஒழுங்கு அமைச்சின் உயர் அதிகாரிகளும் காத்திரமாக செயற்பட்டிருக்கவில்லை.

20 ஆம் இலக்க அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இன்னமும் முட்டுக்கட்டை நிலை தொடர்கிறது என்பது கடந்த வாரம் தெரிய வந்தது. கடந்த வாரம் திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஓர் உரையாடலின்போது இது தெரியவந்தது. தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்வ[illegible] அடங்கிய குழுவினரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த கருத்தாடலில் கலந்து கொண்டிருந்தனர். நாடாளுமன்றத்துக்கு 255 உறுப்பினர்கள் தெரிவாக வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்தை விவாதத்தின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சி உறுப்பினரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க முன்னெடுத்து விவாதித்திருந்தார்.

இந்த முன்மொழிவின்படி தேர்தல் தொகுதிகள் மட்டத்தில் 196 ஆசனங்கள் விகிதாசார முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மிகுதியிருக்கும் 59 ஆசனங்களுக்கு தேசிய மட்ட விகிதாசார முறையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும். அதே சமயம் ஐ.தே.கவின் கருத்துப்படி இப்போதிருக்கும் 225 ஆசனங்களும் அதே விதத்தில் பேணப் படும் நிலையில் மேற்கொண்டு 125 ஆசனங்களுக்கான தெரிவுகள் நேரடித் தேர்தல் முறையில் நடைபெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பேச்சுக்களில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை.

இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுகையில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை, ஜாதிக ஹெல உறுமய அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் வேறு சிலரும் சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் இனங்களின் கவலைகள் தொடர்பில் எதுவித தீர்வும் இல்லாத வகையிலான ஒரு தேர்தல் முறையை புகுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள். ஐ.தே.கவின் கருத்துகளும் கூட கவனத்தில் கொள்ளப்படவில்லையென்று கூறினார். ஆனால் சிறுபான்மையோர் இந்த முறையினால் பாதிப்புக்குள்ளாக மாட்டார்கள். இது அடிப்படையில் ஒரு விகிதாசாரத் தேர்தல் முறைதான் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மறுத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடையை குறைக்க சில வழி முறைகள்

உடல் பருமன் என்பது வாழ்க்கை முறை நோயாக ஆயுள்வேதத்தில் கருதப்படுகிறது. ஆயுர் வேதத்தில் எந்த ஒரு குறுக்கு வழியும் இல்லை என்பதை மறந்து விடாதீர்கள். நல்ல அழகான வாழ்க்கை முறையில் வாழ்ந்திட கீழ்க்கூறிய ஆயுள் வேத டிப்ஸ்களை பின்பற்றுங்கள்.

**உண்ணுவதில் எளிமை**

வாழ்வதற்காகவே உண்ண வேண்டும் என்ற தொடர் மொழியை இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். எளிமையான உணவுகள், குறைந்த எண்ணெயில் சமைத்த நற்பதமான உணவுகள் போன்றவைகளை உண்ண மக்களை அறிவுறுத்த வேண்டும். எந்த ஒரு வேளையிலும் உண்ணக்கூடிய உணவின் அளவை தான் முதலில் மாற்ற வேண்டி வரும். சாப்பாட்டை எடுப்பவர்கள் மனரீதியான கட்டுப்பாடுடன் இருந்தால் ஆரோக்கியமற்ற உணவை கண்டிப்பாக அவர்களால் கைவிட முடியும். அதனால் கஞ்சி, வேகவைத்த காய்கறிகள், காய்கறி சூப்கள் மற்றும் கோதுமையால் செய்த உணவுகளை உண்ண வேண்டும்.

**நொறுக்குத் தீனிகள்**

வறுத்த, எண்ணெய் சத்துள்ள உணவுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

கேரளாவின் வாழைப்பழத்தை உங்கள் நொறுக்கு தீனிகளில் சேர்த்துக் கொள்ளலாம். அப்பளங்களை பொறித்து எடுக்காமல் லேசாக வறுத்தாலே போதுமானது.

**அதிக நார்ச்சத்துள்ள தானியங்கள்**

வரகு சாதம் அல்லது அவித்த காய்கறிகளுடனான அதிக நார்ச்சத்துள்ள பார்லியை உண்ணலாம். இவைகளை அதிகமாக உட்கொண்டாலும் கூட தெவிட்டாது. இவைகளை உங்களின் மதிய உணவில் அல்லது இரவு உணவில் கண்டிப்பாக சேர்த்துக் கொள்ளுங்கள். மேலும் ஓட்ஸ் மற்றும் உடைத்த கடலையை சேர்த்துக் கொள்ளுங்கள். சந்தையில் கிடைக்கும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை கண்டிப்பாக உண்ணாதீர்கள்.

இனிப்புகள் மற்றும் சிலவற்றில் சேர்க்கப்படும் சர்க் கரையை தவிர வேறு இனிப்புகளுக்கு இடம் கிடையாது. ஆனாலும் சர்க்கரையை இழந்த உணர்வை நீங்கள் பெற மாட்டீர்கள். எனவே கேழ்வரகை உணவில் சேர்த்து வந்தால், அவை உங்கள் இரத்தத்தில் உள்ள சர்க்கரையை நிலையாக வைத்து இனிப்பின் மேல் இருக்கும் ஆர்வத்தை கட்டுப்படுத்தும்.

**புரதம் நிறைந்த உணவுகள்**

சோயா, பலவித பருப்புகள், கொண்டைக்கடலை, கொள்ளு மற்றும் பச்சைப்பயிறு போன்ற உணவுகளில் இருந்து புரதச்சத்தை பெற்றிடுங்கள். அசைவ உணவு வகைகளுக்கு ஆயுள்வேதம் தடைபோடுவதில்லை. ஆனால் ஹார்மோனால் உருவாக்கப்படும் மாமிச இனங்கள் என்றால் கண்டிப்பாக கூடாது. மீன் சேர்த்துக் கொள்ளலாம் – ஆனால் குழம்பில் வைத்த மீனே தவிர பொரித்த மீன் அல்ல.

**பானங்கள்**

அடர்த்தியான தயிருக்கு பதிலாக மோரை பருகுங் கள். தேநீர் மற்றும் கோப்பி கூட பருகலாம். தினமும் 1500 மி.லீ. அளவிலாவது இளஞ்சூடான தண்ணீரை பருகினால், உங்களை நீர்ச்சத்துடன் வைக்க உதவுவதோடு மட்டுமல்லாது, பசி வருவதையும் தாமதப்படுத்தும். வெதுவெதுப்பான நீர் நீண்ட நேரம் வயிற்றில் இருப்பதால் பசி உண்டாவதை தாமதப்படுத்தும்.

**உங்கள் விருப்ப உணவுகளை தவிர்த்தல்**

நீங்கள் சாதம் சாப்பிடுபவராக இருந்தால், மதிய உணவின் போது கோதுமை தோசை அல்லது சப்பாத்திக்கு மாறுங்கள். அதனால் உண்ணும் அளவு குறையும். இதனை மாற்றி பின்பற்றினாலும் கூட அதுவும் உதவி புரியும்.

**கலோரிகளை எண்ணுதல்**

கலோரிகளை எண்ணுவது மட்டும் முக்கியம் அல்ல. உண்ணும் உணவிலும் வாழ்க்கையிலும் நெறிமுறையை கடைப்பிடிப்பது அவசியம். உண்ணுவதில் மாறிய உணவு பழக்கங்களும், அணுகுமுறையும், உடல் எடையை குறைக்கவும், பராமரிக்கவும் பெரிதும் உதவும்.

**முக்கியமானவை**

சூரிய உதயத்துக்கு முன் காலையில் வேகமாக எழுந்திருப்பது, பகலில் தூங்காமல் இருப்பது அல்லது இரவு நீண்ட நேரம் தொலைகாட்சி பார்க்காமல் இருப்பது போன்ற இதர வாழ்க்கை முறை விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். இந்த கொள்கைகளை ஒரு மாத காலம் கடைப்பிடித்தால், உடல் நல எடை குறைப்புக்கு அது ஒரு பாதை வகிக்கும். மேலும் எளிய உணவுகள் மற்றும் உடல ரீதியான சுறுசுறுப்பான [illegible] ஆரோக்[illegible]



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### பிறருக்கு உதவி

கைகள் இருப்பது பிறருக்கு உதவி செய்யத் தான்.
பட்டினியாய்க் கிடந்தாலும் கடைசிப் பருக்கை யையும் பிறருக்கு கொடுப்பது தான் நல்லது. கொடுப்பவன் முழுமை பெற்று முடிவில் கடவுளாகிறான். ஒருவருக்கு உதவி செய்ய எண்ணி, யாருடைய கை முன்னே நீளுகிறதோ, அவனே மக்களில் சிறந்தவன். பரந்த இந்த உலகத்தில், கிராமம் கிராமமாகச் சென்று மனிதகுலத்திற்கு நன்மை செய்வதை கடமையாகக் கொள்ளுங்கள். மற்றவர்களின் நன்மைக்காக நரகத்திற்குக் கூடச் செல்ல தயாராகுங்கள்.



## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 600 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 360 | 400 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 450 |
| பாரை | 550 | 500 | 500 | 500 | 600 | 400 |
| சுறா | 600 | 500 | – | 650 | 700 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 350 | – |
| விளை | 600 | 400 | 400 | 500 | 450 | 300 |
| முரல் | 350 | 350 | 350 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 400 | 300 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 400 | – | – |
| ஒரா | 400 | 400 | – | 450 | 500 | – |
| திரளி | 150 | 300 | 200 | 350 | 200 | |
| நகரை | 150 | 300 | – | 300 | – | 150 |
| ஆடை | 150 | 200 | 150 | 160 | 200 | 100 |
| ஒட்டி | 150 | 300 | 200 | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 400 | 300 | 300 | 500 | 140 |
| பாலை | 400 | 300 | – | 400 | 200 | 350 |
| வாழை | 100 | 200 | – | 300 | 300 | – |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | – | 250 | – | 250 |

## நாளை

**வைகாசி-14**

**வியாழக்கிழமை 28.05.2015**

திதி: தசமி மா. 05.22 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப.11.58 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 80 | 80 | 30 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 80 | 60 | 80 | 40 |
| கரட் | 200 | 140 | 80–140 | 140 | 160–200 | 180 | 200 | 180 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 60 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 200 | 80 | 100–110 | 80 | 140 | 80 |
| பாகல் | 140 | 150 | 180 | 120 | 120–140 | 160 | 160 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 100 | – | 100 | – | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 120 | 90 | 120 | 110 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 100 | 120–160 | 50–100 | 140 | 120–140 | 160 | 120 | 110–120 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 20–30 | 40 | 60 | 20 |
| தக்காளி | 60 | 80 | 80 | 80 | 60–80 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 30 | 40–60 | 40 | 60 | 30 |
| கீரை | 40 | 60 | 60–70 | 15 | 30 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 20–30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 60 | 50 | 40 | 40 | 50 | 120 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 80–100 | 80 | 120 | 20 |
| கோவா | 120 | 90 | 80 | 100 | 80–100 | 120 | 100 | 30 |
| வெண்டி | 120 | 80 | 80 | 80 | 120–140 | 60 | 100 | 40 |
| போஞ்சி | 140 | 160 | 160 | 160 | 200 | 240 | 200 | 180 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 140 | 220 | 240 | 200 | 200 |
| தேங்காய் | 50 | 30–40 | 30–40 | 50 | 40–60 | 60–70 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 120–130 | 100 | 120 | 100–120 |
| தேசிக்காய் | 180 | 100 | 140 | 140 | 120–140 | 120 | 140 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 60 | 120 | 60 | 120 | 100 | 140 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | – | 100–120 | 160 | 180 | – |
| முருங்கைக்காய் | 500 | 380 | 350 | 450 | 300 | 400 | 250 | – |

## சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | | 4 | 5 | | | | |
| 5 | | 3 | | | | | | |
| | | | | 8 | | | 3 | 9 |
| 4 | 9 | 6 | 3 | 2 | | | | 1 |
| | | | 7 | | 1 | | | |
| 1 | | | | 6 | 5 | 8 | 4 | 3 |
| 9 | 3 | | | 7 | | | | |
| | | | | | | 1 | | 4 |
| | | | | 9 | 4 | | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 2 | 5 | 6 | 9 | 8 | 4 | 3 |
| 3 | 6 | 8 | 2 | 4 | 7 | 5 | 1 | 9 |
| 9 | 5 | 4 | 8 | 1 | 3 | 6 | 7 | 2 |
| 1 | 4 | 7 | 9 | 3 | 6 | 2 | 8 | 5 |
| 2 | 9 | 3 | 1 | 8 | 5 | 4 | 6 | 7 |
| 6 | 8 | 5 | 7 | 2 | 4 | 3 | 9 | 1 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 1 | 7 | 5 | 8 |
| 5 | 3 | 9 | 4 | 7 | 8 | 1 | 2 | 6 |
| 8 | 7 | 1 | 6 | 5 | 2 | 9 | 3 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ் நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்க...

ஒவ்வொருவருக்கும் திருமண வாழ்க்கை நன்கு சந்தோஷமாக அமைய வேண்டும் என்று ஆசை இருக்கும். அவ்வாறு ஆசை இருந்தால் மட்டும்போதாது.அதற்கு ஒருசிலவற்றைபொறுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அனைவருமே திருமணத்திற்கு முன்பு சுதந்திரப் பறவையாக, எந்த ஒரு தடையும் இல்லாமல் எதையும் விருப்பப்படி செய்திருப்போம். ஆனால் அதுவே திருமணம் என்று வந்துவிட்டால், வாழ்க்கை சந்தோஷமாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தனக்கு வரவேண்டிய வாழ்க்கைத் துணை இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று நினைத்தால் மட்டும் போதாது, தனக்கு வருபவருக்கும் அவர்களது விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்ளவும் வேண்டும். ஆகவே சந்தோஷமான வாழ்க்கை அமைய ஒருசிலவற்றை அனுபவசாலிகள் கூறுகின்றனர்...

திருமணத்துக்குப் பிறகு தன் வாழ்க்கைத் துணையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அந்த புரிதல் இருவருக்குமே 50/50 என்று இருக்கக்கூடாது. அது உங்களிடம் இருந்து 70 வீதம் பாசமும், அவர்களிடம் 30 வீதம் பாசமும் வந்தாலே போதும் என்று நினைக்க வேண்டும்.

அதிலும் பெண்கள் தனக்கு வருபரிடம் அதிகமாக எதிர்பார்ப்பார்கள். ஆனால் ஆண்களால் அவை அனைத்தையும் வெளிப்படையாகக் காண்பிக்க முடியாது. ஆனால் உண்மையில் ஆண்களின் மனதில், தன் மனைவியின் மீது, சொல்லமுடியாத அளவு ஆசை, பாசத்தை வைத்திருப்பர். ஆகவே அதனைப் புரிந்து பெண்கள் அவர்களை சந்தோஷமாக வைத்தால், அவர்கள் வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக அமையும்.

சந்தோஷமான வாழ்க்கையில் சமாதானம் மிகவும் முக்கியமான ஒன்று. அதில் யார் மிகவும் சிறந்தவர்கள் என்று கூறுங்கள் பார்க்கலாம்? வேறு யாராக இருக்க முடியும் ஆண்கள் தான். அவர்கள் தான், தனக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், மனதை சமாதானப்படுத்திக் கொண்டு விரும்புவார்கள். உதாரணமாக, மனைவி என்ன தான் மோசமாகச் சமைத்தாலும், கணவன் நன்றாக உள்ளது என்று கூறி அவர்களை சந்தோஷப்படுத்துவார்கள். தனக்குப் பிடிக்காத படம் மனைவிக்குப் பிடித்தால், அதையும் பொறுத்துக் கொண்டு பார்ப்பது. முக்கியமாக மனைவி எதைச் சொன்னாலும், தலையாட்டி விடுவார்கள் இவையெல்லாம் நடந்தால், அந்தத் திருமண வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

என்ன தான் சண்டை நடந்தாலும் தன் துணையை தன் உயிரைப் போன்று நேசிக்க வேண்டும். அவ்வாறு நேசித்தால், எவ்வளவு வயதாகினாலும், அந்த பாசமும், அன்பும் மாறாமல் இருக்கும். இப்போது கூட நிறைய இடங்களில் வயதானவர்கள், தங்கள் துணையின் மீது வைத்துள்ள அன்பிற்கு ஈடுஇணை எதுவும் இருக்காது. ஆகவே திருமணத்திற்குப் பின்னும் புரிந்துணர்வு மற்றும் ஒரு நல்ல நட்புறவு என்பது இருவருக்கும் இடையில் இருக்க வேண்டும். இதுவே அனைவரின் மனதிலும் பெரிதும் இருக்கும் எதிர்பார்ப்பு. ஆகவே இவற்றையெல்லாம் சரியாகக் கடைபிடிக்க முடியும் என்று நினைத்தால், வாழ்க்கையானது வாழ்நாள் முழுவதும் மிகவும் சந்தோஷமாக இருக்கும். இல்லையென்றால் பிரச்சினை வீடு கட்டித் தங்கிவிடும் என்றும் கூறுகின்றனர்.




# தாயின் தனிச் சிறப்பு

தாயிற்சிறந்த கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பது ஆன்றோர் வாக்கு. அந்த குடியிருந்த கோவிலின் சிறப்பு மிகவும் அலாதியானது. ஒரு தாய் ஆற்றும் கடமைகள் சாதாரணமானவையல்ல. தனது குழந்தைக்கு உணவளித்து, உடையுடுத்தி, நோய் நொடியிலிருந்து பாதுகாப்பது மட்டுமல்ல ஒரு தாயின் கடமைகள். தொப்புள் கொடியை துண்டித்தவுடன் தாயும், சேயும் உடல்ரீதியாகத்தான் பிரிக்கப்படுகிறார்கள். அந்த சேய், அது ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, எத்தனை வயதானாலும் தன் தாயை சார்ந்தே இருக்கிறது. தாயன்பில் கதகதப்பு, எந்த சூழ்நிலையிலும் பாதுகாப்பு, ஆதரவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு – இவைதான் காலங்காலமாய் அனுபவம் உணர்த்தும் உண்மை.

அப்படி ஒரு மகத்தான சக்தி படைத்த தாயால் களிமண்ணை பிசைந்து உருவம் செய்வது போல எளிதாக இள வயதிலிருந்தே குழந்தைகளை தட்டிக் கொடுத்து, கண்டித்து, பாராட்டி, நேர்வழி காட்டி நல்ல பிரஜைகளாய் உருவாக்க முடியும்.

தாயின் தனித்திறமையால் உருவாவது குழந்தையின் அறிவு. அறிவு என்பது மூளை வளர்ச்சியின் வெளிப்பாடு. மூளை இருக்கிறதே அது ஒரு மிக அதிசயமான, அற்புதமான மிஷின். கருவிலேயே திருவாக மிளிர்ந்த பிரகலாதன், அபிமன்யு போன்றோர் கதைகளைக் கேட்டிருக்கிறோம். கருவிலிருக்கும் குழந்தைக்கு கேட்கவும், கேட்டதை கிரகிக்கவும் முடிகிறது என்று இப்போது விஞ்ஞான பூர்வமாக நிரூபணமாகிக் கொண்டிருக் கிறது. ஒரு குழந்தை பிறந்து வெளியுலகை அடைந்த பின்னர் அது வளர்ந்து பேசப் படிக்கு முன்பே அதன் மூளையில் ஏகப்பட்ட சங்கதிகள் பதிவாக ஆரம்பித்து விடுகின்றன. சப்தங்கள், காட்சிகள், உருவங்கள் என பல விடயங்கள் மூளைக்குள் நினைவுகளாக சேமிக்கப்படுகின்றன. ஒருவர் வளரும் சூழ்நிலைக்கேற்ப, படிக்கும், பார்க்கும், கேட்கும் விடயங்களுக்கேற்ப சேமிக்கப்படும் நினைவுகள் அமைகின்றன.

அத்தோடு ஒவ்வொருவர் மூளையும் தனித்தன்மை வாய்ந்தது. அதன் செயல்பாடு பிரத்தியேகமானது. நன்றாகப் பட்டை தீட்டிய வைரத்தின் மேல் ஒளி படும் போது எப்படி பல வண்ணங்கள் பளீரிடுமோ அது போல மூளைக்கு ஒரு தகவல் செல்லும் போது அதனோடு சம்பந்தப்பட்ட, ஏதாவது ஒரு விதத்தில் தொடர்பு கொண்ட பல நினைவுத் தகவல்கள் மின்னலடிக்கும். இது ஒவ்வொருவருக்கும் ஒரு விதமாய் நிகழும். உதாரணமாக ஒரு வார்த்தையைச் சொல்லி சட்டென்று நினைவுக்கு வருவதை சொல்லுங்கள் என்று கேட்டால் வெவ்வேறு பதில்கள்தான் கிடைக்கும். இனிப்பு என்று சொன்னால் ஒருவர் சர்க்கரை என்பார், ஒருவர் லட்டு என்பார், இன்னொருத்தர் சொக்லேட் என்பார், வேறொருவர் மாம்பழம் என்பார். அது போல வெள்ளை என்றால் ஒருவருக்கு பாலும் , இன்னொருவருக்கு புறாவும் , ஒருவருக்கு மல்லிகையும் , இன்னொருவருக்கு சுண்ணாம்பும் நினைவுக்கு வரும். ஒன்று என்று சொன்னால் ஒன்றே குலம்,ஒருவனே தேவன் என்றோ, வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்றோ, ஒரு குழந்தை போதுமே என்றோ வெவ்வேறு ஞாபகங்கள் நினைவுக்கு வரும். இப்படியான ஞாபகங்கள், சங்கதிகள் மனித மூளையில் குழந்தைப் பருவத்திலிருந்தே சேர்ந்து கொண்டே வரும்.

குழந்தைகளின் மூளையை இரத்தினக் கற்கள் நிரம்பிய பெட்டகமாகவோ, வேண்டாதவையும் அசுத்தங்களும் நிறைந்த குப்பைத்தொட்டியாகவோ மாற்றுவது அன்னையரின் கையில் தான் இருக்கிறது. நல்ல ஆரோக்கியமான குடும்ப சூழலில் வளரும் குழந்தை மிகச் சிறந்த பிரஜையாக உருவாவது திண்ணம். பெரியவர்கள் சண்டைகளைப் பார்த்துப் பழக்கப்பட்ட குழந்தைகள் மனதில் வக்கிர எண்ணங்களும், தாழ்வு மனப்பான்மையும் வளர வாய்ப்புண்டு. நல்ல கருத்துள்ள கதைகள், சான்றோர்கள், அறிஞர்கள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் போன்றவை குழந்தைகள் மனதில் உயர்ந்த லட்சியங்களை உருவாக்கும். ஒழுக்கத்துடன் வளர உதவி செய்யும். அவர்களுக்கு ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான பாதிப்புகள் ஏற்படச் செய்ய வெண்டியது தாய்மார்களின் கடமை, திறமை. குழந்தைகளை, தங்கள் அன்புச் செல்வங்களை பொறுப்புடனே அறிவுக்களஞ்சியங்களாய் , நாளைய சமுதாயத்தின் செம்மையான சக்திகளாய் அன்னையர்கள் உருவாக்குவார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொம்மையம்மா பொம்மை

*பொம்மையம்மா பொம்மை..!*
*நான் விளையாடும் பொம்மை..!*
*அசைந்து அசைந்து போகும்*
*அழகு யானைப் பொம்மை..!*
*தத்தித் தத்தித் தாவும்*
*குட்டி முயல் பொம்மை..!*
*குட்டிக் கரணம் போடும்*
*குட்டிக் குரங்கு பொம்மை..!*
*கர்... புர்னு... கத்தும்*
*கறுப்புக் கரடிப் பொம்மை..!*
*கடக்கு... முடக்குன்னு போகும்*
*கட்டை வண்டிப் பொம்மை..!*
*நன்றாய் வாலை ஆட்டும்*
*நாய்க்குட்டிப் பொம்மை..!*
*நல்ல நல்ல பொம்மை*
*நான் விளையாடும் பொம்மை..!*

# அரசியின் கொட்டாவி



திருமலாம்பாள் என்ற அம்மையார் கிருஷ்ண தேவராயர் துணைவியருள் ஒருவர். அவர் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டே இருப்பார். அது பழக்கமாகி விட்டது. ஆனால் அரசருக்கோ அது பிடிக்கவில்லை. அன்றிரவு அரசர் அரசியின் அருகில் சென்ற போதும் அவள் கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தாள். அப்போது அவள் முகத்தைப் பார்க்கவே மன்னருக்குப் பிடிக்கவில்லை. அன்றிலிருந்து அவளிருக்கும் பக்கம் செல்வதையே மன்னர் தவிர்த்து வந்தார். அம்மையாருக்கு இது மிகுந்த வேதனையைத் தந்தது. மிகவும் வருத்தத்துடன் இருந்த அம்மையாரைப் பார்த்த தெனாலிராமன் என்ன நடந்தது என்று விசாரித்தார். அம்மையாரோ, நான் கொட்டாவி விடுவது பிடிக்காமல் மன்னர் எனது இருப்பிடத்துக்கு வருவதையே நிறுத்திவிட்டார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று வருந்தினாள். தெனாலிராமன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அம்மையாருக்கு வாக்குகொடுத்துச் சென்றான். ஒரு நாள் அரசு அதிகாரிகள் சிலர் அரசரைக் காண வந்தனர். அப்போது தெனாலிராமனும் அரசருடனிருந்தான். அந்த அதிகாரிகள் நாட்டில் பயிர்வளத்தை எப்படி மேம்படுத்துவது என்பது பற்றி அரசருடன் விவாதித்துக் கொண்டிருந்தனர். தெனாலி ராமனோ அவர்களது பேச்சினுள் புகுந்து பயிர் நன்றாக வளர வேண்டுமானால் யாரும் கொட்டாவி விடக்கூடாது என்றான். மன்னரும் மற்றவர்களும் தெனாலிராமனை விநோதமாகப் பார்த்தனர். தெனாலிராமனோ விடாமல் விவசாயம் செய்பவர்கள் யாரும் வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடவே கூடாது. அப்போது தான் பயிர் நன்றாக வளரும் என்றான்.

மன்னருக்கு கோபம் வந்துவிட்டது. ராமா, இது என்ன விநோதம், விவசாயத்திற்காக வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடாமல் இருக்கமுடியுமா? என்றார். வேறென்ன மன்னா, உங்கள் முன்னால் கொட்டாவி விடும்போது உங்களுக்கு கோபம் வருவதைப் போல, பயிர்கள் முன்னால் கொட்டாவி விட்டால் பயிர்கள் கோபித்துக்கொள்ளமாட்டாவா? கேவலம் கொட்டாவியால் ஒருவர் வாழ்க்கை நாசம் ஆக வேண்டுமா? என்று கூறிவிட்டு மன்னரை ஓரக்கண்ணால் பார்த்தார் தெனாலி ராமன்.

மன்னருக்கு தெனாலிராமன் சூசகமாக என்ன சொன்னார் என்று புரிந்து போனது. அப்போதே கேவலம் கொட்டாவிக்காக தன் மனைவியை கோபித்துக் கொண்டேனே என்று வருந்தினார். தெனாலி ராமன் புத்திசாலித்தனமாக தகுந்த நேரத்தில் அதை புரியவைத்தான் என்பதையும் எண்ணி மகிழ்ந்தார். பின்னர் மகிழ்ச்சியில் திளைத்த அம்மையாரும் மன்னரும் சேர்ந்து, தெனாலிராமனுக்கு பல பரிசுகளை அளித்து மகிழ்ந்தார்கள்.

## பொது அறிவு

கண்டங்களில் பெரியது ஆசியாக் கண்டம்.
கடல்களில் பெரியது பசிபிக் பெருங்கடல்.
தீவுகளில் பெரியது ஆஸ்திரேலியா தீவு.
சிகரங்களில் பெரியது எவரெஸ்ட் சிகரம்.
மலைகளில் பெரியது இமயமலை.
ஆறுகளில் பெரியது அமேசான் ஆறு.
ஏரிகளில் பெரிய்து காஸ்பியன் ஏரி.
பாலைவனங்களில் பெரியது சஹாரா பாலைவனம்.
பாறைகளைப் பற்றிய படிப்புக்கு பெட்ராலஜி என்று பெயர்.
வெள்ளை யானைகளின் நிலம் என்றழைக்கப்படுவது தாய்லாந்து.
மலைகளின் நிலம் என்றழைக்கப்படுவது மியன்மார்.
மணலின் வேதியியல் பெயர் சிலிகான் – டை – ஒக்ஸைட்.
மண்புழுவுக்கு ஐந்து இதயங்கள் உள்ளன.
மிக வெப்பமான கோள் வெள்ளி.
உலகில் 2000 வகையான பாம்புகள் உள்ளன.
சூரிய ஒளி பூமியை வந்தடைய 8.3 நிமிடங்கள் ஆகின்றன.
அரபிக் கடலின் ராணி எனப்படுவது கொச்சின்.
உலகில் மின் தடை இல்லாத நாடு குவைத்
மூன்று அடிப்படை நிறங்கள் சிவப்பு , மஞ்சள் , நீலம்
365 நாள்கள் கொண்ட ஆண்டு முறையை ஏற்படுத்தியவர் வாழசவா
உலோக நாணயங்கள் புழக்கத்தில் இல்லாத நாடு பராகுவே (தென்அமெரிக்கா )
பூச்சியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு இந்தியா
சத்தில்லாத உணவு நீர்
கலப்படம் செய்யமுடியாத உணவுப்பொருள் கோழிமுட்டை
பசுமைப்புரட்சி ஏற்பட்ட வருடம் 1960 தாயகம் மெச்சிக்கோ
அமெரிக்க பசுமைப் புரட்சியின் பிறப்பிடம் பொஸ்டன்
உலகில் மிக பிரபலமான பொழுதுபோக்கு தபால் தலை சேகரிப்பு
சுத்தமான தங்கத்தின் கரட் 24 கரட்
கடல் நீர் நீலமாக இருக்கும் அளவு 10 அடி
விமானத்தில் செல்பவர்களுக்கு வானவில் தெரியும் வடிவம் வட்டம்






## வாழ்க்கையில் திரும்பக் கிடைக்காதவை

வாழ்க்கையில் முன்னேறுபவர்கள் மற்றும் முன்னேறிச் செல்பவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்காக காத்திருப்பதில்லை. ஏனென்றால் காலத்தின் அருமையும் மதிப்பும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

வீணாகிய பொன்னான நேரங்கள் ஒருபோதும் திரும்ப வருவதில்லை என்றும் அவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமா எவை எவை வாழ்க்கையில் திரும்ப வராது என்றும் அவர்களுக்கு அத்துப்படி. அவைகள்

அலட்சியபடுத்திய அல்லது நழுவிய வாய்ப்புகள்,சொன்ன சொற்கள் , உன்னுடைய வயது (காலம் அல்லது நேரம் ) போன்றன. இதை முன்னேற விரும்புகிறவர்கள் நன்றாக மனதில் வைத்திருப்பார்கள். அதேபோல் நீங்கள் முன்னேற நினைப்பவர்களா? மற்றவர்களைப் பற்றிக் கவலைகொள்ளாமல் அல்லது காத்திருக்காமல் உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாமல் இடைவிடாது முயற்சியும் அயராத உழைப்பும் கொண்டு வெற்றி கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலியான 5,000 ரூபா தாளை வைப்பிலிட முயன்றவர் கைது

கொழும்பு, மே 27
நாகொடையில் உள்ள அரச வங்கியில் போலி 5,000 ரூபாவை வைப்பிலிடுவதற்கு முயன்ற ஒருவரைக் கைது செய்துள்ளதாக நாகொடை பொலிஸார் தெரிவித்தனர்.
மேசன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். தான் வேலை செய்த வீட்டில் வழங்கிய பணத் தாளையே வைப்பிலிடச் சென்ற தாக அந்த மேசன் விசாரணையின் போது தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (த)

## மேலும் 300 இலங்கையருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை

கொழும்பு, மே 27
மேலும் 300 இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவர்கள் முன்வைத்த கோரிக்கையைக் கருத்திற் கொண்டு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே 400 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## வான் சாரதிக்கு கால் முறிந்தது

யாழ்ப்பாணம், மே 27
எழுதுமட்டுவாழ் பகுதியில் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட பட்டா வாகனம் பஸ்ஸின் பின் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதில் பட்டா வாகனச் சாரதிக்கு கால் முறிந்தது.
இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை எழுதுமட்டு வாழ் முருங்கையடிச் சந்தியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குச் சென்ற இ.போ.ச. பஸ் எழுதுமட்டு வாழ் முருங்கையடிச் சந்தியில் பயணிகளை இறக்கி விட்டுப்புறப்பட்டுச் சென்ற போது, அதே திசையில் இரும்புப் பொருள்கள் சேகரிப்பதற்காக வேகமாகச் சென்ற படி வாகனம் பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில், பஸ்ஸின் பின் பகுதியில் மோதி விபத்துக்கு உள்ளானதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.
வாகனச் சாரதி சிரமங்களின் மத்தியில் பொது மக்களால் வெளியே இழுத்து எடுக்கப்பட்டு பளைமருத்து வமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சாரதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (த-9)


### வீடு வாடகைக்குத் தேவை

ஐந்துபேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நல்லூர், ஆனைப்பந்தி, கந்தர்மடம், திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய பிரதேசங்களில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 026 7619

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி யில் இருந்து சில 100 m தூரத்தில் 35 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6102405

### தோட்டத் தொழிலாளர் தேவை

பயிர் செய்யும் அனுபவம் உள்ள தோட்டத் தொழிலாளர் தேவை. **2015 மே மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை** மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை கீழ் தரப்பட்ட முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு வரவும். தங்குமிடம் மற்றும் உணவு இலவசம்.
**ஆரியசால்**, 2ம் கட்டை, புத்தளம் வீதி, அனுராதபுரம்.
மேலதிகத் தகவல்களுக்கு தொ. பே. இல. **0777 483 107**

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலய ஆசிரியை
திருமதி சுயாதா சர்வானந்தன் B.A.
(M.A. DIP IN WATER RESOURSES, DIP IN EDUCATION)



பட்டப்பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமா பட்டம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இன்று (27.05.2015) புதன்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவதையிட்டும், மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வுபெற வாழ்த்துகின்றோம்

Best Wishes

வாழ்த்துபவர்கள்:
"ராஜ்பவன்" அல்வாய்
சதானந்தன் வள்ளிநாயகி குடும்பம்,
செல்வானந்தன் மாலாவதி குடும்பம்,
கருணானந்தன் பாலினி குடும்பம்,
கோபாலச்சந்திரன் தேவகி குடும்பம்,
றிச்சேட் றஞ்சிதா குடும்பம்.

(C/16180)(10.6)

### கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயில்
### 10 ஆம் திருவிழா விஞ்ஞாபனம் 28.05.2015

நாளை (28.05.2015) வியாழக்கிழமை கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயில் 10 ஆம் திருவிழா விசேட நிகழ்ச்சியாக விசேட நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெற இருக்கிறது. முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரையும் மாலை சிறப்பு கச்சேரியாக 7.30 மணிமுதல் 10 மணிவரையும் இலங்கை இந்திய தலை சிறந்த கலைஞர்களின் விசேட தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்.

**நாதஸ்வரம்**
* ஈழநல்லூர் P.S. பாலமுருகன்
* வழக்கம்பரை சிவகுமார்
* கோண்டாவில் K.P. குமரன்
* கோண்டாவில் K. நாகதீபன்
* தென்னிந்தியா ராஜகோபால்
* நல்லூர் P.S. ஜெயசங்கர்

**தவில்**
* மன்னார்குடி கலைமாமணி M.R. வாசுதேவன்
* கோவிலூர் கலைமாமணி K.G. கல்யாண சுந்தரம்
* அளவையூர் தெட்சணமூர்த்தி உதயசங்கர்.
* ஈழ நல்லூர் P.S செந்தில் நாதன்
* தாராபுரம் V.M.கணேஷன்
* மானிப்பாய் N. பிரசன்னா
* இருபாலை S. முருகையா

(60194) (45.6.3)

### திரியாய் அம்மன் ஆலயம், பச்சிலைப்பள்ளி முகாவில், இயக்கச்சி.
### வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல்

எதிர்வரும் 29.05.2015 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு பூசை ஆரம்பமாகி, பகல் அன்ன தானமும், இரவு பகலாக தாகசாந்தியுடன் மறுநாள் காலை 6.00 மணியளவில் திருக்குளிர்த்தியுடன் நிறைவு பெறும். கோயிலுக்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்குசெய்யப் பட்டுள்ளன.
அன்றைய தினம் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் முன்கூட்டி வியாபார நிலையங்களைப் பதிவு செய்துகொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
0773474011, 0779754537, 0779218830
ஆலய பரிபாலன சபையினர்
(57111)(10.6.3) அம்மன் ஆலயம், முகாவில், இயக்கச்சி.

### சிவாச்சார்ய சேவைக்கான விண்ணப்பம்

மலேசியா ஸ்கொட்றோட் ஸ்ரீகந்த சுவாமி கோயிலுக்கு உதவிக் குருக்களாகச் சேவை செய்வதற்கு விண்ணப்பம் கோரப் படுகின்றது.

**விண்ணப்பதாரர்:-**

1. 40 வயதிற்கு மேல் 60 வயதிற்குட்பட்டவராகவும், வேதாகம தகைமையோடு சிவாச்சார்யாபிஷேகம் பெற்று குறைந்தது 5வருடங்கள் ஆலயத்தில் குருக்களாகச் சேவை புரிந்த அனுபவம் பெற்றவராகவும், சைவப்பெருமக்களின் இல்லங்களில் இடம் பெறும் சடங்குகள் செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கடவுச்சீட்டு (பாஸ்போட்)பிரதி, நிழற்படப் பிரதியோடு நிரந்தர முகவரியையும் குறிப்பிட்டு விண்ணப்பங்களை ஆலய முகவரிக்கு அல்லது ஈமெயில் முகவரிக்கு அனுப்பவும்.
3. சேவைக்காலம் 3வருடங்கள், தங்குமிடம் இலவசம்.
சேவைக்குரிய தகுந்த வேதனம் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி: 15.06.2015

Secretary,
Sri Kandaswamy Kovil,
No - 3, Lorong Scott,
50470 BRICK FIELDS,
KULALUMPUR,
MALAYSIA.
Tel: 0060 322 742 987, 0060322721548
Email: engviries@srikandaswamykovil.org

### அல்வாய் வேவிலந்தை
### ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் கும்பாபிஷேக தினம்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கும்பாபிஷேக விழா 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
அன்றைய தினம் 1008 சங்காபிஷேகமும், பாற்குட பவனியும், அன்னதானமும் நடைபெறும். பாற்குட பவனி குமிழடி விநாயகர் ஆலயத்திலிருந்து காலை 6.00 மணிக்கு புறப்படும்.
பாற்குட பவனியில் கலந்து கொள்பவர்கள் ஆலய பணிமனையில் தங்கள் பெயர்களை முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
T.P: 021 226 4263 பரிபாலன சபை.
(C/16179)(10.6)

### மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும், மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் ,IVF,ICSI யும் கொடை முட்டை (donaor egg), விந்து நன்கொடை (donor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட **வைத்திய நிபுணர் சதானந்தம்** அவர்கள் **திருநெல்வேலி நொதேன் சென்றல்** வைத்திய சாலையில் அளித்து வருகின்றார்.
தொடர்புகளுக்கு:
திருமதி கௌரி இல:0773439988
0212219988 0212219977 0212222263
(C/16178)(10.6.3)




**Vacancies - Full Time**

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.
As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.
Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**LECTURER (IT) - Jaffna / Kilinochchi**
* Must be a graduate in IT/Computing or have the relevant professional qualifications
* Areas of expertise include programming, networking and hardware, software engineering, web designing and development, system analysis and computer architecture
* Should have excellent presentation skills. Having experience in conducting lectures for HND, BIT, BCS and UK Degree programmes.

**ENGLISH Teacher - Jaffna**
* Passionate about teaching English to young learners and adults
* Minimum 1 year teaching experience
* Bachelors Degree (English/English Literature) or TEFL/TKT/CELTA or equivalent prefered

**Graphic Designer - Jaffna**
* Completed Diploma/Certification in Graphic from any accredited Institute.
* Minimum 1-2 years experience
* You should possess good knowledge in Adobe Creative suite (Photoshop, Illustrator) CorelDraw
* English and Sinhala typesetting
* Ability of video Editing would be an added advantage
* Should be able to deliver lectures for subjects related to MICROSOFT products

**Student Counselors - Kilinochchi**
* You should be a Goal oriented, energetic & young individual willing to take challenges
* Fluent in English with basic Computer literacy
* Should be able to work on a flexible working schedule
* School leavers are also encouraged to apply

**Hardware Technician – Jaffna**
* Certificate/Diploma in Hardware and Networking Technology with Minimum 2 years of experience

*How to Apply*
Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

Manager Human Resources
**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142 | Jaffna@esoft.lk
www.esoft.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு: 17 04 1951



இறப்பு: 24 05 2015

# திருமதி தவமணிதேவி (ராசாத்தி) சிவஞானம்

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பாம் ரோட் மட்டக்குளியை வசிப்பிட மாகவும் கொண்ட அச்சுவேலி விஜிதா அரிசி ஆலை உரிமையாளர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியினரின் மூத்த மகளும், இராமலிங்கம் வீதி, முடமாவடி நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமணி இரத்தினவடிவு தம்பதியினரின் மூத்த மருமகளும், திரு. திருமதி ஜயாத்துரை (இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் சம்பந்தியும், ஓய்வுபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் அமரர் சிவஞானம் அவர்களின் பாசமிகு மனைவியுமான தவமணிதேவி அவர்கள் 24 - 05 - 2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சஞ்ஜீவன் (TRAIDER - சிங்கப்பூர்), ராஜேந்திரா (SELECT - U.K.) பார்த்தீபன் (DOCTOR - U.K.) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், தாரணி, கல்பனா, ரேணுகா ஆகியோரின் மாமியாரும், அக்ஷயன், ஜென்சன், ஜானகி, ஜெஸ்னவி ஆகியோரின் பேர்த்தியாரும், அமரர் சந்திரலிங்கம் (மாவட்ட நீதிமன்றப் பதிவாளர், பருத்தித்துறை), பூபாலசிங்கம் (உரிமையாளர், கோசலா என்ரபிறைசஸ், கொழும்பு), புஸ்பராணி, தேவராணி (U.K.), சிவபாதலிங்கம், தனபாலசிங்கம் (உரிமையாளர்கள் விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, நற்குணவதி, ஜெலஜா, அமரர் றெஜிதா, நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜெகேந்திரபோஸ் (U.K.), செல்வஞானம் (கனடா), இந்திரன் (ஜேர்மனி), ஸ்ரீதர் (கனடா), ராசன் (ஜேர்மனி), வாசு (பிரான்ஸ்), ரஜீவன் (கனடா), வெள்ளை (கனடா), குமார் (பிரான்ஸ்), வனஜா (கனடா), சுகிர்தா (U.K.) ஆகியோரின் மைத்துனியும், கிரிசாந் (கோசலா என்ரபிறைசஸ், கொழும்பு), சாருஜன் (PAN ASIA BANK, நெல்லியடி), சங்கீர்த்தா, சரண்ஜா, சாகித்தியா, திலோஜினி, கார்த்திகா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.05.2015) புதன்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.05.2015) வியாழக்கிழமை, 19/2, பாம் ரோட், கொழும்பு - 15இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் பகல் ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கொழும்பு, மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சி. சஞ்ஜீவன் (மகன்)
தொ. இல :- 0717341194.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருச்சபைக்கு யாழில் ஏழு புதிய குருக்கள்

கொழும்புத்துறை, மே 27

கத்தோலிக்க திருச்சபையின் புதிய குருக்களாக ஏழு அருட்சகோதரர்கள் திருநிலைப்படுத்தப்பட உள்ளனர். யாழ். புனித மரியாள் பேராலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் திருச் சடங்கு திருப்பலியில் குருக்களாக அபிஷேகம் செய்து வைக்கப்படவுள்ளனர்.

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த 6 அருட்சகோதரர்களும், அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த ஒரு அருட் சகோதரரும் குருக்களாக அபிஷேகம் செய்யப்படவுள்ளனர்.

ஊறணியை சொந்த இடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருட் சகோதரன் யூஜின் செல்வசசிதரன், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் செபமாலை செப ஜீவன், அருட்சகோதரன் ஜோன் றெக்சன், மயிலிட்டியை சொந்த இடமாகவும் மானிப்பாயை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருட் சகோதரன் ஆபிரகாம் ஸ்கரன்ராஜ், போயிட்டி புனித நீற்றம்மாள் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் செபமாலை சுதர்சன், புலோப்பளை புனித பேதுரு ஆலயத்தைச் சேர்ந்த அருட் சகோதரன் பிரான்சிஸ் டினேஷன், இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்தவரும் அமலமரித்தியாகிகள் சபை அருட்சகோதரனுமாகிய லூக்காஸ் றெஜினியூட் அவலின் ஆகியோரே திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அமல மரித்தியாகிகள் சபை அருட் சகோதரன் லூ.அவலின் மெய்யியல் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் இறையியல் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார். ஏனைய அருட்சகோதரர்கள் இறையியல், மெய்யியல் கல்வியை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் கற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த–135)

# கூட்டுறவுச் சங்கங்களில் காலத்துக்கேற்ற மாற்றம்

## அவசியம் என்கிறார் ஆணையாளர்

அச்சுவேலி, மே 27

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழில் முயற்சியில் காலத்துக்கும் களநிலைக்கும் ஏற்ப மாற்றங்களைச் செய்து சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்தி முயற்சிகளில் கவனம் செலுத்த முன் வரவேண்டும். பாவனையாளர்களுக்கான நுகர்ச்சிப் பொருள்களை மட்டும் விற்பனை செய்யும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை, எதிர்காலம் என்பன கவலைக்குரியதாக உள்ளது. பல சங்கங்கள் இயல்பு நிலையில் செயற்படமுடியாத நிலையில் உள்ளன.

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசு.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட் டம் சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆணையாளர் கலந்து கொண்டு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

யாழ். மாவட்டத்தில் செயற்படும் 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை நட்டத் தில் செயற்படுகின்றன. தமது நடை முறைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இடர்படுகின்றன. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

கூட்டுறவால் மேல்நிலை பெற்ற யாழ். மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்காலம், வளர்ச்சிப் போக்கு நலிவடைந்து செல்வது கவலையைத் தருகின்றது.

சமகால திறந்த பொருளாதாரக் கொள்கை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய தொழில் முயற்சியில் காலத்துக்கும் கள நிலைக்கும் ஏற்புடைய மாற்றத்தைச் செய்வதற்கு முன்வரவேண்டும். நுகர்ச்சிச் செயற்பாடுகளோடு உற்பத்தி முயற்சியில் ஈடுபட முன் வரவேண்டும். புதிய தொழில்முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் மிக நெருக்கடியானகாலகட்டத்தில்பல்வேறுவகையில் மக்களுக்கு உதவியவை கூட் டுறவுச் சங்கங்கள். மக்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கை நிலையை தொடர்ந்து பாதுகாக்க முன்வர வேண்டும். புதிய உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதோடு பாவனையாளர் களுக்கு தரமான தனது உற்பத்தி பொருள்களையும் நியாய விலையில் வழங்கமுடியும்.

நெறியாளர் குழுக்கள் மூன்று வருடம்பதவிக்காலத்தைக்கொண்டன. அவர்கள் பணியாளர் தொகுதியை ஆட்டிப்ப டைக்வோ அலைக்கழிக்கவோ முற்படக்கூடாது. பழி வாங்க முற்படக்கூடாது. பணியாளர்கள் நம்பிக்கை நாணயம், நேர்மையோடு சங்கத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமது பணி நிலையை தொடரவேண்டும். சங்கம் வளர்ச்சி நிலையில் இருக்கும்போது பணியாளர்களின் வாழ்க்கை நிலையும் மேல் நிலை பெறும் – என்றார். (த–11)

# நித்திரையில் கார் செலுத்திய தமிழனுக்கு 4 வருடத் தடை

நாள் ஒன்றுக்கு 18 மணித்தியாலங் கள் வேலை செய்த பின்னர் நித்திரையில் காரைச் செலுத்தி அதிக விபத்துக்களை ஏற்படுத்திய லண்டனில் உள்ள தமிழனுக்கு அந்நாட்டு நீதிமன்றம் 4 ஆண்டுகளுக்குவாகன அனுமதிப் பத்திரத்தைத் தடை செய் யுமாறு உத்தரவிட்டுள்ளது.

சண்முகராசா விநாயகம்பிள்ளை என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபருக்கே இவ்வாறு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர் தனது குடும்பத் தேவைகளுக் காக நாள் ஒன்றுக்கு 18 மணித்தியாலங்கள் வேலை செய்துள்ளதாகவும், வார நாள்கள் முழுவதும் இவ்வாறு வேலை பார்த்து வந்துள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டது.

இவர் இவ்வாறாக வேலை செய்து பின்னர் தனது காரை நித்திரையில் செலுத்தி வந்த நிலையில் அளவுக்கு அதிகமான விபத்துக்களைச் சந்தித்து வந்துள்ளார். தனக்கான காப்புறுதியையும் இவர் அங்கு செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் தனது நித்திரையில் காரைச் செலுத்தி விபத்துக்குள்ளாக்கிய நபர் ஒருவர் இவர் மீது நீதிமன்றத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் இவரது வழக்கு கடந்த வாரம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது.

இவர் தரப்பில் முன்னிலையான சட் டத்தரணி இவர் தனது தனிப்பட்ட தேவைகளுக்காக இவ்வாறு அதிக நேரம் வேலை செய்யவில்லை எனவும், இலங்கையில் உள்ள தாய் மற்றும் இரண்டு சகோதரிக ளின் திருமணத்துக்காகவுமே அதிக வேலையில் ஈடுபட்டதாகத் தெரிவித்து விடு தலைக்குப் பரிந்துரைத்திருந்தார்.

இது தொடர்பில் லண்டன் நீதிமன்றம் இவரால் பாதிக்கப் பட்டவர்களின் நிலையை கவனத்தில் கொண்டு இவரின் வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரத்தை 4 ஆண்டுகளுக்குத் தடை செய்ய உத்தரவிட்டது. (த)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 12 . 1924 — இறப்பு 25 . 05 . 2015



### திருமதி ஞானம்மா சுப்பிரமணியம்


மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூளாய் வீதி வட்டுக்கோட்டை, வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா சுப்பிரமணியம் அவர்கள் 25.05.2015 திங்கட் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மின்சார இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், தங்கம்மாவின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற புஸ்பராணி, Dr.லிங்கராஜா , பத்மராஜா ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற சபாரத்தினம் (பொறியியலாளர் - நீர்ப்பாசன இலாகா), யமுனா, பத்மசுலோஜனா ஆகியோரின் அன்பு மாமியாரும், காயத்திரி - ஞானேஸ்வரன், நிரந்தரி - விமலேந்திரன், கிரிஷானி - பிரசன்னா, பைரவி - Dr.சுகிர்தன், ஸ்ரீராம் ஆகியோரின் பேத்தியாரும், ஷாலினி, வர்த்தனா, ஈசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 28.05.2015 வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் அவரது வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு , கிரியைகள் மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகி, 4.00 மணிக்கு பூதவுடல் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

இல.26, இராஜசிங்க வீதி, வெள்ளவத்தை. 011236104 / 077 0381266

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து வைத்திலிங்கம்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து வைத்திலிங்கம் நேற்று (26.05.2015) செவ்வாய்க்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவானந்தராஜா (சுவிஸ்), கண்ணதாசன் (பிரான்ஸ்), விவேகானந்தன் (ஜேர்மனி), விஜயா (லண்டன்), நேசராணி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயந்தி, இரத்தினமாலா, கலாதேவி, சிவஅன்பு, சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியும், நிருபா, நிகாஷ், கயல், ஜெயன், திவ்வியன், லஷ்மிப்பிரியா, செந்தூர், சந்தியா, டிலக்ஷன், விபூஷன், லஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(C/16183) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் பிரபாகரன்



யாழ். கோப்பாய் மத்தி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா, North york இனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பிரபாகரன் 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான லோகநாதன்-திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாலினியின் அன்புக் கணவரும், அபிஷேக், திஷான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுலோஜனா (டென்மார்க்), புஷ்பரஞ்சனா (கோப்பாய்) பிறேமாகரன் (ராஜன்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன், பாலச்சந்திரன், சிவேந்திரன், பிரதீபா, அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆதிரை சுஜீவன், அனுஜன், ஆஷா, பார்த்தீபன், சுதர்சன் வேணுஜா, செந்துஜன் சாயிஸ்ரூபன், சாயீஸ்வனி ஆகியோரின் அன்பு மாமனும், டனுஜா, டனுஜன், ஆரணி, ஆரதி, ஆகிஸ்ஸன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2015) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பாலச்சந்திரன்
(சண்முகா-மைத்துனர்)

(60258) (10.6)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் முத்துகிட்டிணர்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் 264, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் முத்துகிட்டிணர் நேற்று (26,05,2015) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கண்மணி தம்பதியரின் ஏகப் புதல்வனும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் நாகம்மா தம்பதியரின் மருமகனும், சியாமளாவின் (ஆசிரியை, யா/புனித ஜோண் பொஸ்கோ) அன்புக் கணவரும், கணேசலிங்கம், இராசலிங்கம், கனகேஸ்வரி (கனடா), சுதர்சன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2015) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் 264, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சியாமளா (மனைவி)

(60261) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி ஜனாதிபதியானாலும் நாட்டை ஆள்வது ரணில் தான்

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மே 27
நாட்டில் இன்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன என்றாலும் நாட்டை ஆட்சி செய்வது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
அளுத்கமப்பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
கூட்டத்தில் இருப்பவர்கள் ஊ... சத்த மிடுவதனால் சில அரசியல்வாதிகளின் பெயர்களை இன்று அரசியல் கூட்டங்களின் போது கூறமுடியாமல் உள்ளது. அதனால் நான் சில பெயர்களை குறிப்பிடுவதில்லை.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்றாலும் நாட்டை ஆட்சி செய்வது பிரதமர் ரணில்.
வடக்கில் பொலிஸ் பிரிவை மாற்றுவதும், தெற்கில் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவை நியமித்துக் கொண்டும் அவர்களுக்கு எதிரானவர்களை வேட்டையாடிக் கொண்டு வருகிறார்கள். எனினும் பிரதமர் செய்வது குறித்து ஜனாதிபதிக்குத் தெரியாது. செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் தேர்தல் இடம்பெறுவது உறுதி.
நான் இதனை அரசியல் சோதிடத்திற்கமையவே கூறினேன். சோதிடர்களிடம் கேட்டு இதனை நான் கூற வில்லை.
ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை தொடர்பான இறுதி அறிக்கை செப்ரெம்பர் மாதம் வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 43 இராணுவத்தினரின் பெயர் குறித்த அறிக்கையில் காணப்படுகின்றன.
போர் இறுதிக் கட்டத்தின் கடைசி 5 நாள்கள் குறித்து மாத்திரமே ஜெனிவா அறிக்கையில் உள்ளன.
பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறித்து 5 நாள்களும் சீனாவில் தான் இருந்துள்ளார். செப்ரெம்பர் மாதம் தேர்தல் இடம்பெற்றால் மஹிந்தவுக்காக வருகின்ற மக்கள் கூட்டம் இத்தனைவிட அதிகமாக காணப்படும். எனவே அதற்கு முன்னர் எப்படியாவது தேர்தலை வைத்து விடுவார்கள்–என்றார். (த)

இதய அஞ்சலி

மலர்வு
10.07.2001
உதிர்வு
26.05.2015
தமிழழகன் தர்ஷிகன்
(மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை)
எமது மாணவனின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(பாடசாலைச் சமூகம்)
மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை

# அரச ஊழியரின் பகல் உணவு இடைவேளை 30 நிமிடமே

கொழும்பு, மே 27
அரச ஊழியர்களுக்குப் பகல் உணவுக்காக வழங்கப்படும் இடைவேளை நேரம் 30 நிமிடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகேயினால் சகல அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இந்த விசேட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
பொதுமக்களுக்குச் சிறந்த, வினைத்திறன் மிக்க அரச சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், புதன்கிழமை பொது மக்கள் சந்திப்பு தினம் என்பதனால் அன்றைய தினம் அவசியமான காரணங்கள் தவிர்த்து, விடுமுறை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஏற்கனவே, அரச ஊழியர்களின் பகல் உணவுக்காக வழங்கப்படும் இடைவேளை நேரம் ஒரு மணித்தியாலமாகக் காணப்பட்டது. இதுவே, தற்பொழுது 30 நிமிடமாகக் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# வித்தியாவின் கொலையைக் கண்டித்து அக்கரைப்பற்று மாணவர் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, மே 27
வித்தியாவின் மரணம் தொடர்பில் அமைதியான முறையில் தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா தேசிய பாடசாலை உயர்தர மாணவர்கள்.
நேற்றுப் பாடசாலையின் முன்வாயிலில் 12 மணியளவில் ஒன்று கூடிய மாணவர்கள் பல்வேறு சுலோகங்களைத் தாங்கிய அட்டைகளை கையில் ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
எதிர்காலச் சிற்பிகளை சீரழிக்காதே, பெண்களுக்கெதிரான வன்முறை சட்டவரைவை வலுப்படுத்துங்கள், பெண்களைப் பெண்களாக மதியுங்கள். காமுகர்களைச் சமூகத்தை விட்டு விரட்டுவோம் போன்ற சுலோகங்கள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பயன்படுத்தப்பட்டன.
மாணவர்களாகவே முன்வந்து ஏற்படுத்தப்பட்ட இந்த அமைதிப் போராட்டம் சுமார் 20 நிமிடம் வரை இடம்பெற்றது. (த)

## சப்பச்சி மாவடி பிள்ளையார் பெருந்திருவிழா

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ நடராஜலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியை நடைபெற்று வருகிறது. (த-9)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுமிகள் துஷ்பிரயோகம்

## வவுனியாவில் ஆசிரியர் ஒருவரால்

வவுனியா, மே 26
வவுனியாவில் ஒரே குடும்பத்தைச் சோந்த 3 சிறுமிகள் பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்குள்ளான சம்பவம் இடம் பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–
வவுனியா தெற்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் சில நாள்களாக குறித்த மாணவிகள் தொடர்ச்சியாகப் பல தடவை ஆசிரியர் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இது குறித்து மாணவிகளின் பெற்றோர் பாடசாலை அதிபரிடம் முறையிட்டுள்ளனர். குறித்த பாடசாலை அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளார். அந்தப் பாடசாலை அமைந்துள்ள பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவகர், வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கும் இந்தச் சம்பவம் கொண்டு வரப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். பாடசாலை நிர்வாகம் 3 நாள்கள் ஆசிரியரை இடைநிறுத்தி வைத்துள்ளது. பின்னர் குறித்த ஆசிரியர் பாடாசாலைக்கு வரும்போது பெற்றோர்கள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனா.
இதன் பின்பு குறித்த ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த ஆசிரியர் கல்நாட்டி கணேசபுரம் செட்டிக்குளப் பகுதியில் 6 வயதுச் சிறுமியை துஷ்பிர யோகத்திற்குட்படுத்தியமை தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது. (த-402)

## இருபாலை தென்கோவை பிள்ளையார் மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,மே 27
இருபாலை தென்கோவை அருள் மிகு கற்பக பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வருடாந்த மஹோற்சவம் காலை 10.00மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூன் 10ஆ திகதி சம்பறத் திருவிழாவும், 11ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 12ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (த-ரி)

## கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலயத் திருவிழா

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (த-135)

காணி தேவை
யாழ் நகரை அண்மித்த பலாலி வீதி / கே.கே.எஸ் வீதியில் வியாபார நிலையம் அமைப்பதற்கு பொருத்தமான காணி தேவை.
தொடர்பு - 0770109562

மணமகன் தேவை
றோமன் கத்தோலிக்க 35 வயதுடைய PHD Genetic படிப்பை முடித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு ஒரு தகுந்த மணமகனை எதிர்பார்க்கிறோம்.
T.P: 021 225 5290

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் நீண்டகாலமாகப்பணியாற்றிக் கொண்டிருக்கும் எமது சிரேஸ்ட ஆசிரியை சியாமளாவின் அன்புக்கணவர்
சிவசுப்பிரமணியம் முத்துகிட்டிணர்
2015.05.26 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். இவரின் ஆன்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள்.

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய பழைய மாணவனும், ஊர்ப் பிரமுகருமான "ஜோதிட திலகம்" கலாபூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடை யவும் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை சமூகம்
யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம்
சாவகச்சேரி.

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி


தோற்றம் 19 . 06 . 1949
மறைவு 30 . 05 . 2012
அமரர் இராமசாமி சோமசுந்தரம்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், உரிமையாளர், ஜாதவன் சேவிஸ் ஸ்ரேசன்)
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
எல்லோரையும் அரவணைத்த-அப்பா
விதி அழைத்து நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து சென்ற ஆண்டுகளோ-மூன்று ஆனதப்பா
மீண்டும் ஓர் பிறப்பு இருந்தால் எம்மிடம் வரவேண்டும்
எங்கள் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
புதுத்தோட்டம், அல்வாய் தெற்கு, அல்வாய். T.P: 021 2261415
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

யாழ். நகரில் பிரபல்யமான
கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
May 30ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 30,31,1,2 ஆகிய நான்கு தினங்களில்
- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளும்
Special Trainer
Ganesh Sir
பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-
வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது.
முன்கூட்டியே பதிவு செய்யவும்.
BTEC (off Stanley Road), Jaffna. 077 6131358

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாக பொங்கல் விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஆலயத்தில் இடம்பெற்றது. பக்தர்கள் திரண்டு பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டனர். (த-40)

# வேகமாக பரவுகிறது கண்நோய்

## குடாநாட்டில் பல இடங்களில்

வலி. வடக்கு, மே 27

வலிகாமம் பகுதியில் கடந்த மாதம் முதல் நிலவிய கடும் வெப்பம் காரணமாக ஆரம்பித்த கண்நோய் கடுமையான மழை பெய்த பின்னரும் கூட முற்றுப்பெறாது தொடர்ந்து பரவி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஏப்ரல் மாதம் என்றுமில்லாத வகையில் கடுமையான வெட்பம் நிலவியது. இதனைத் தொடர்ந்து உடுவில்,தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளில் கண் நோய் பரவத் தொடங்கியது.

ஆனாலும் கடந்த இரண்டு வாரங்களாகக் கடுமையான மழை பெய்து வெப்பம் தணிந்த போதிலும் கண்நோயின் தாக்கம் குறைந்தபாடாக இல்லை.

தற்போது யாழ்ப்பாணம் உட்பட தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளுக்கும் கண்நோய் பரவி வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலைகளுக்கு கண்நோய் காரணமாக வரும்நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது. (த-86)

## 30 குடும்பங்களுக்கு ஊரத்தியில் காணிகள்

அராலி, மே 27

அராலி மத்தி-ஊரத்தியில் வாழ்ந்த 30 குடும்பங்களுக்கான காணிப் பத்திரங்கள் வலி.மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் திருமதி. நா.ஐங்கரன் தலைமையில் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட அராலி ஊரத்திக் காணியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு வாழ்ந்து வந்த 30 குடும்பங்கள் தமக்குக் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குமாறு 2011 ஆம் ஆண்டில் இருந்து கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

இதனையடுத்து தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் மற்றும் சபையின் உறுப்பினர்கள் இணைந்து அராலி மத்தி ஊரத்தியில் உள்ள மக்களுக்குக் காணி வழங்குவது எனத் தீர்மானித்தனர்.

இதன் அடிப்படையில் தவிசாளர் தலைமையில் காணி பங்கீடு செய்யப்பட்டு காணி உறுதிப் பத்திரங்கள் யாழ்.செயலக மேலதிக காணி பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு 30 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-50)

# மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு நிதி

## சாவகச்சேரி கைத்தொழில் வுணிகர் மன்றம் வழங்கியது

தென்மராட்சி, மே 27

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நிதியாக ஒரு இலட்சத்து 7 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்ற, மன்றத்தின் 36 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வைத்து 107 மாணவர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

மன்றத்தின் நிதியங்களில் வைக்கப்பட்ட நிதியிலிருந்து கிடைத்த நிதி மாணவர்களுக்கு கற்றல் அபிவிருத்தி நிதியாக வழங்கப்பட்டது. மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், உறுப்பினர் கேசவன் சயந்தன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் மாணவர்களுக்கு கற்றல் அபிவிருத்தி நிதியை வழங்கினர். அத்துடன் மன்றத்தின் விதவை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நிதியத்திலிருந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிதி வழங்கப்பட்டது. (த-9)




புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து பளை வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை மாணவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவியின் கொலைக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என அவர்கள் கோரினர். (த)

# மானிய உர மோசடி கைதாகினர் ஐவர்

மட்டக்களப்பு, மே 27

விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய உரத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஏறாவூர்ப் பகுதியில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மானிய உரத்தை மாற்றிப் பொதியிடும் உரத் தொழிற்சாலை சுற்றி வளைக்கப்பட்டபோதே மோசடி வேலைகளில் ஈடுபட்ட ஆலை உரிமையாளர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அரசால் மானியமாகக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரத்தை விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலைக்குப் பெற்று அதன் பொதியை மாற்றி அதிக விலைக்கு விற்பனை செய்யும் தொழில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்திருக்கின்றது.



இது தொடர்பாக மட்டக்களப்பு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூர் மீராகேணி கிராமத்திலுள்ள அரிசி ஆலையொன்று திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மானிய உரப் பொதிகள் மாற்றப்பட்டு உரம் வேறு பொதிகளில் நிரப்பப்பட்டிருந்ததையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

மோசடியாகப் பொதி செய்யப்பட்ட ஒரு தொகை உரமும் அந்த உரத்தை ஏற்றியிறக்கப் பயன்படுத்தப்பட்ட லொறியும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது விடயமாக குறித்த அரிசி ஆலையின் உரிமையாளர் உட்பட தொழிலாளிகள் மூவரும், லொறிச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (த-10)

# திருமறைக் கலாமன்றத்தின் வைகாசித் திங்கள் பொற்தூறல்

யாழ்ப்பாணம், மே 27

திருமறைக் கலாமன்றத்தின் 'பொற்தூறல்' நிகழ்சித் தொடரில் இந்த மாதத்துக்கான நிகழ்வு 'வைகாசித் திங்கள் பொற்தூறல்' என்னும் பெயரில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இல.286, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரும், கவிஞருமான சோ. பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் யாழ்ப்பாணம் 'சாகித்ய வீணா லயா' வழங்கும் 20 வீணைக் கலைஞர்களின் பங்கேற்பில் திருமதி. விதுஷா கோபிக்கிருஷ்ணாவின் நெறியாள்கையில் விரலிசை நாதம் நிகழ்வும், திருமதி.பத்மினி செல்வேந்திரகுமாரின் நெறியாள்கையில் உரும்பிராய் 'கலைக்கோவில்' மாணவர்கள் வழங்கும் நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

# இந்திய கலைஞர்களின் விசேட இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், மே 27

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் 10ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை இந்தியக் கலைஞர்களின் விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மு.ப 10.00 மணி முதல் நண்பகல் 12.00 வரையும் நடைபெற்று தொடர்ச்சியாக அன்று மாலை 7.30 மணிமுதல் இரவு 10.00 மணிவரை சிறப்பு நிகழ்ச்சியாகவும் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலயத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் மே 27

**யங்கம்பன்ஸ் தொடர்**


கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது

**வளர்மதி வி.க.தொடர்**

யாழ் உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

## 2 நிமிடம் 23 செக்கன்களில் எண்ணூறு மீற்றர்

### தமிழ் மாணவி அசத்தல்



யாழ்ப்பாணம் மே 27

தேசிய கனிட்ட மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமான 16 வயதுக்குட்பட்டோருக்கான 800 மீற்றர் ஓட்ட நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவி தேவதாஸ் டென்சியா முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தியகம விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 16வயதுப் பிரிவினருக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் டென்சியா 2 நிமிடங்கள் 23செக்கன்களில் ஓடி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். டென்சியாவின் பயிற்றுவிப்பாளர் ந.முகுந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி-108)

# கபடியில் கலக்கிய அணிகள்




கட்டையடம்பன் அ.த.க.பாடசாலை




நெல்லியடி மத்திய கல்லூரி




பண்டத்தரரிப்பு ஜசிந்தா கல்லூரி




கிளிநொச்சி இந்துக் கல்லூரி

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடரின் 15 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் கட்டையடம்பன் அ.த.க.பாடசாலை அணியும், பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணியும், 19வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் கிண்ணங்களைப் கைப்பற்றின.

### 15 வயது பிரிவு

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15வயது ஆண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் மன்னார் கட்டையடம்பன் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானது முதல் மன்னார் கட்டையடம்பன் அ.த.க.பாடசாலை அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. முதல் பாதியைப் போலவே இரண்டாவது பாதியிலும் மன்னார் கட்டையடம்பன் அ.த.க.பாடசாலை அணியின் ஆதிக்கம் தொடரப்பட முடிவில் அந்த அணி 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா பரக்கும் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 19:01 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றிபெற்றது.

15வயது பெண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானது முதல் பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணியினர் ஆட்டத்தின் போக்கை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணியின் ஆதிக்கம் ஆட்டத்தின் முடிவுவரை தொடர முடிவில் பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணி 30:07 என்ற புள்ளிகளில் அபார வெற்றியீட்டி சம்பியனாகியது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பரக்கும் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று 3ஆம் இடத்தைக் கைப்பற்றியது.

### 19 வயதுப்பிரிவு

19 வயது ஆண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை சிவநகர் அ.த.க.பாடசாலை அணியால் எதுவும் செய்ய இயலாமல் போனது. இதனால் ஆரம்பம் முதல் வலுவான ஆதிக்கம் செலுத்திய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியினர் 19:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றிபெற்று சம்பியனா கியது. 3ஆம் இடத்துக்கான ஆட்டத் தில் வவுனியா பரக்கும் மகா வித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை கலட்டி றோ.க.த. பாடசாலை அணி மோதியது. இதில் பரக்கும் மகாவித்தியாலய அணி வெற்றி பெற்று 3ஆம் இடத்தைப் பெற்றது.

19 வயது பெண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி மோதியது. இதில் இரு அணிகளும் இறுதியாட்டத்துக்கு உரிய பாணியில் மிகச் சிறப்பாக மோதிக் கொண்டன. ஏனைய இறுதியாட்டங்களைவிட இந்த இறுதியாட்டத்தில் அனல் பறந்தது. இதனால் வெற்றி தோல்விகளின் தீர்மானம் இறுதிவரை எதிர்வுகூற முடியாத ஒன்றாக மாற்றம் பெற்றது. இருந்த போதும் ஆட்ட நேர முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 19:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி வெற்றிபெற்றது. 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா பரக்கும் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி மோதியது. இதில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 27:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அபிவிருத்தி மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் செல்வின், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சி.சுப்பிரமணியேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-422)

# கிண்ணம் கலையொளியிடம்



இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 9 வீரர்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் மாலை 4:00 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகாவித் தியாலயத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அளவெட்டி ஞானவை ரவர் அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானவைரவர் அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலை யொளி அணியினர் 08 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் 5 இலக் குகளை இழந்து 103 ஓட்டங்களை பெற்றனர். அதிகபட்சமாக மோகன் ராஜ் 24 ஓட்டங்களையும் கோகுல் ராஜ் 15 ஓட்டங்களையும் சனந்தன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களை யும் பெற்றனர்.

பந்துவீச்சில் அளவெட்டி ஞானவைரவர் அணிசார்பாக சுபந்தன் 2 இலக்குகளையும் கிருஷாந்த், சுகந்தன், கஜமுகன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 104 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஞான வைரவர் அணி கலையொளியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் ஆரம்பத்திலேயே சரிவுகண்டது. இந்த நிலைமை நீடிக்க முடிவில் சகல இலக்குகளையும் இழந்த நிலையில் 59 ஓட்டங்களையே பெற்று 44 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக கஜமுகன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கலையொளி அணி சார்பாக பிரதீஸ் 3 இலக்குகளையும் சனந்தன் 2 இலக்குகளையும் தீபன் வாமணன், கோகுல்ராஜ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக இணுவில் கலையொளி அணியின் பிரதீஸ் தெரிவு செய்யப்பட்டார். தொடராட்ட நாயகனாக ஞான வைரவர் அணியின் சுகந்தன் தெரிவுசெய்யபட்டார். கிண்ணத்தைக் கைப்பற்றிய இணுவில் கலையொளி அணிக்கு பத்தாயிரம் ரூபா பணப்பரிசிலும் இரண்டாம் இடம்பெற்ற அளவெட்டி ஞானவைரவர் அணிக்கு ஐந்தாயிரம் ரூபா பணபரிசிலும் வெற்றிகிண்ணமும் வழங்கப்பட்டன. (ரி-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் இயக்குநராக கங்குலி



ஐ.பி.எல். தொடர் முடிந்துவிட்ட நிலையில் இந்திய அணி அடுத்த மாதம் பத்தாம் திகதி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள் ளது. இந்த நிலையில் இந்திய அணியின் புதிய இயக்குநர் யார் என்பது ஜூன் மாதம் 6ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை தெரி வித்துள்ளது.

புதிய இயக்குநர் தொடர்பாக இந் தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் அனுராக் தாக்கூர் தெரிவிக்கையில்;


இந்திய வீரர்கள் கொல்கத்தாவுக்கு ஐந்தாம் திகதி வருகின்றனர். இங்கு வீரர்களுக்கு உடற்தகுதி சோதனை நடைபெறும், பிறகு ஜூன் 7ஆம் திகதி பங்களாதேஷ் புறப்பட்டுச் செல்கின் றனர். இந்திய விரர்கள் பங்களா தேஷுக்கு செல்லும்போது இந்திய அணியின் இயக்குநர் யார் என்பது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். பெரும்பாலும் ஜீன் மாதம் ஆறாம் திகதி இந்த முடிவு வெளிவரும். இந்திய கிரிக் கெட்டுக்கு கங்குலியின் பங்களிப்பு மிகப்பெரிது, அவர் ஒரு மிகப் பெரிய கிரிக்கெட் வீரர். காத்திருப் பது நலம், எந்த முடிவெடுத்தாலும் அது இந்திய கிரிக்கெட்டின் நலன் கருதியே எடுக்கப்படும். கங்குலி பற்றி ஊடகங்களில் நிறைய ஊகங் கள் உலா வருகின்றன. எங்களுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுங் கள் என்றார். (ரி)

# ஆதிக்கம் செலுத்திய நியூஸி; அடங்கிப்போனது

# 124 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றி

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து கண்ட எழுச்சி நியூஸிலாந்தின் ஆரம்பவீரர்களுக்கு தடுமாற்றமாக அமைய முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றதும் பயனில்லாமல் படுதோல்வியடைந்தது நியூஸிலாந்து.

இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்தின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது.



முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இன்னிங்ஸிற்காக 389 ஓட்டங்களைப் பெற்றது. 390 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸை முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய நியூஸிலாந்து 523 ஓட்டங்களைப் பெற்று 134 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 135 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 429–6 என்ற நிலையில் இருந்தது. குக் 153 ஓட்டங்களுடனும் மொயின் அலி 19 ஓட்டங்களுடனும். ஐந்தாம் நாளை தொடர்வதற்காக வந்தனர். மேலதிகமாக பத்து ஓட்டங் களை எட் டுவதுக்குள் பவிலியன் திரும்பினார் குக். அலி ஒரு முனை யில் நிலைத்தாலும் பின்வரிசை வீரர்கள் நிலைப்பதாக இல்லை. முடிவில் இங்கிலாந்து 478 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸிற்காகப் பெற்றது.

முதல் இன்னிங்ஜில் 134 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற காரணத்தினால் நியூஸிலாந்தின் வெற்றியிலக்காக 345 ஓட்டங்கள் மட்டுமே அமைந்தது. களத்தில் குப்ரிலுடன் லாதம். முதல் இன்னிங்ஸில் இணைப்பாட்டமாக 148 ஓட்டங்களைப் பெற்றவர்களால் இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தையேனும் பெற முடியவில்லை. ஆரம்பவீரர்கள் இருவருமே டக்கில் பவிலியனுக்குச் செல்ல நியூஸிலாந்தின் முதல் இரு இலக்குகளும் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாத நிலையில் பறிபோனது. நிலைமையை உணர்ந்து மிகவும் நிதானித்தார் வில்லியம்சன். நிலைக்கத்தவறினார் ரெய்லர். நிதானித்த வில்லியம்சனால் நீடிக்க முடிய்வில்லை. முதல் பந்திலேயே வெளியேறினார் மக்கலம் தலைமை இன்னிங்ஸிம் தடுமாற்றத்தைக் காட்ட நியூஸிலாந்து 61–5. வ்றலிங்ஸும் அண்டர்சனும் சற்று நிதானித்தார்கள். இங்கிலாந்தின் பக்கம் இருந்த வெற்றிவாய்ப்பை சமநிலையை நோக்கியாவது திசைதிருப்ப வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினார்கள். ஆளுக்கொரு அரைச்சதத்தைப் பதிவுசெய்து இணைப்பாட்டமாக 107 ஓட்டங்களைக் குவித்தனர். இணைப்பாட்டம் சரிக்கப்பட்டது தான் தாமதம் நியூஸிலாந்தின் பின்வரிசை சீட்டுக்கட்டைப்போல் சரிந்து முடிந்தது. முடிவில் நியூஸிலாந்து 220 ஓட்டத்தில் சுருண்டு 124 ஓட்டங்களால் எதிர்பார்க்காமல் தோல்வியடைந்தது. ஆட்ட நாயகனாக ஸ்ரோக்டஸ் தெரிவானார். (ரி)

## யங் ஹென்றிஸ், நவஜீவன்ஸ்

# அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம் மே 27

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நவஜீவன்ஸ் எதிர் யங்கம்பன்ஸ் அணிகள் மோதிய காலிறுதி ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

குறித்த கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதற்பாதியின் 5ஆவது நிமிடத்தில்இளவாலையங்ஹென்றிஸ்வீரன்சுஜீவன்தனக்கு கிடைத்த பந்தினை கோலாக மாற்ற ஆட்டத்தின் ஆரம்பமே சூடு பிடிக்கத் தொடங்கியது. பழிதீர்ப்பதுக்காக நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் மைதானத்தின் அங்கும் இங்குமாக கடுமையாக போரடினர். ஆனால் அவர்களால் முதல்பாதியில் தமது அணிக்கான கோலினை அடிக்க முடிய வில்லை. மாறாக யங் ஹென்றிஸ் சார்பாக மேலும் ஒரு கோல் ஞானரூபனால் பதியப்பட்டது. இதனால் முதல்பாதியின் முடிவில் யங் ஹென் றிஸ் 2:0 என்ற நிலையில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவெது பாதியின் 18 ஆவது நிமிடம் வரை யங்ஹென்றிஸின் வெற்றிவாய்ப்பு மிகவும் அதிகரித்தே காணப்பட்டது. ஆனபோதிலும் போராட்டத்தை கைவிடவில்லை நவஜீவன்ஸ். போராட்டத்தின் பயனாக ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் பொபி தனது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க நவஜீவன் ஸுக்கு நம்பிக்கை பிறந்தது. ஆட்டத்தை சமநிலையில் முடிக்க வேண் டும் என்ற போராட்டத்தில் நவஜீவன்ஸ், சொந்தத் தொடரில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பில் யங் ஹென்றிஸ் ஆட்டத்தில் அனல் பறக்க ஆரம்பித்தது. ஆட்டம் முடிவதற்கு நான்கு நிமிடம் இருக்கையில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் கௌதமன் தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார் இதனால் ஆட்டநேர முடிவில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ரி–23)

# மைதானத்தில் வசைபாடக்கூடாது

எதிரணி வீரர்களை தனிப்பட்ட முறையில் வசைபாடும் போக்கி னால் என்றாவது ஒருநாள் மைதா னத்திலேயே கைகலப்பு நடக்கப் போகிறது என்று மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங் எச்சரித் துள்ளார்.

வசைபாடுதல் தொடர்பாக ஹோல்டிங் தெரிவித்ததாவது நான் விளையாடும் காலக்கட்டங்களில் வசைபாடுவது கிடையாது. ஒருசில வீரர்கள் பற்றி சிலர் ஓரிரு வார்த்தைகளை நகைச்சுவையாகக் குறிப்பிடுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நான் பார்ப்பதெல்லாம் என்னவெனில் பவிலியனுக்குச் செல்லும் போது ஒருவர் முகத்துக்கு நேராக மற்றொருவர் சில வசைகளைப் பொழிவதையே. இந்த மாதிரி என்னிடம் யாரேனும் நடந்து கொண்டிருந்தால் நிலைமை வேறு மாதிரி சென்றிருக்கும். ஏனெனில் நான் வேகமாக வீசும், ரத்தம் எளிதில் சூடாகும் ஒரு வேகப்பந்து வீச்சாளன், எனவே அப்படி நடந்திருந்தால் அது மைதானத்துடன் முடிந்து விடக்கூடிய ஒரு நிகழ்வாக மட்டுமே இருந்திருக்காது. வசைபாடுவது, பிறகு மைதானத்துக்கு வெளியே அனைத்தும் நலமாக உள்ளது, சண்டையெல்லாம் மைதானத்தோடு முடிந்து விட்டது நாம் நண்பர்கள் என்று தெரிவிப்பது இதெல்லாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதேநிலை நீடித்தால் என்றோ ஒருநாள் மைதா னத்தில் நிச்சயம் சண்டை நடக்கும். வீரர்களின் தனிப்பட்ட உணர்ச்சி கள் மீது வசையை பிரயோகிப்பது நிற்க வேண்டும், இல்லையெனில் மைதானத்தில் ஏதோவொன்று நிகழும் அபாயம் உள்ளது, அப்போ துதான் தெரியப்போகிறது நாம் கொஞ்சம் அதிகமாக எல்லையைக் கடந்து விட்டோம் என்பது என்றார்.

வசைபாடுதல் தொடர்பாக தற்பொழுது விளையாடும் வீரர்களில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வோர்ணர், வற்சன், ஜோன்சன், ஆகிய வீரர்களையும் பாகிஸ்தானைச் சேர்ந்த வக்கார் யூனிஸ், உமார் அக்மல் ஆகிய வீரர்களையும் இந்தியாவைச் சேர்ந்த ஹர்பஜன்சிங், ஹோக்லி ஆகிய வீரர்களையுமே ஹோல்டிங் அதிகம் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# தீவுகளுக்கு எதிரான தொடரில் வற்சன் சந்தேகம்

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரரான ஷேன் வற்சன் லீ பர்லாங் தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் வற்சன் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

அவரது குழந்தைக்கு மெடில்டா விக்டோரியா வற்சன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. குழந்தை தொடர்பாக வற்சன் தனது ருவிட்டரில் மெடில்டா உலகத்தில் காலடி எடுத்து வைத்து விட்டாள். அவளை பார்க்க சிட்னி நோக்கி விரைந்து கொண்டிருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். சிறிது காலம் தொடர்ச்சியாக தனது குடும்பத்தவருடன் காலத்தைச் செலவிட வற்சன் விரும்பிய காரணத்தினால் ஆஸ்திரேலியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருக்கு வற்சனுக்கு ஓய்வளிக்கும் போலத் தெரிகிறது. (ரி)

# கில்லறியை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது லூட்ஸ்

தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தின் திரு விழாவை முன்னிட்டு மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்திய 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் சாவற்காடு கில்லறி விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து பள்ளிமுனை செ.ன்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டத்தில் பெரும் எதிர்பார்ப் புக்கள் இருந்த பொழுதும் இரு அணியினரும் தமக்கான வாய்ப்புகளை கோட்டைவிட்டனர். இந்த நிலைமை நீடிக்க ஆட்டத்தின் முதல் பாதியில் எந்தவித கோல்களும் பதிவுசெய்யப்படவில்லை.



ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடிய வில்லை. இதனால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. ஆட்டத் தில் வெற்றி தோல்வி காண்பதற் காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளிமுனை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இதில் சிறந்த வீரனாக சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி வீரன் டெலிங்ரனும் சிறந்த கோல் காப்பாளரக கில்லறி விளையாட்டுக்கழக கோல்காப்பாளர் கரனும் தெரிவுசெய்யப்பட்டனர். சிறந்த விளயாட்டுக்கழக அணி யாக தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி தெரிவானது. (ரி–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வீரராக சங்கா



கடந்த ஆண்டு சிறப்பாக செயற்பட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான சியெட் கிரிக்கெட் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விருதுகளில் மிகவும் உயரிய விருதான கடந்த ஆண்டின் சிறந்த சர்வதேச வீரருக்கான விருதை இலங்கையின் நட்சத்திர வீரர் சங்கக்கார பெற்றுள்ளார். ஆதிக சதங்கள், தொடர் சதங்கள், தவறாத இலக்குக்காப்பு, கௌரவமான ஓய்வு, கனவான் தன்மை இவை அனைத்தையும் வைத்து பரிசீலனை செய்தே சங்காவுக்கு இந்த விருது கொடுக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் கலக்கிய அஜிங்கே ராஹானே இந்தியாவின் சிறந்த கிரிக்கெட் வீரராக தெரிவு செய்யப்பட்டார். ருஹானே ஐ.பி.எல். தொடரிலும் வருவான ஆதிக்கம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதைவிட இலங்கைக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் 264 ஓட்டங்கள் அடித்ததற்காக ரோஹித் சர்மாவுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ரி)

## ஊக்கமருந்து சிக்கலில் பாகிஸ்தான் வீரர்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ரஸா ஹசன் ஊக்க மருந்து பயன்படுத்தியது சோதனையில் தெரியவந்ததால், அவருக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரஸா கடந்த ஜனவரி மாதம் உள்ளூர் ஆட்டங்களில் கலந்து கொண்டபோது, அவரின் சிறுநீர் மாதிரி ஊக்க மருந்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் முடிவு தற்போது கிடைத்துள்ளதாக கூறியுள்ள கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, அவர் உட்கொண்ட ஊக்க மருந்தின் பெயரை வெளியிட மறுத்துவிட்டது. (ரி)



# ஷரபோவா ஆதிக்கம்



ரென்னிஸில் உலக அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் ரென்னிஸ் தொடர் பிரான்ஸின் தலைநகரான பரீஸில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தின் முதலாவது சுற்றில் மரியா ஷரபோவா, எஸ்தோனியா வீராங்கனை கனெப்ரியை சந்தித்தார். இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஷரபோவா 6-2, 6-4 என்ற நேர்செற்றில் கனெப்ரியை தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் விர்ஜினி (பிரான்ஸ்) 2-6, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வெர்னிகாவை (பராகுவே) வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். இன்னொரு ஆட்டத்தில் கார்லா சுரேஸ் (ஸ்பெயின்) 6-2, 6-2 என்ற நேர்செற்றில் மோனிகா நிகுல்சுவை தோற்கடித்து 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். ஏனைய ஆட்டங்களில் விக்ரோரியா அஸரென்கா (பெலாரஸ்), சமந்தா ஸ்டோசுர் (ஆஸ்திரேலியா), ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி) ஆகியோர் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள். (ரி)

**விற்பனைக்கு**

கூல்பார் ஒன்றின்லைற்சீட் (12அடிநீளம்,5அடி அகலம்),பொமனேரியன் நாய், HPI3 லப்டப்,(window 7)கலர்பிறின்டர் கிடாரங்கள்,சுழல் கதிரை, சொனிசெற் (றேடியோ, 3DVD ,கசற், MP3 1100w கொம்பியூட்டர் மேசைகள் என்பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 071 410 5628

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

நீங்கள் 10 மணித்தியாலங்களுக்கும் மேலாக செலவுசெய்தும் ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் தவறான வழியில் அதை முயற்சிக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்.

எமது ஆங்கிலப்பயிற்சியில் இணைவதன்மூலம்...
4 மணிநேரங்களில் எந்தவொரு நேர்வசனத்தையும் ஆங்கிலத்தில் பேசமுடியும்.
8 மணிநேரங்களில் நேர்,எதிர்,கேள்வி வசனங்களை ஆங்கிலத்தில் பேசமுடியும்.
10 மணிநேரங்களில் முழுமையாக எந்தவொரு விடயத்தையும் ஆங்கிலத்தில் பேசமுடியும்.
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில்பேசமுடியும்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 30.05.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. மதியம் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
திரு.சாம்சனின் நேரடி வகுப்புகள்

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 62?4567

**வேலை வாய்ப்பு**

வடமராட்சிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பணியாளர்கள் ,
கணக்குப் பதிவாளர்கள் மற்றும் உணவு பரிமாறும் பணியாளர்கள் ,
சமையல் பகுதி வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்பு: 077 236 7422 , 077 905 8252

(59721) (5.3)

# பொண்டிங்கும், சச்சினுமே வெற்றிக்கு காரணம்

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். கிண்ணத்தை மும்பை அணி கைப்பற்றியதில் சச்சின் மற்றும் பொண்டிங் இருவரினதும் பங்கு மிகமுக்கியமானது என்று மும்பை அணித்தலைவர் ரோஹித் தெரிவித்துள்ளார்.

சச்சின் மற்றும் பொண்டிங் தொடர்பாக ரோஹித் தெரிவித்ததாவது:- ஐ.பி.எல். தொடரில் மும்பை கிண்ணத்தைக் கைப்பற்றியதுக்கு பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங்கிங் மற்றும் ஆலோசகர் சச்சின் இருவரினதும் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இருவரிடம் இருந்தும் எமது வீரர்கள் ஏராளமாகக் கற்றார்கள். ஆஸ்திரேலியாவின் தங்க மகன் என்று அழைக்கப்படுபவர் பொண்டிங். கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படுபவர் சச்சின். இந்த இருவரும் ஒன்றாகச் சேர்ந்தால் எப்படியிருக்கும் என்பதனை மும்பை அணியை வைத்து உலகம் அறிந்திருக்கும்.



தனிப்பட்ட வீரருக்கு அல்லாமல் அணியில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆலோசனைகளை வழங்கினார்கள். தலைவர் என்ற விதத்தில் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பது எனது நோக்கமாக இருந்தது. ஆனால் எனது நோக்கத்தில் இருந்து சச்சின், பொண்டிங் இருவரினதும் நோக்கங்கள் மாறுபட்டிருந்தது. கிண்ணத்தைக் கைப்பற்றினால் போதும் என்ற குறுகிய கால நோக்கங்கள் அவர்கள் இருவரிடத்திலும் இருக்கவில்லை. வீரர்கள் புதிதாக அறிய வேண்டும் என்பதிலும் அடுத்த தேர்ச்சி மட்டத்தை அடைய வேண்டும் என்பதிலும் பயிற்சியாளர், ஆலோசகர் என்ற வகையில் இவர்கள் திவிரம் காட்டினார்கள். இதுவே இவர்களின் வெற்றி. இதுவே மும்பையின் வெற்றியும் கூட -என்றார். (ரி)

**தைலாப்பயங்கம்**

இணுவில் வட்டுவினி பதியுறை காயத்ரீ பீட கருணைமிகு கண்ணகா பரமேஸ் வரிதேவி ஆலயத்தில் இன்று (27.05. 2015) புதன்கிழமை கும்பாபிஷேக மஹாயாகாரம்பம். நாளை (28.05. 2015) வியாழக் கிழமை எண்ணெய்க் காப்பு.

உலகம் நலம்பெற ஆசீர்வதிக்கின்றேன்

சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்

(50106)(9.3)

**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு**

அமரர்
சின்னையா கந்தையா
மலர்வு
05.10.1924



உதிர்வு
29.04.2015

கடந்த 29.04.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னையா கந்தையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (28.05.2015) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் (29.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் செங்குந்த வீதி, கல்வியங்காட்டிலுள்ள அன்னாரின் தற்காலிக வசிப்பிடத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிரந்தர் முகவரி: வேம்பொடுகேணி, பளை.
தற்காலிக முகவரி: செங்குந்த வீதி, கல்வியங்காடு.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
உதயன்
27 மே 2015 புதன்கிழமை

தர்மத்தைக் காக்கத் தைரியம் வேண்டும். தைரியத்தை இழந்தோமானால், மக்களையும் காக்க முடியாது. தர்மத்தைக் காக்க அதைவிடவும் தைரியம் வேண்டும். அச்சத்தை அகற்றி அனைத்திலும் விலையுயர்ந்த பொருளாகிய தர்மத்தைக் காப்போமாக!

— இராஜாஜி

# தண்டனை



ராஜராஜன்

உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான். குற்றம் புரிந்தவன் தண்டனை அனுபவிப்பான். இவ்வாறுதான் ஆண்டாண்டு காலமாக நாம் கூறிக்கொண்டிருக்கின்றோம். உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பது சரி. ஆனால், குற்றம் புரிந்தவர்கள் அனைவரும் தண்டனை அனுபவிக்கின்றார்களா? இங்குதான் மனதில் நெருடல் ஆரம்பிக்கின்றது. அதிலும் தற்போதைய நீதி நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தாமதங்களும், இழு பறி நிலைகளும் குற்றவாளிகளுக்குச் சார்பானதாகவே அமைந்து விட்டன.

முள்ளிவாய்க்காலில் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்பட்டதை இந்த உலகம் முழுமையாகத் தெரிந்து கொண்டுள்ள போதிலும், அதற்குக் காரணமான குற்றவாளிகளில் ஒருவராவது இதுவரை தண்டிக்கப்பட்டாரா? ஆயிரம் விசாரணைகள் தொடர்பாகக் கதைத்து நேரத்தை வீணடிக்கின்றார்களே தவிர ஒன்றுமே இதுவரை உருப்படியாக நிறைவேற்றி வைக்கப்படவில்லை.

இதேவேளை ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தமக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பில்லையெனத் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றனர். ஆனால், கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக அவர்கள் சிறைக் கம்பிகளுக்கிடையில் தான் தமது வாழ்க்கையைத் தொலைத்து வருகின்றனர். உண்மையில் இவர்கள் இந்தக்கொலையுடன் தொடர்பில்லாத அப்பாவிகளாகவும் இருக்கலாம். ஆனால், நீதித்துறையிலும், அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால் இவர்கள் கொலையாளிகளாகவே பார்க்கப்படுகின்றனர். இருபத்து நான்கு ஆண்டுகளை சிறையில் கழிப்பது என்பதே மிகப்பெரிய தண்டனையாகும். இதற்கு மேலாக அவர்களுக்கு என்ன தண்டனைதான் வழங்க முடியும்?

சட்டம் ஒரு இருட்டு அறை சட்டவாளர்களின் வாதங்களே அங்கு ஒளிபேற்றி வைக்கின் றன என்ற கருத்துப்பட அறிஞர் அண்ணா ஒருமுறை கூறியது நினைவுக்கு வருகின்றது. குற்றச் செயல் ஒன்று இடம்பெற்றுவிட்டால், அதனைச் சாட்சியங்கள் மூலமாக நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகள் தரப்புக்கு உண்டு. இதில் ஏதாவது சிறு தவறு நேர்ந்து விட்டாலும், குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியெனக் கூறப்பட்டு விடுதலையாகிவிடுவார். பின்னர் அந்தக் குற்றச்செயலுக்குக் காரணமானவர் யார் என்பதை எவருமே ஆராய்ந்து பார்ப்பதில்லை. எவரும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதுமில்லை.

குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவதே நீதிமன்றங்களினதும், சட்டவாளர்களினதும் பொறுப்பான பணியாகும். ஆனால், கொலைக் குற்றவாளி ஒருவனை இனம் கண்டுகொண்ட போதிலும், அவன் அள்ளிக் கொடுக்கின்ற பணத்துக்கு அடிமையாகி சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தண்டனைகளிலிருந்து அவனை விடுவிக்கின்ற செயற்பாடுகளில் பிரபலமான சட்டவாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். குற்றவாளி ஒருவனுக்கு உதவி செய்வதற்காக இவர்கள் சட்டம் பயிலவில்லை. அப்பாவி ஒருவன் குற்றவாளியாகச் சித்திரிக்கப்படும் போது, அவனை விடுவிப்பதற்கு முயல்வதுதான் மனச்சாட்சியுள்ள எவரினதும் கடமையாகும். ஆனால், இங்கு மாறுபட்ட தன்மையையே நாம் காண்கின்றோம்.

தண்டனை எனக் குறிப்பிடப்படும் போது நீதிமன்றங்கள் வாயிலாக வழங்கப்படுவனவற்றையே நாம் கருத்தில் கொள்கின்றோம். ஆனால், குற்றம் புரிந்த ஒருவன் தான் புரிந்ததை மனதளவில் ஏற்றுக்கொள்ளும் போது, மனரீதியான தண்டனைகளுக்கு உள்ளாகி விடுகின்றான். மனச்சாட்சி இவனைத் தினமும் அரித்து அரித்து நடைப்பிணமாகவே மாற்றி விடுகின்றது.

> ஆண்டவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உரிய வேளையில் அவர் தண்டனையை வழங்கிவிடுவார் என்ற பயம் மனிதர்களிடத்தில் இருந்ததால், தவறு செய்வதற்கு அஞ்சி நடந்தனர். இதனால் குற்றச் செயல்களும் குறைந்த அளவிலேயே இடம்பெற்றன. ஆனால் இன்று இந்த நிலை மாறிவிட்டது. ஏதோ சமய சம்பிரதாயங்களுக்காக ஆலயங்களுக்குச் செல்கின்றார்களே தவிர, ஆண்டவனிடம் உண்மையான பக்தியையும், பயத்தையும் கொண்டுள்ளவர்களை இன்று காணமுடியவில்லை.

நாம் செய்கின்ற தவறுகள், குற்றங்களுக்கு என்றோ ஒருநாள் தண்டனை அனுபவித்துத்தான் தீரவேண்டும். ஆனால், இது எந்த வகையில் நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைக் கூற முடியாது.

முன்பெல்லாம் ஆண்டவனுக்குப் பயந்து நடக்கின்ற வழக்கம் மனிதர்களிடத்தில் காணப்பட்டது. ஆண்டவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உரிய வேளையில் அவர் தண்டனையை வழங்கிவிடுவார் என்ற பயம் மனிதர்களிடத்தில் இருந்ததால், தவறு செய்வதற்கு அஞ்சி நடந்தனர். இதனால் குற்றச்செயல்களும் குறைந்த அளவிலேயே இடம்பெற்றன. ஆனால் இன்று இந்த நிலை மாறி விட்டது. ஏதோ சமய சம்பிரதாயங்களுக்காக ஆலயங்களுக்குச் செல்கின்றார்களே தவிர, ஆண்டவனிடம் உண்மையான பக்தியையும், பயத்தையும் கொண்டுள்ளவர்களை இன்று காணமுடியவில்லை. இதனால் எதனையும் கூசாது செய்வதற்கு இவர்கள் துணிந்துவிடுகின்றனர்.

இந்த உலகத்தைத் திருத்துவதற்கு தண்டனைதான் ஓரே வழியென்றால் எங்கு பார்த்தாலும் தண்டிக்கப்படும் மனிதர்களையே எம்மால் பார்க்க முடியும். பூவுலகில் குற்றம் புரிந்தவர்கள் நரகலோகத்தில் தண்டனைகளை அனுபவிக்க நேரிடுமெனக் கூறப்படுவதுண்டு. கொடிய குற்றவாளிகளைக் கொதிக்கும் எண்ணெய் நிரம்பிய பெரிய பாத்திரத்தினுள் உயிரோடு தூக்கிப்போட்டுவிடுவார்கள் எனவும் கூறுவார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் தலைகளை வெட்டிச் சாவுத் தண்டனைகள் நிறைவேற்றப்படுவதைக் காண முடிகின்றது. அங்கு திருட்டுச் செயல்களில் ஈடுபடுபவர்களின் கரங்கள் துண்டிக்கப்படுவதும் உண்டு. மேலும், அங்கு இடம் பெறுகின்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமக்கான தண்டனைகளை மனிதர்களே தீர்மானித்து விடுகின்றனர். ஆனால், அவை நிறைவேற்றப்படும் முறைகளில்தான் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தாம் புரிந்த தவறுகளுக்கான தண்டனைகளை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் ஏற்படும்போதுதான் மனிதர்கள் முழுமையான மனிதர்களாக மாறிவிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் முக்கியத்துவம்

அரிது! அரிது! மானிடராகப் பிறத்தல் அரிது! அதிலும் கூன், குருடு,செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. ஆகவே இந்த அரிதான மானிடப்பிறப்பை எடுத்தது நமக்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகும். இதனை நாம் சிறந்த முறையில் பயன்படுத்தி நமது வாழ்வில் ஏதாவதொன்றைச் சாதிக்க முன்வர வேண்டும். நாம் சாதிக்கப் பல்வேறு துறைகள் வழிவகுத்துக்கொடுத்துள்ளன. ஆயினும் கல்வித் துறையில் சாதிப்பது என்பது மிகவும் மகத்தானதும் பெருமைக்குரியதுமாகும். இந்த வகையில் கல்வியானது நமது வாழ்க்கையில் ஏதாவதொரு வகையில் ஆதிக்கம் செலுத்துவதைக் காண முடியும். கல்வி ஒன்றே இவ்வுலகில் அழியாச் செல்வமாக உள்ளது. பொருள் செல்வமான்து இயற்கைச் சீற்றங்களால் அழிந்தும் நாசமடைந்தும் செல்வது மட்டுமல்லாது எம்மைத் துயரங்களிலும் மூழ்கடித்து விடுகின்றது. ஆனால் கல்விச் செல்வமானது,

வெள்ளத்தால் அழியாது
வெந்தழலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளருக்கோ பயமில்லை
காவலுக்கோ
மிக எளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்கப்
புறம்பாகப்
பொருள் தேடி உழல்கின்றார்!

போன்ற இந்த இயல்புகளைக் கொண்டுள்ளது.



அழியாச் செல்வத்தை அடைய வேண்டும் என்னும் அவா நம்முள் இயற்கையாகவே இருந்தாலும் முத்துச்சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும் போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் பேதமை என்னும் இருளில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அந்த அறி யாமையில் இருந்து நீங்கி வந்தால் மட்டுமே கல்வியின் சிறப்பை உணர்ந்து, அதனை மேலும் சிறப்பிக்க முடியும் என்பது எனது கருத்தாகும். நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் எத்தனை கட்டடங்கள், மாடமாளிகைகள், உயிர்கள் அழிவுற்றன. ஆனால் அந்த மக்கள் கற்ற கல்வியானது அவர்களினுள்ளே எப்போதும் நிலைத்திருக்கும். எனினும் கல்வியை விட ஏனைய செல்வங்கள் தேவையில்லை எனக் கூற முடியாது. ஏனெனில் இந்த மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கும் பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்வதற்கும் ஏனைய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் பொருட் செல்வமானது இன்றியமையாததே. எனினும் இந்தச் செல்வத்தை ஆரவாரம் இல்லாமலும் எல்லாம் தனக்கே என்று கருதாமலும் பிறருக்கும் பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்த வேண்டும். கல்வியின் சிறப்பைப் பற்றி அறிய நாம் என்றுமே முயற்சிக்க வேண்டும்.

இதற்கு நமக்குப் பல உயர்ந்த அறிவுடையோர்கள் உதவுகின்றனர். அவர்கள் பட்டினத்துப் பிள்ளையார். திருவள்ளுவர், ஔவைப்பிராட்டியார், சேக்கிழார் பெருமான் என்போராவர். கேடில் விழுச் செல்வங் கல்வியொருவருக்கு மாடல்ல மற்றுப் பிற எனவும் விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் எனவும் கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்எனவும் கல்வியின் சிறப்பைப் பற்றி தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருவாய் மலரந்தருள்ினார். அத்தோடு சங்க கால பெண் புலவரான ஔவைப் பிராட்டியார் மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னனுக்குத் தன் தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என கற்றவர்களுக்குக் கிடைக்கின்ற சிறப்புப் பற்றி இந்தச் சிறப்பான பாடல் அடிகள் மூலம் கூறியுள்ளார்.

கல்வியைக் கற்பதற்கு ஆண், பெண், மதம், சமயம், கலாசாரம் என்ற எந்த விதமான வேறுபாடும் இருக்கக் கூடாது. இதுபற்றி கல்வியிற் சிறந்த கம்பர்

*பெருந்தடங்கட் பிறைநுதரக்*
*கெலாம்*
*பொருந்து செல்வமுங் கல்வியும்*
*புத்தலால்*
*வருந்தி வந்தவரக்கீதலும்*
*வைகலும்*

விருந்துமன்றி விளைவன யாவையே என்று கூறியுள்ளார். எனவே அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் முயன்று வருவதோடு உயர்ந்த நூல்களைக் கற்று வரும் போதே அந்த நூல்களில் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களையும் நாம் பழகி வருதல் வேண்டும். எமது செயலுக்குத் தக்கபடி இறைவனை வணங்கியும் ஆவினைப் பாது காத்தும், ஈகை அறங்களைச் செய்தும், எல்லோரிடத்தும் இன்சொற்களைப் பேசியும் ஒழுகுதலே அழியாச் செல்வமாகிய கல்வியின் பயனாகும். எனவே மாணவர்களாகியவர்கள் நம் தமிழ்ச் சமூகத்தை உயர்த்த வேண்டுமெனில் அது கல்வி ஒன்றால் மட்டுமே முடியும் என உணர்ந்து செயற்பட வேண்டும்.

> **இந்த மண் ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற் கும் பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்வதற்கும் ஏனைய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் பொருட் செல்வமானது இன்றியமையாததே. எனினும் இந்தச் செல்வத்தை ஆரவாரம் இல்லாமலும் எல்லாம் தனக்கே என்று கருதாமலும் பிறருக்கும் பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்த வேண்டும். கல்வியின் சிறப்பைப் பற்றி அறிய நாம் என்றுமே முயற்சிக்க வேண்டும்.**



**ப.அனோஜா,**
**யா/வேம்படி மகளிர்**
**உயர்தரப்பாடசாலை, தரம் 11டி.**

# வன்முறை மறுப்போம்!

வன் முறை நமது வாழ்வை சீரழித்து வருகிறது.

சமூக அசைவியக்கத்தின் ஒவ்வொரு அசைவிலும் வன்முறை. மனித வாழ்க்கையின் ஆதாரப் பண்பான மனித நேயத்தைப் படிப் படியாகப் பறித்து, சிதைத்து வன் முறைப் பிரியர்களாக மாற்றி வருகிறது.

சாதி, மதம், மொழி, இனம், பாலினம் என பல்வேறு தளங்களிலும் வன்முறை, வன்முறை அரசியல், கருத்தியல் பண்பாடு என எங்கும் வியாபித்து வன்முறை மீது காதல் கொண்ட மனிதர்களாக வாழ்ந்து வரக்கூடிய அபாயச் சூழலில் நாம் ஒவ்வொருவரும் அனைத்து வகையான எந்த வடிவத்திலும் வெளிப் படும் வன்முறைகளுக்கு எதிராகப் போராடுவது, குரல்' கொடுப்பது மனித சமூகத்தின் தார்மிகக் கடமை.

இன்றைய காலத்தேவை வன் முறைக்கு எதிராக மனிதத்துவத் தைத் தூக்கி நிறுத்துவதுதான்.

இந்த உயரிய குறிகோளை முன் நிறுத்தி வன்முறை மறுப்பு ஆண்டில் பயணம் தொடர மனித நேயர்கள் ஒன்று கூடி வருகின்றனர்.

சாத்தியமான அனைத்து வழிகளிலும் வன்முறை மறுப்பு மேற் கொள்ள அனைவரையும் கூவி அழைக்கின்றனர்.

வன்முறை மறுப்போம் அன்புநெறி வளர்ப்போம் !

நாம் அனைத்து வன்முறைகளி லிருந்தும் எம்மை விலக்கிக் கொள்ளவும், அவற்றைத் தடுக்கவும் உறுதி ஏற்போம்.

மனிதர்கள் ஒருவரையொருவர் துன்புறுத்துவதும், பிற உயிரினங் களைத் துன்புறுத்துவம் நாகரிக மல்ல என்பதை உணரவேண்டும். எல்லா உயிர்களும் இன்புற்றி ருக்கும் அமைதி உலகம் உருவாக உழைப்போம்.

மதங்களின் பெயரால் ரத்தம் சிந்துவதும், உயிரிழப்பு உண்டாக்குவதும் உண்மையான ஆன்மிக மல்ல என்பதை உணர்ந்து அன்பு நெறி வளர்க்க முயற்சிப்போம். சாதியின் பெயரால் சக மனிதரைத் துன்புறுத்துவதும், எரிப்பதும், கொல்வதும் மக்களாட்சிப் பண்புக்குத் தலைகுனிவே. மானுடர் அத்தனை பேரும் நிகர் எனும் அன்பு முரசறைவோம். பெண்கள், குழந்தைகள், பலவீனர்கள் மீதான வக்கிரம், வன்முறை யாவும் மனிதாபிமானமற்றவை. எனவே அவர்களின் உரிமைக்கும், பாதுகாப்புக்கும் குரல் கொடுப்போம். தொண்டாற்றுவோம்.

நமது வாழ்வாதாரமான இயற்கையையும், நமக்கு முன் தோன்றிய பல்லுயிரினங்களையும் காப்பது மனித குலத்தின் கடமை. எனவே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் உணர்வை வளர்ப்போம்.

இவ்வாண்டில் அமைதிப் பண்பாடு சிறக்க உலக நாடுகள் சபை விடுத்துள்ள வேண்டுகோளை எங்கும் பரப்பவும், அன்பு தழைக்கவும், தொழில், செயல், சிந்தை ஆகிய அனைத்தாலும் முயல்வோம் என உறுதியளிப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக கல்வி ஆளுமை கொண்ட

## பண்பாளர் கலாநிதி நிர்மலாதேவி நல்லையா



கல்வி அழகே அழகு என்பதற்கமைய வாழ்ந்து காட்டிய யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி நிர்மலாதேவி நல் லையா இன்றுடன் ஓய்வு பெறுகிறார். இவர் ஊரிக்காடு முள்ளியான் என்ற அழகிய கிராமத்தில் பிறந்தார். தனது கல்வியை வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திலும் நாகர்கோவில் மகாவித்தியாலயத்திலும் தொடங்கி கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டதாரியாக முதலாம்தரத்தில் சித்தியடைந்தார். மும்மொழித் தேர்ச்சியுடைய இவர், காலி மல்கநவ் மத்திய கல்லூரி, யா/நாவாந்துறை Rctms, யா/இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் சிறந்த அர்ப்பணிப்பான கல்விச் சேவையை ஆற்றினார். இதன் பயனாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரானார். தமிழ்மொழி கல்வியியல் கற்பிப்பதில் சிற்புத் தேர்ச்சியுடையவர். இலங்கையிலுள்ள எல்லா மாவட்ட ஆசிரிய மாணவர்களும் இவரிடம் பயின்றிருக்கின்றனர். தனக்கென ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கிய நல்லாசிரியையாகத் தனது கல்விப் பணியைத் தொடர்ந்தார்.

அமைதி, சாந்தம், நிதானம், அடக்கம், இனிமையாகப் பழகும் பண்பு, வெற்றி–தோல்விகளைச் சமமாக ஏற்று மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் மனித மாண்பு கொண்ட நல்லாசிரியையாகத் தனது கடமைகளை ஆற்றினார். இவர் அந்தக் கடமைகள் ஊடாக தனது ஆர்வத்தாலும், ஈடுபாட்டாலும் தொடர்ந்து உயர் கல்வியைக் கற்று பட்டப்பின் கல்வி, டிப் ளோமா கல்வியியல், முதுதத்துவமாணி, கல்வியியல் கலாநிதிப்பட்டம் வரை உயர்ந்தார். அவர் பெற்ற பாடங்கள் அவரை மேலும் கல்விப் பணியாற்றத் தூண்டின.


மனிதனுள் ஆழ்ந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி என்றார் சுவாமி விவேகானந்தர். மனித சிந்தனை கல்வியால் கூர்மை பெற அந்தப் பூரணத்துவம் இயல்பாகவே வெளிக்கிளம்பும். இந்த வகையில் தான் கற்ற கல்வியால் பூரண அர்ப்பணிப்பான கல்விச் சேவையை ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கினார். நல்லாசிரிய வகிபாகத்தில் முன் மாதிரி ஆசிரியராக தன் செயற்பாட்டால் நடந்து காட்டினார். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். நூல்களை எழுதினார். சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்குகொண்டார். இந்தியா, ஆஸ்திரேலியா மலேசியா ஆகிய நாடுகளில் தொழில் வாண்மைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக, உபபீடாதிபதியாக இருந்து உயர்வான கல்விப் பணி ஆற்றினார். நிதி நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்து மிக நேர்மையாக கண்ணியமாகக் கடமையாற்றினார். கல்லூரியின் வளர்ச்சிக்கு இரவு பகலாக உழைத்தார். உயர்வு தாழ்வு பார்க்காமல் எல்லோரையும் மதித்து அவர்களுக்கு கௌரவமளித்து தனது மதிப்பையும் கௌரவத்தையும் உயர்த்திக்கொண்டார். உதவி தேவைப்படும் ஊழியர்களுக்கு தன்னாலான அனைத்து உதவிகளையும் மனமுவந்து அளிக்கும் பண்பாளர். எவ்வித முகமனும் பாராமல் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு வழிகாட்டி கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் ஒழுகச் செய்த உயர் சேவையாளர், செயல் வீரர்.

சொற்களைவிட செயல்களே உரத்த குரலில் கேட்கும். ஒருவரது பணியை, எழுத்து ஆக்கங்களை விட உரத்த குரலில் ஒலிப்பது அவர் சமூகத்துக்காக ஆற்றிய செயல்களே ஆகும். தான் கற்றதை சிந்தித்ததை தான் வாழும் சமூகத்துக்கு சோர்வின்றி வெற்றிகரமாக வழங்கி அதனை அந்தச் சமூகம் நுகர்ந்து பயன்பெறுவதைக் கண்களால் கண்டு மகிழ்பவரே உண்மையான கல்வியியலாளன். இதற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டவர், இனியும் செயற்படப் போபவர் கலாநிதி நிர்மலாதேவிநல்லையா அவர்கள். தான் கற்பித்த ஆசிரிய மாணவர்களுடாக கல்விச் சமூகத்துக்குப் பல அர்ப்பண சேவைகளை ஆற்றி வருகிறார். அவரது சேவைகள் ஓய்வு பெற்றாலும் எம் மண்ணுக்குக் கிடைக்க வேண்டும். அவரது கல்வி–சமூகப்பணிகள் தொடர வாழ்த்துகின்றோம்.

**பா.தனபாலன், உபபீடாதிபதி**
**(நிதி, நிர்வாகம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)**

---



# இடத்து(ர்) விளக்கு...!

> யார் யாரோ ஏதேதோ எழுதி, கெஞ்சிக் கூத்தாடி விற்க விழையும் இத்தம்பட்ட உலகில் சரக்குள்ள இவர் போன்றோர் இலக்கியச் சோம்பேறிகளாய் இருந்து விட்டுப் போவதை என்ன வென்பது....?

தம்மைத்தாமே அறிவாளிகள் என தகுதிக்கு மீறிப் பீற்றிக் கொள்வோர் உள்ளனர். தமது அறிவை, ஆற்றலை சமுதாயம் கண்டு கொள்ளவில்லை வெறும் பட்டங்களை மட்டுமே பார்க்கின்றனரே என நியாயமாக ஆதங்கப்படுவோரும் உள்ளனர். பிறிதொரு சாராரும் இருக்கின்றனர்... அவர்கள்தான் தம்முடைய அற்புதமான பிறவித் திறன்களைவெளிக்காட்டிக்கொள்ள விரும்பாத, அதில் கூட அலுப்படைகின்ற விநோத மனிதர்கள்!... அதிகம் அறியப்படாமலும், தமக்குரிய உச்சங்களைத் தொடாமலும் மறைந்து விடுகின்ற அப்பேர்ப்பட்ட அறிஞர்ளை காலந்தாழ்த்தியாவது வெளிச்சம் போட்டுக்காட்ட விரும்பியதால் இதனை எழுதுகிறேன்.

சிவபாதசுந்தரம் எனும் ஒரு மொழியியலாளர் Linguist 30.5.2014அன்று தனது 76 ஆவது வயதில் மீசாலையில் காலமாகிவிட்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கண சுத்தமாக எழுத, பேச வல்ல இவர், தமிழில் மெச்சத்தக்க கவித்துவம் கொண்டவர். மகத்தான இவ்விரு மொழிகளிலும் கவிதை, கட்டுரைகளைத் திறனாய்வு செய்யுமளவுக்குப் புலமை மிக்கவர். நிறுவனங்களிலிருந்து மு.மேத்தா வரை ஏன் டி.ராஜேந்தர் வரை அவர் கவிதைகளை நிறையவே படித்திருந்தார். தன் பங்குக்கு படைத்தும் இருந்தார். ஷேக்ஸ்பியர்,யல்லி, வேட்ஸ்வேத், பேர்ணாட்ஷோ என்று அன்னாரது ஆங்கில விருப்பும் வியாபித்திருந்தது. தாகூர், ஜிப்ரான் கவிதைகளை அவர் மிக வும் நேசித்தார். புரிந்துகொள்ளக் கடினமான ஜித்து கிருஷ்ணமூர்த்தியின், ஓஷோவின் தத்துவ விசாரங்களை கணிசமாய் விளங்கிக்கொண்டு சிலாகிக்குமளவுக்கு மேதமை கொண்டிருந்தார். ஃபிரெஞ்ச், ஜேர்மன், இலத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளுக்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமையைச் சுட்டிக்காட்டும் அளவுக்கு கெட்டிக்காரனாயிருந்தார்.

இவ்வளவும் இருந்த அறிஞனுக்கு புத்தகம் போடும் ஆசை மட்டும் இருக்கவில்லை. யார் யாரோ ஏதேதோ எழுதி, கெஞ்சிக் கூத்தாடி விற்க விழையும் இத்தம்பட்ட உலகில் சரக்குள்ள இவர் போன்றோர் இலக்கியச் சோம்பேறிகளாய் இருந்துவிட்டுப் போவதை என்ன வென்பது....?

மிகுந்த சுய மரியாதைக்காரனான சிவபாதசுந்தரம், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்திலே, கச்சேரி செய்ய வந்து, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் காலில் விழுந்து சீர்காழியைக் கண்டு கொதித்து, எடுத்த அனுமதிச்சீட்டை யாரிடமோ கொடுத்து விட்டுத் திரும்பியவர். ஒப்புற்ற நம் நாட்டுக்கவி உருத்திரமூர்த்தியை மிகநேசித்தாலும், மகாகவி என்ற அடைமொழி பாரதிக்கு மட்டும்தான் என்று கோபித்தவர்.

தனக்குப் பிடித்த தரமான மனிதர்களோடு மட்டும் இலக்கிய வாதம் செய்த இவர் கைநிறையக் காசு தந்த தொழிலை, ஒருவிதமான வித்துவக்கிறுக்கோடு உதறிவிட்டு வந்து மிகக் கிராமியமான மீசாலையில் மிடுக்கோடும், எளிமையோடும் வாழ்ந்தவர். அங்கே அவரை ஒரு பகுதி நேர ஆங்கில ஆசானாகவே பலருக்கும் தெரியும்.

தனக்குப் புத்திரபாக்கியமில்லாத பெரும் சோகத்தைக்கூட, இங்க மீசாலையில், எங்கட பகுதியில் கனபேர் நாமிருவர்நாமிருவர்தான் என நகைச்சுவையோடு சொன்ன இந்த மட்டக்களப்பின் மைந்தன் தன்வசம் வைத்திருந்த நூல்கள் கனதியானவை. அவர் யாத்த பல கவிதைகளும்குறிப்புக்களும்கைநழுவிப் போய்விட்ட நிலையில் இந்த நினைவுக்குறிப்பு ஓர் ஆவணமாய் அமையக்கூடும் என்பது எனது நம்பிக்கை.

**ஜோஜ் ஜெயபாலன்,**
**வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவில் பரதம்

பரதகலாவித்தகர். ந. ஆஷாயினி.

கலைகளை வளர்ப்பதற்காகவும், சமூக விழிப் புணர்வைத் தூண்டுவதற்காகவும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக் கப்பட்ட துறையே சினிமாத்துறையாகும். ஒரு கதை யினையோ, சம்பவத்தினையே மைய மாகக் கொண்டு இயக்குநர்களின் கற்பனைத் திறன் கொண்டுமெருகூட்டப்பட்டுநடிகர்களின் ஆழ்ந்த நடிப்பின் மூலம் கதைக்கருவானது வெளிக்கொணரப்படுகின்றது. இவை மக் களின் நன்மைகருதியேதயாரிக்கப்பட்டுவந் தன. இன்றுசினிமாத் துறையானதுவெறும் பொழுதுபோக்கிற்காகவும்,வருமானத்தைஈட்டும் நோக்குடனும் பயன்படுத்தப்பட்டுவருகின் றது கலைஞர்களின் திறமையைவெளிக் கொணர அவர்களுக்கென்றே கதை உருவாக் கப்பட்டு திரைப்படமாக வெளிவந்த காலங் களும் உண்டு. முக்கியமாகநடனக்கலைஞர் களின் புகழ் சினிமாவின் மூலமேபரப்பப்பட்டு வந்தது. அன்று தொடக்கம் இன்றுவரை சினிமாவில் நடனத்தின் பங்கும், நடனக் கலைஞர்களின் பங்களிப்பும் அவசியமான தொன்றாகவே காணப்படுகின்றது.

திரைப்படத்துறைதமிழ்நாட்டில் தொடங்கி யகாலத்தில் மௌனப்படங்களாகவே இருந் தன. பாட்டு இல்லாத காரணத்தினால் அப் படங்களில் நடனமும் இடம்பெறவில்லை. பின்னர் திரைப்படங்கள் பேசஆரம்பித் ததைத் தொடர்ந்துபாடவும் ஆரம்பித்தது. இவ்வாறுதிரைப்படங்கள் பேச ஆரம்பிக்கவே நடனமும்அவற்றில் ஓர் அங்கமானது.

ஆரம்பகாலங்களில் நடிகர், நடிகையர் தங் களது பாட்டுக்குத் தாமேநடனம் அமைத்து ஆடினார்கள். இப்பாடல்கள் பெரும்பாலும் நாடகமேடையில் பாடப்பட்ட பாடல்களாகக் காணப்பட்டதனால் சினிமாவிலும் அப்பாடல் களுக்குமேடை நிகழ்ச்சியில் சொல்லித் தரப்பட்டதன்படியேஆடிப் பூர்த்திசெய்தனர். ஆனாலும் புதுப்புதுப் பாடல்கள் பலவர்ண மெட்டுக்களில் அமைக்கப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டபோது அவைகளுக்குரிய நடனத் தினை ஒரு நடன இயக்குநர் கற்றுத்தர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் சினிமாத்துறையில் நடன இயக்குநர் என்ற பிரிவுஉதயமானது.

ஆரம்பத்தில் சினிமாப் பாடல்களுக்கான நடனம் பெரும்பாலும் சாஸ்திரிய நடனத் தையே ஒட்டி அமைந்திருந்தது. இருப்பினும் தமிழில் முதலாவதுபேசும் படமான 'காளி தாஸ்' இல் சாஸ்திரியநடனம் இடம்பெற்ற தற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கப் பெற வில்லை.

சினிமாவின் ஆரம்பகால கட்டத்தில் இந்திய சுதந்திரத்திற்காகப் போராட்டம் நடந்தகாலப் பகுதியில் விழிப்புணர்வு சம்பந்தப்பட்ட தாகவும், சுதந்திரம் சம்பந்தப்பட்டதாகவும் திரைப்படங்கள் தோற்றம் பெறலாயின. அத் தகைய படங்களில் பாடல்களுக்கேமுதலிடம் காணப்பட்டதை அறியமுடிகின்றது. இந்தக் காலகட்டத்தில் தான் தேவதாஸிகள் சமு தாயத்தால் புறக்கணிக்கப்பட்டு நாட்டியக் கலையும் இழி கலையாகக் கருதப்பட்டது. பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண்டேல்,ஈ.கிருஸ்ணையர் போன் றோரின் உழைப்பால் இக்கலைமறுமலர்ச் சியடைந்தது. பரதநாட்டியம் என்னும் பெயரு டன் உயர்குல, நடுத்தரப் பெண்களும் கற்கக்கூடியகலையாகமாற்றியமைத்தனர்.

இக்காலப்பகுதியில் உதயமான தமிழ் சினிமாக் களில் இக்கலையின் ஆதிக்கத்தினை அப்போது தோன்றிய திரைப்படங்கள் வாயி லாகஅறியக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் ஏறத்தாழ 1937-1965 வரையான காலங்களில் நம் பண்பிற்கு உட்பட்ட சாஸ் திரிய மற்றும் நாடோடிக்கலை கலந்த நாட்டிய முறைப் பழக்கத்தில் இருந்தது. பரதநாட்டியக் கலாநிபுணர் ஸ்ரீமதி வரலட்சுமியின் ஞாபகார்த் தமாய் அர்ப்பணம் செய்யப்பட்ட இந்தியா வின் முதல் நாட்டியப் படமான 'ஜலஜா' அல்லது' நாட்டியமகிமை'என்றபடம் '22' எனும் விளம்பரத்தோடு 1938ம் ஆண்டு வெளியாகியது.

சென்னைரினையான்ஸ் தியேட்டர்ஸ் ஸ்தாப கரான ராஜகோபாலன் ஒருகலைப்பித்தன். பரத நாட்டியத்தின் அழகை உணர்ந்து இக்கலையை உயிர்ப்பிக்கலாம் என்றஎண்ணத்துடன் ஊரூராகச் சென்றுகடைசியாகத் தஞ்சைரங்க மங்களத்துக் கோவிலில் ஜலஜாவின் நடனத்தைக் கண்டுபிரமிக்கின்றார். தான் ஆவலோடு தேடிவந்தகலைத்திறனை ஜலஜா விடம் கண்டார். அவளதுதிறமைகுக் கிராமத் திலே மழுங்கடிக்கப்படாமல் இருக்கஅவளைச் சென்னைக்குஅழைத்துவருகின்றார். என இக்கதைச் சுருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. புரா தன, இதிகாச ராஜா ராணிக் கதைகளும், சுதந் திர விழிப்புணர்வுக் கதைகளும் திரைப்படங் களாக வெளிவந்திருந்தகாலத்தில் 'ஜலஜா' ஒருமுற்போக்கான படமாகத்தான் விமர்சிக் கப்பட்டது.



தற்கால சினிமா வியாபார நோக்குடனேயே தயாரிக்கப்படுகின்றது. பரதத்தை அறியாத வர்களும் தேவைக்கேற்ப அந்த நிமிடமே நடனத்தைக் கற்று ஆடுகின்றனர். இதனால் பரதம் சுத்தமானதாக இடம்பெறுவதில்லை.

உலகில் மிகச்சிறந்தபடங்களில் ஒன்று 'கல் பனா'. இது 1994 இல் எடுக்கப்பட்டது. இந் தியாவின் மிகச்சிறந்த நாட்டிய மேதையாகிய உதயசங்கர் என்ற வங்காளியும் அவரு டைய மனைவி அமலசங்கரும் இப்படத்தை எடுத்தார்கள். இது ஜெமினி ஸ்ரூடியோவில் படமாக்கப்பட்டது. இந்தக்காலத்தில் மிகச் சிறந்த ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான ராம்நாத் என்பவரே இதில் ஒளிப்பதிவாள ராகப் பணிபுரிந்தார். இப்படம் ஒருசிறிய காதல் கதையைஅடிப்படையாகக் கொண்டு நாட்டியத்தாலேயே படமாக்கப்பட்டது. நடன மேதை உதய சங்கரும் அவரது மனைவி யாரும் இரண்டுஆண்டுகள் தொடர்ந்து இப் படத்தைத் தயாரித்தார்கள். ஜெமினிஅதிபர் எஸ்.எஸ்.வாசன் அவர்கள் தன் ஸ்ரூடியோ வில் முதல் தளத்தையேஉதயசங்கர் அவர் களுக்குக் கொடுத்துவிட்டார். இந்தப் படத்தில் பங்குகொள்ள இந்தியாவில் பல்வேறுபகுதி களிலிருந்து ஆண்களும் பெண்களும் வரு விக்கப் பட்டார்கள்.

1944 இல் தாயார் சரஸ்வதியம்மாளுடன் பம்பாய் சென்றலலிதா(12 வயது),பத்மினி(11 வயது), ராகினி (7 வயது) அங்கே நாட்டிய நிகழ்ச்சி ஒன்றில் ஆடினார்கள். திருவாங் கூர்சகோதரிகள் என்றபெயர் பெற்றிருந்த அவர்களது நாட்டியத்தைக் காணப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் உதயசங்கர்.

திருவாங்கூர் சகோதரிகளில் லலிதா,பத்மினி இருவரும் கல்பனாபடத்தில் நடிக்கஒப்பந்த மாயினர். பின் மூவரும் நாட்டியக் காட்சிகளில் ஆடத்தொடங்கிநடிக்கவும் செய்தனர். இத் திரைப்படத்தில் ஜி. சகுந்தலா, எஸ். வரலெட் சுமி, பின்னாளில் நடன இயக்குநராக விளங் கிய சோப்ராமுதலியபல்வேறுகலைஞர்கள் நடித்தார்கள்.

இசையையும் நடனத்தையும் மட்டுமேகொண்ட இந்தக் 'கல்பனா'படம் சத்தியஜித்ரேயின் 'பதர்பாஞ்சலி' படத்திற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பேவந்துவிட்டது. உன்னதமானநடனக் கலையின் நுணுக்கங்களையெல்லாம் காட் டியே இந்தப் படம் வெளியானது. ஆனால் அதுகண்டதுமிகப்பெரியதோல்வியையே. ஆயினும் இந்தப் படம் இந்தியநடனங்களின் உயர்வைவெளிக்காட்டியதுமட்டுமல்லாமல் நடனமணிகளையும் தந்தது.

நாற்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட்டகாலப் பகுதியில் நடன இயக்குநர்களின் பங்கு குறிப்பிடத்தக்கன. தாராசௌத்ரிஎன்ற இளம் நடிகை'பாரிஜாதம்'முதலானபடங்களில் தனிநடனம் ஆடியுள்ளார். இவரின் பாம்பு நடனம் மிகவும் விஷேஷமானது. காமினி குமார் சின்ஹா என்னும் நடன இயக்குநர் 'கன்னிகா' என்ற படத்தில் தொடங்கிபல படங்களுக்குநாட்டியம் அமைத்தார்.

கோபிநாத்,தங்கமணிபோன்றோர் 'விஷ்ணு', 'லீலா' போன்றபடங்களுக்குநாட்டியம் அமைத் தார்கள். முழுக்கமுழுக்க இந்தியசாஸ்திரிய பாணியில் ஆடி தம் திறமையைவெளிக் காட்டினர். அதேபோல் 'காரைக்கால் அம்மை யார்' படத்தில் நடராஜ்,சகுந்தலாதம்பதிகள் நிருத்தியம் அமைத்தார்கள்.

1947 இல் லலிதா,பத்மினிஅவர்களின் நடனம் திரைப்படங்களில் முக்கியத்துவம் பெறத்தொடங் கின. அவர்கள் இருவரும் ஆடக்கூடியநடனம் ஒன்றைத் தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் படங்களில் புகுத்தினர். திரு. ஏ.வி. எம். அவர்கள் 'வேதாள உலகில் 'லலிதா, பத்மினியை வைத்து ஒரு நாட்டியக் காட் சியை அமைத்தார். அதுரசிகர்களின் மனதைக் கவரவே இவர்கள் இல்லாதபடங்களே இல்லை என்றாகிவிட்டது. நாட்டியநடிகையாக இருந்த அவர்கள் குணச்சித்திர நடிகை ஆனார்கள்.

லலிதா,பத்மினிபோன்றேசாயி,சுப்புலெட்சுமிஎன்ற இரண்டு நாட்டியத்தாரகைகள் திரைப்படங் களில் தொண்டாற்றினர். "லவங்கி" என்ற படத்தில் அசுரிஎன்றநாட்டியத் தாரகையின் நடனங்கள் மெய்சிலிர்க்கவைத்தன. ஸ்ரீமதி ருக்மணிதேவிஅருண்டேல் பழைய ராஜா தேசிங்குபடத்தில் நடனம் ஆடியுள்ளதாக ஒரு தகவல் உண்டு. 1938 இல் குழந்தை பானு மதி என்ற நடனமேதை 'ஜலஜா' என்ற படத்தில் நாட்டியமாடியுள்ளார்.

தமிழ்த் திரைப்படங்களின் மத்தியகாலத்தில் (1947-1965) மாபெரும் நாட்டியத்தாரகைகள் இருந்தார்கள். குமாரிகமலா, வைஜெயந்தி மாலா, லலிதா,பத்மினிஆகியோர் காலத்தில் திரைப்படநடனம் பிரமிக்கத்தக்க வளர்ச்சி பெற்று பட்டொளிவீசியது. 1968 இல் வெளிவந்த 'தில்லானா மோகனாம்பாள்' என்றபடம் காதல் கதையாகஅமைந்திருந்தது. நாயகன் நாதஸ்வர வித்வான், நாயகிநாட்டிய மேதை. இருவருக்கு மிடையிலானகாதல் கதை. இதுபத்மினிக்கு பெரும் புகழைத் தந்தது.

குமாரிகமலாஸ்ரீவள்ளி(1944),'நாம்இருவர்(1947) போன்றபடங்களில் நாட்டியமாடிப் புகழ் பெற்றார்.

மேலும் 1950 இல் வெளிவந்த'மந்திரிகுமாரி', 1954 இல் வெளிவந்த 'விளையாட்டு பொம்மை", 1964 இல் வெளிவந்த'கொஞ்சும் சலங்கை'போன்றபடங்களில் லலிதா, பத் மினி, ராகினி, குமாரிகமலாபோன்றோர் நாட்டியமாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1949 இல் திரைப்படஉலகில் பிரவேசித்த வை ஜெயந்திமாலாவை சிறந்த நாட்டிய நடிகை என உலகப்புகழ் பெறவைத்தபடம் 'அம்ர பாலி' என்ற ஹிந்திப்படமாகும்.

உதயசங்கரின் 'கல்பனா, வி. சாந்தாராவின் 'ஜனக் ஜனக் பாயல் பஜே'போன்ற உலகப் புகழ் பெற்றநாட்டியப் படங்களைத் தந்ததமிழ் சினிமாவில் இன்னும் நடனமணிகளின் பங்கு இருந்துகொண்டேயுள்ளது. ஆனாலும் அவர்களின் நாட்டியத் திறமையினை வெளிக் கொணரவாய்ப்பளிக்கப் படுவதில்லை.

தற்கால சினிமா வியாபார நோக்குடனேயே தயாரிக்கப்படுகின்றது. பரதத்தை அறியாத வர்களும் தேவைக்கேற்ப அந்த நிமிடமே நடனத்தைக் கற்று ஆடுகின்றனர். இதனால் பரதம் சுத்தமானதாக இடம்பெறுவதில்லை. அதேபோல் மேற்கத்தேய உடையணிந்து பரதம் ஆடுவதும், பரத உடையணிந்து மேற்கத்தேய நடனம் ஆடுவதும் இன்றைய சினிமாவில் அதிகம் காணமுடிகின்றது.

திரைப்படங்கள் முழுக்கமுழுக்க மேற்கத்தேய நடனமுறைக்குப் போய் பண்புள்ளபரதம் தழுவிய ஆரம்பகால நடனமுறை இன்று பாலுணர்வைத் தழுவியும்,பிறேக் டான்ஸ் முறையைத் தழுவியும் மாற்றம் கொண்டு விட்டது. அரைநிர்வாணக் கோலத்தில் ஒருநடனக்காரி ஆட அவளைச் சுற்றிபத்துப் பதினைந்துபேர் நின்று கொச்சையான வார்த்தை கொண்டபாடல்களுக்கு போதை யூட்டும் ஆட்டம் ஆடுவதுபோன்றவைதமிழ் சினிமாவில் அறிமுகமாகிவிட்டது. இதன் வளர்ச்சி நல்லநடனத்தை அப்புறப் படுத்தி விட்டது.

இவ் வாறுகாணப் படுகின் றசினிமாவில் மோகம் கொண்டமக்கள் எங்குகலைநிகழ்ச்சி இடம்பெற்றாலும் அங்குசினிமாப் பாடல் களுக்குநடனம் இடம்பெறவேண்டும் என் பதையே விரும்புகின்றனர். சினிமாவில் பரதத்தின் ஆபாசத் தன்மைகளைக் கண்ட பெற்றோர் தம் பிள்ளைகளை இத்துறையில் சேர்ப்பதற்குத் தயங்கும் நிலையையம் காண முடிகின்றது.

எனவே சினிமா பரதத்தினை வளர்பதற்கென்று ஒரு காலம் இருந்தாலும் பின்னர் வர்த்தகநோக் குடன் உருவாக்கப் படுகின்றமையால் அது சந்தையில் நல்லவிலைக்குவிற்கப்பட வேண் டும் என்பதற்காக மேற்கத்தேய கலாச்சாரங் களையும், ஆபாசங்களையும் கொண்டு வந்துபலமாற்றங்களைச் செய்து மக்கள் மத்தியில் நடனத்தைப் பற்றி இருந்த நல்ல கருத்தைமாற்றிவிட்டது. இதனால் சினிமா வால் பரதம் வளர்க்கப்பட்டு அதனாலேயே வீழ்ச் சியும் கண்டுள்ளதனை அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர் தப்பிய புறாக்கள்

கற்பகவனம் என்னும் ஊரிலே பெரியதொரு குளம் அமைந்திருந்தது. அதன் கரைகளில் பல வகையான பெரிய மரங்கள் ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருந்தன. இந்த மரங்களில் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த பறவைகள் வசித்து வந்தன. இதனால் பறவைகளின் ஒலி எப்போதுமே அங்கு கேட்டுக் கொண்டிருக்கும். அங்குள்ள ஆலமரமொன்றில் இரண்டு புறாக்கள் சோடியாக வசித்து வந்தன. அவற்றுள் ஒன்று ஆண் – மற்றையது பெண். இந்த இரண்டு புறாக்களும் மிகவும் அந்நியோன்யமாக ஒன்றையொன்று பிரியாமல் ஒற்றுமையுடன் காணப்பட்டன.

ஒரு நாள் அந்தப் புறாக்கள் தமக்கான இரையைத் தேடிச் சென்றன. வயலொன்றில் காணப்பட்ட விளைந்த நெற்பயிர்கள் அவற்றின் கண்களில் பட்டன. உடனடியாக அந்த வயலில் இறங்கி நெல் மணிகளைத் தமது அலகுகளால் கொத்தி உண்டன. இவ்வாறு தினமும் இடம் பெற்று வந்தது.

ஒரு நாள் புறாக்கள் வயலில் இருப்பதை வானத்தில் பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று கண்டு கொண்டது. எப்படியாவது புறாக்களைப் பிடித்து அவற்றை இரையாக்க வேண்டுமெனத் தீர்மானித்தது. இதனால் புறாக்களைச் சுற்றிச் சுற்றித் தாழ்வாகப் பறந்தது. புறாக்கள் கழுகின் நோக்கத்தை அறிந்து கொண்டன. ஆண் புறா கழுகை வீழ்த்துவதற்கான வியூகத்தை வகுத்துக் கொண்டது.



அந்த வயலுக்குச் சொந்தக்காரன் நெல் மணிகளை வீணாக்கும் பறவைகளைப் பிடிக்கும் பொருட்டு வயலின் ஒரு பகுதியில் வலையினால் ஆனதொரு பொறியை உருவாக்கியிருந்தான். இதையறியாத பறவைகள் அதில் சிக்சிக் கொள்வது முண்டு. ஆனால் புத்திசாலிகளான இந்த இரண்டு புறாக்களும் அதில் சிக்காமல் தப்பித்து வந்தன.

கழுகு தமக்கு அருகில் பறந்து வருவதை அறிந்து கொண்ட ஆண் புறா தனது சோடியையும் அழைத் துக் கொண்டு அந்தப் பொறியின் அடியில் பதுங்கிக் கொண்டது. இதையறியாத கழுகு புறாக்களைப் பிடிக்கும் பொருட்டு வேகமாகப் பாய்ந்தது. ஆனால் பொறியில் சிக்கிக் கொண்டது. அப்போது தான் அங்கு வந்த வயற் சொந்தக்காரன் தனது கையில் வைத் திருந்ததடியால்அடித்துஅதனைக்கொன்றான்.தமது எதிரி ஒழிந்தான் என்ற மகிழ்ச்சியுடன் அந்தப் புறாக்கள் தமது இருப்பிடத்தை நோக்கிப் பறந்து சென்றன.

## புதுமைத் தகவல்கள்



1. பறவை இனங்களில் ஆந்தையின் முட்டை மாத்திரமே உருண்டை வடிவில் இருக்கும்.
2. இரவு வேளைகளிலும் ஒக்சிஜனை வெளிப்படுத்தும் தாவரங்கள் துளசியும் அரசமரமும் தான்.
3. இலங்கையில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டு 2003 நவம்பரில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தில் பதிவாகி விற் பனைக்கு வந்த கார் மைக்கரோ ஆகும்.
4. முதலையின் அடி வயிற்றுப் பகுதித் தோலில் புல்லட் புரூவ் உடை தயாரிக்கிறார்களாம்.
5. உலகில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உள்ள நாடு இந்தோ னேசியா.
6. பல பாடல்களைப் படைத்த பாரதியார் தாலாட்டுப் பாடல்களைப் பாடவே இல்லை.
7. 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற் பனையாகி புத்தக உலகில் சாதனை படைத்த ஹரிபொட்டர் புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்து பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் ஆவார்.

## உயிரினங்களை பற்றிய தகவல்கள்



- கோழி முட்டையின் நடுவிலுள்ள கருவில் காணப்படும் திருகிய இழைகளின் பெயர் சலாசா
- காகமே இல்லாத நாடு நியூசிலாந்து
- உலக கழுதைகள் புகலிடம் உள்ள மாநிலம் குஜராத்
- புறாவின் விலங்கியல் பெயர் கொலம்பியா லிவியா



- பசுவிற்கு அசைபோட உதவும் இரண்டாவது வயிற்றின் பெயர் மா
- யானை சவாரியில் ஆல்பஸ் மலையைக் கடந்தவர் ஹன்னியால்
- மீன்களின் ஆறு எனப்படும் கனடா நதி குளோன்டிக்
- எலி மருந்தில் இருக்கும் பொஸ்பரஸ் வெண் பொஸ்பரஸ்
- பறக்கும் போதே தூங்கும் பறவை கழுகு

பூனை குடும்பத்தில் மிக அழகான இனம் பனிச்சிறுத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் தருமபுரி

- நீலப்பசு என்று அழைக்கப்படும் விலங்கு நீல்கை எனப்படும் ஆசிய மான்
- சிம்பன்ஸி என்ற வாலில்லாக் குரங்கு காணப்படும் இடம் ஆபிரிக்கா
- தண்ணீரில் செல்லும் மிகச்சிறிய கோழி வகைப் பறவை வாத்து



## விடுகதைகள்

1. காலால் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்?
2. எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார்?
3. நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
4. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை. அது என்ன?
5. அம்மா போடும் வட்டம்,பளபளக்கும் வட்டம்,சுவையைக் கூட்டும் வட்டம். சுட்டுத் தின்ன விருப்பம். அது என்ன?
6. வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?
7. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?
8. சலசலவென சத்தம் போடுவான், சமயத்தில் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
9. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?
10. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?

### விடைகள்:

1. தென்னைமரம் 2. நிலா 3. பென்சில் 4. அகப்பை 5. அப்பளம் 6. தீக்குச்சி 7. கண்ணீர் 8. அருவி 9. தொலைபேசி 10. செருப்பு



# படித்தலும் படைத்தலும் எவருக்கும் பொது...

Reading பொருளாதாரத்தில் உலகம் வீழ்ந்தபோது இருந்ததைக் காட்டி லும் அது வளர்ந்த பொழுதில் எழுகிற போராட்டங்களே மனிதத்தைக் கொன்று மாடிவீடுகளைக் காப்பாற்ற மட்டும் முந்திக்கொண்டு முன்நிற்கிறது. படிப்பு அறிவை வளர்க்க, அறியத்தர என்பதையும் தாண்டி பணத்தைக் குவிக்க பாதையை திசைதிருப்ப என்பதற்கான மூலதனமாகிப்போனது நமது வேகத்தின் விளைவோ என்னவோ, ஆனால் இது வளர்ச்சியின் குறையன்றி வேறில்லை.


மேல்படிப்பு படித்தவன் மேல், கீழ் வகுப்பில் கல்வி கற்றோர் சிறியவர் எனும் மனப்போக்கு எப்படி பணம் கொடுத்து வாங்கிய சீட்டின் கணத்திலிருந்து வந்து தலையில் அமர்ந்து கொண்டதோ தெரியவில்லை.

எங்கோ குணம் கெட்டுப்போய் எந்திரமாய் படிப்பதும் வளர்வதும் குடிப்பதும் குட்டிச் சுவராகிப்போய் வெறும் உயிர்த்திருக்கப் போராடுவதை மட்டுமே வெற்றி என்றும் கொண்டாடிக்கொள்ளும் வேதனைக்குரிய மனநிலைக்கு ஆளாவதும், அதன்பின் வசூலிக்கும் பணக்கட்டுகளின் மீதேறி சுத்த சான்றிதழ் சுமக்கும் பிணங்களாக நின்று கொண்டு நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்று கர்ஜித்துக்கொள்வதும், கழனி உழுது களை எடுத்தவரை கல்லடுக்கி வீடு கட்டித் தந்தோரை நெஞ்சு நனைய நாற்றத்துள் இறங்கி நம் அறியாமையின் அடைப்பெடுத்து கூலி கேட்டு நிற்போரை சொல் கோர்த்து இசை கூட்டித் தந்தோரை நமக்காய் உழைத்தோரையெல்லாம் பார்த்து அவர்களைக் கீழானவரென்று எண்ணுவதை எப்படித்தான் படிப்பினால் வந்தநற்பண்பென்றும் கொள்வதோ? திறமையை வளர்த்துக்கொண்டு திசை நோக்கிய பக்கமெல்லாம் உறவைப் பெருக்கி உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் ஏற்றத்தாழ்வு மனப்போக்கு அற்று நாலுபேர் சிரிக்கும் வாழ்விற்கு நடுத்தரமாய் இசைந்துநிற்பதில் உள்ள நிம்மதியை நான் படித்தவன் என்பதால் நான் இழந்துவிடுவேனெனில் அது நான் இறந்துவிடுகிறேன் என்பதற்குச் சமமில்லையா?

ஒரு படிப்பென்பது தனது ஒழுக்கத்திலிருந்து துவங்குமெனில் நிச்சயம் அது பிறரின் கண்ணீரை துடைப்பதாகவே இருக்குமேயொழிய தனக்கு சீட்டு வாங்க தன் அப்பாவிடம் நாற்பது லட்சத்தையோ ஐம்பது லட்சத்தையோ லஞ்சமாகக் கொடுக்க கையேந்தி நிற்கத் துணியாது.



பொருளியல் படிப்பதும், மருத்துவம் பார்ப்பதும், மேலாளர் ஆவதும் உடனிருப்போருக்கு ஒரு கை சோறு கொடுத்து பிறரின் பட்டினியைப் போக்குவதுமாகவே இருக்குமேயானால் சேற்றில் ஊனியக் கைகளும், சும்மாடு சுமந்த தலையும் என்றோ ஏற்றத்தாழ்வுகளையும் அழுக்கோடுகழுவிப்போட்டு விட்டிருக்கும்.. கிழிந்த கால்சட்டையும் ரவிக்கையும் இல்லாததொரு நடுத்தர வளர்ச்சியை என்றோ நமது மண் எல்லோருக்கும் பொதுவாய்க் கண்டிருக்கும்..



இப்போதும் ஒன்றும் குறை யில்லை. பொது அக்கறையும் பிறர் குறித்த சிந்தனையும் தனது சுற்றத்திற்கு உதவும் மனப்பான்மையும் தற்போது இளைஞர்களிடத்தில் இயல்பாய் பெருகிவருவதை நம்மால் உணரவும் முடிகிறது. அத்தகைய மனநிலையை எல்லோருக்கும் பொதுவாய் எல்லோருமாய் நாம் பெருக்கிக்கொள்ளல் வேண்டும். அருகில் இருப்பவருக்கு பசிக்கும் எனில் தனக்கு துடிக்குமொரு துடிப்பே மனிதத்தைக் கொண்டது.

அத்தகைய மனிதத்தை உணர்வெங்கும் தேக்கிவைத்துக் கொண்டால், என்னதான் படித்தாலும் பெரிய ஆளானாலும் பிறர் பற்றிய அக்கறையும் அடுத்தவர் நலனுக்காக உதவும் மனப்போக்கும் தானாகவே வரும். அங்ஙனம் பிறர் பற்றிய அக்கறையைக் கொண்டுவிட்டால் எவர் பற்றியும் குறைசொல்லவோ குற்றமாக நினைக்கவோ தோணாது. பிறரை குறையாகப் பார்க்கும்போதும், குற்றப்படுத்தி எண்ணும்போதுமே அங்கே அன்னியம் பிறந்துவிடுகிறது.

எனவே யாரின் குற்றத்தையும் மன்னித்து, குறையை இயல்பென்று ஏற்று, அது தன்னால் மாறத்தக்கது என்பதைப் புரிந்து, எல்லோரின் நலனுக்கென்றும் வாழும் வாழ்க்கையை எல்லோரும் உசிதப்படுத்திக் கொண்டால், பிறரிடம் அன்னியம் பார்ப்பதற்கு மாறாக எல்லோருக்கும் உதவ நினைக்கும் மனசு படிப்பிலும் தொழிலிலும் கூட முன்வந்துவிடும்.

இருப்போர் இல்லாருக்கு உதவ, இல்லார் இருப்போரின் நன்றியை வேறு எளியோருக்குக் காட்ட, ஒருவருக்கு ஒருவரென உதவப்போய் கடைசியிலொரு சமதர்ம தேசம் எல்லோருக்கும் பொதுவாய் பிறந்துவிடும். அங்கே படிப்பும் பொருளும் வாழ்வும் லஞ்சம் கேட்டு நிற்காது. இருப்பதை கொடுப்பது இயல்பென்று புரியவந்த தேசத்தில் பசி இருக்கும் பட்டினி இருக்காது. தோழமையும் அன்பும் இருக்கும் பகையும் புரட்டுமிருக்காது.

நல்லதொரு தேசத்திற்கான விதையையும், நல்லதொரு வீட்டுக்கான விளக்கையும் நாமே வைத்திருக்கிறோம். நாம் சரியாக வாழ வாழ நம் வீடும், வீடுகளால் நாடுமென எல்லோரும் நலமாகவே வாழலாம். எல்லோரின் நலத்திலிருந்தும் வரும் முன்னேற்றம் மெல்லப் பெருகி நன்னிலம் சமைத்து, நன்னிலம் விரிந்தெங்கும் நன்மை பரப்ப, பின் அதன் இயல்பாகவே எங்கும் அமைதியும் ஆனந்தமும் பெருகி எல்லையில்லா புவியெங்கும் சுபீட்சம் நிறையும்.

> எங்கோ குணம் கெட்டுப்போய் எந்திரமாய் படிப்பதும் வளர்வதும் குடிப்பதும் குட்டிச்சுவராகிப்போய் வெறும் உயிர்த்திருக்கப் போராடுவதை மட்டுமே வெற்றி என்றும் கொண்டாடிக்கொள்ளும் மனப்பாங்கு வேதனைக்குரியது.

# மன அழுத்தம் கட்டுப்படுத்துவது எப்படி?

சரியான திட்டமிடுதல், அவசர மற்றும் அவசியப் பணிகளை முதலில் முடித்தல், வேலைப்பளுவில்அவ்வப்போது ஓய்வு எடுத்தல், மனதை தளர்வாக வைத்திருத்தல் தனிமை மற்றும் எதிர்மறை சிந்தனை களைத் தவிர்த்து நேர்மறை சிந்தனை நண்பர்களுடன் நிறைய நேரம் செலவிடுதல்; தியானம், உடற்பயிற்சிகள், பொழுது போக்குக் காட்சிகள் முதலானவை மன அழுத்தத்திற்கு மருந்துகளாக பலராலும் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுகின்றன.

இவைகளெல்லாம் சொல்வதற்கு எளிமையாக இருந்தாலும் இவற்றில் செயல்வடிவில் உள்ள பிரச்சினைகள் அதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே எளிதில் புரியும். இந் நோயில் இருந்து நிவாரணம் பெற என்ன செய்ய வேண்டும்? மன அழுத்தம் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதை தடை செய்ய கீழுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள், அவை உங்களுக்கு உதவக்கூடும்.

உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், உணர்வுகளைப் பற்றியும், நடந்தவைகள் பற்றியும் நீங்கள் கண்டிப்பாக யாருடனாவது பேசுங்கள், உங்கள் குடும்ப அங்கத்தினரிடமோ அல்லது நண்பர்களிடமோ இது பற்றிக் கூறுவதற்கு விரும்பாவிட்டால் இதற்காக தகுந்த ஆலோசனைகள் வழங்கக் காத்திருக்கும் மனநிலை ஆலோசகரை அணுகலாம். அப்போது தான் உங்களுக்கு விடிவு கிடைக்கும். நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியான விடயங்களை மீண்டும்செய்து பாருங்கள். அன்றாடம் உடற்பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள். இந்த சக்தியூட்டும் செயற்பாடு உங்கள் பொது சுகாதாரத்தைப் பேணுவதோடு மன உளைச்சலைக் குறைக்கவும் உதவுகிறது.



மூழ்கடிக்கவரும் அரக்கனே மன அழுத்தம். இதை உடனே அடையாளம் கண்டுகொண்டு தீர்வு காண்பதன் மூலம்பெரும் இழப்புகளைத் தவிர்க்க முடியும்.

**முதல்படி:** சிறு பிரச்சினைகளுக்கு கூடபெரிய அளவில் கவலைப்படுவதே மனஅழுத்தத்துக்கான முதல்படி. மனஅழுத்தத்தால் உடல், வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகிறது.

உலகில் வாழும் அனைவருமே தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது தற்கொலை செய்யலாமா என்ற நிலைமைக்கு வருகின்றனர் என்று மனோதத்துவம் சொல்கிறது. இன்றைய வே[illegible] கொடுத்து நாம் [illegible] போது மெல்ல மெல்ல நம்மை அழுக்கி இதனால் இளம் வயதிலேயே வயதான தோற்றம் ஏற்படும். ஒருவரின் தனித்தன்மை,முயற்சி, சக்தி ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுகிறது.

**நல்லவர்களையும் முட்டாளாக்கும்:** மன அழுத்தம், நல்லஅறிவு படைத்தவர்களை [illegible], நடை, உடை, பாவனை [illegible] ாள்களாகக் காட்டுகிறது. ஒருவருக்கு உடலளவிலும், மனதளவிலும் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பிரியும் நிலை உண்டாகிறது.

**உணர்வற்ற மனிதனாக்கும்:** மனித உணர்வில், பாதிப்பை உண்டு பண்ணுகிறது. தேவையில்லாத இடங்களில், தேவையற்ற உணர்வுகளை வெளிப்படுத்தவைக்கிறது. சமுதாயத்திலிருந்து ஒரு மனிதனை பிரித்துக்காட்டுகிறது. இதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்யாவிடில் மனநோய் அளவுக்கு கொண்டு செல்கிறது.

**எவ்வாறு கட்டுப்படுத்துவது:** அவசர உலகில் மனஅழுத்தம் எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுகிறது. என்ன பிரச்சினையாக இருந்தாலும் அதை தைரியமாக எதிர்கொள்ளப் பழக வேண்டும். சிறு விடயத்துக்கெல்லாம் கவலைப்படாமல், அதை சரி செய்யவேண்டும். சரி செய்ய முடியாத பிரச்சினை எனில், அதையே நினைத்து கவலை கொள்ளக் கூடாது.

உடனே சரி செய்யுங்கள்: பிரச்சினை ஏற்பட்டு மன அழுத்தம் தோன்றும்போது, எண்ணத்ந்த மாற்றமுற்படுங்கள். நண்பர்களுடன் மனம்விட்டு பேசுங்கள். இதனால் அழுத்தம் குறையும். எளிய உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம் ஆகியவையே மனஅழுத்தத்துக்கு சிறந்த மருந்தாக கருதப்படுகிறது. வார இறுதி நாள்களில் புதிய இடங்கள், சுற்றுலாத் தலங்களுக்கு பயணம் மேற்கொள்ளுங்கள். எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளப் பழகிக் கொண்டால் மன அழுத்தத்தை மறந்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதிகா

# அலைபேசியின் ஆபத்துக்கள்




கைபேசி யுகம் என்று சொல்வது மிகையே அல்ல. இன்று அங்கிங்கெனாதபடி எங்கும் எல்லாருடைய கைகளிலும் தவழ்கிறது கைபேசி cellphone).

இந்த அலைபேசியினால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. சிறந்த, விரைவான, எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய தொலைத் தொடர்பு சாதனம் இது. வணிகர்கள், பயணிகள், மருத்துவர்கள் என பல தரப்பட்ட மக்களுக்கும் அவசரத் தொடர்பு ஆதரவாளனாக அலைபேசி விளங்குகிறது.

இருப்பினும், அலைபேசியின் ஆபத்துகள் பற்றியும், தீமைகள் பற்றியும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர் அறிவியலாளரும், சமூக ஆர்வலர்களும். அலைபேசியினால் கிடைக்கும் நன்மைகளை விட, ஆபத்துகளே அதிகம் என்று இவர்கள் எச்சரிக்கின்றனர்.

**உயிருக்கே ஆபத்து**

அலைபேசியை அதிகம் பயன்படுத்துவது உயிருக்கே உலை வைக்கும் என்றால் நம்புவதற்கு கொஞ்சம் கடினம்தான். ஆனால், அது உண்மைதான். ஷீலா ப்ரைஸ் என்னும் அமெரிக்கப் பெண்மணி தான் வேலை செய்யும் அலுவலகத்தில் தொடர்ந்து அலை பேசியைப் பயன்படுத்தியதால் மூளைப் புற்றுநோய்க்குப் பலியானார். டாக்டர் நாக்மன் பிராட்பர் என்னும் மருத்துவர் இந்த உண்மையை நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் எண்பித்து முதல் எச்சரிக்கை மணியை அடித் தார்.

**உருவாகும் நோய்கள்**

அலைபேசியைப் பயன்படுத்தும் அனைவரும் சாவை உடனே சந்தித்து விடுவதில்லை. ஆனால், நிச்சயமாக நோய்களால் தாக்கப்படுவர் என்பதை பல ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.

குறிப்பாக, அலைபேசி வெளியேற்றும் மின்காந்த அலைகள் லுக்கேமியா என்னும் இரத்தப் புற்றுநோய், தோல் புற்று நோய்கள், வலிப்பு நோய் மற்றும் மூளைப் பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்தும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அத்துடன், அலைபேசியை அதிகம் பயன்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மைக் குறைவு ஏற்படும் என்றும் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**சுற்றுச் சூழலுக்கு ஆபத்து**

[illegible]று அலைபேசிக் கோபுரங்கள் [illegible]ளம் நிறுவப்பட்டுள்ளன. இவை [illegible]லம் பரவும் மின்காந்த அலைகள் சுற்றுச் சூழலுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று சூழல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பறவை இனங்கள், சிறு பூச்சிகள், வண்டுகள் போன்றவை இந்த மின் காந்த அலைகளால் தாக்கப்படுகின்றன என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**வீணாகும் நேரம்**

அறிவியல் தளத்திலிருந்து, சமூகத் தளத்திற்கு வந்தால், இன்னும் பல தீமைகளைச் சந்திக்கிறோம். இவற்றுக்கு ஆய்வு களோ, அறிக்கைகளோ தேவை யில்லை. நம் அன்றாட அனு பவங்களே இவற்றை உறு திப்படுத்துகின்றன. அலைபேசியின் வரவுக்குப் பிறகு ஏராளமான நேரம் விரயமாக்கப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். குறிப்பாக, இளைஞர்கள், மாணவர்கள் தங்களின் பொன்னான நேரத்தை அலைபேசியில் உரையாடியும், குறுஞ்செய்திகள் அனுப்பியும் வீணாக்குகிறார்கள். அவசியமான பணிகளுக்கு அலை பேசி பயன்படுத்தப்படுவதைவிட, பொழுதுபோக்குக்கும், உறவுத் தொடர் புகளுக்குமே இன்று அதிக நேரம் அலை பேசியில் செலவாகிறது.

**பண விரயம்**

அலைபேசியில் அதிகம் பேசப் பேச பணம் அலை யாகக் கரைகிறது. முன்பெல்லாம், தொலைபேசி மட்டுமே இருந்த இல்லங்களில் கூடுதலாக அலைபேசிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அலைபேசியின் செலவு அவசியமற்ற செலவு என்பதை பெரும்பாலானவர்கள் உணராத அளவுக்கு அலைபேசிப் பைத்தியம் மக்களை ஆட் கொண்டிருக்கிறது என்பது வேதனையான உண்மை.

**பாழாகும் படிப்பு**

இந்தியாவில் மட்டுமல்ல, பெரும்பாலான இதர நாடுகளிலும் மாணவர்கள் அலைபேசியைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகிறது. மாணவர்கள் தங்களின் நேரத்தையும், கவனத்தையும் அலைபேசி மூலம் இழந்து வருகின்றனர். அது மட்டுமல்ல, அலைபேசிப் பயன்பாடு மூளையின் நரம்புகளைப் பாதித்து, கவனம் செலுத்தும் ஆற்றலைக் குறைக்கிறது, நினைவாற்றலைப் பாதிக்கிறது என்பதையும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். எனவே, மாணவர்கள் நிச்ச யமாக அலைபேசியைப் பயன்படுத்து வது தவிர்க்கப்பட வேண்டும்.

**அடிமைப் பழக்கம்**

மது, போதைப் பொருள் போலவே அலைபேசிப் பயன்பாடும் ஓர் அடிமைப் பழக்கமாக மாறிவருகிறது. இளைஞர்கள் அலைபேசிக்கு அடிமையாகி விட்டனர் என்றும், அலைபேசியைப் பயன்படுத்தாமல் இருந்தால் பித்துப் பிடித்தவர் போலாகிவிடுகின்றனர் என்றும் சீனாவில் ஆய்வு செய்து கண்டிருக்கின்றனர். நமது நாட்டிலும் அலைபேசி அடிமைகள் நிறைய பேர் இருக்கின்றனர் என்று அடித்துச் சொல்லலாம்.

**பண்பாட்டுச் சீர்கேடு:**

பேருந்து நிலையம், மருத்துவமனை போன்ற பொது இடங்களில்கூட அருகே இருக்கும் சக மனிதர்களைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் அலைபேசியில் வெட்டிப்பேச்சுப் பேசும் நாகரிகமின்மை எங்கும் பரவி வருகிறது. வழிபாட்டுத் தலங்கள், கருத்தரங்குகள் போன்ற இடங்களிலும்கூட அலைபேசியை அணைத்து விடுங்கள் என்று அறிவிப்புச் செய்யும் அவல நிலையில் இருக்கிறது நம் பண்பாடு.

**விபத்து**

அலைபேசியைப் பயன்படுத்திக்கொண்டே வாகனம் ஓட்டுவதனால் விபத்துகள் நிகழ்கின்றன என்பதை உணர்ந்து விழிப்புணர்வுப் பதாகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், இந்த இழிவான பழக்கம் குறைந்தபாடில்லை என்பதை அன்றாடம் நாம் பார்க்கிறோம்.

**ஒழுக்கவியல் தீமைகள்**

உயிர் காக்க, அவசரத் தேவைகளுக்கு, பயண நேரத்தில் என அலைபேசியின் நல்ல பயன்பாடுகள் பல இருந்தாலும்கூட, அதே அலைபேசி பல தீய செயல்பாடுகளுக்கும் பயன்படுகிறது என்பது அச்சத்தைத் தருகிறது. கொலை, கொள்ளை, விபச்சாரம், பெண்களை இழிவுசெய்தல் போன்ற சமூகத் தீமைகளுக்கும் அலைபேசியைப் பயன்படுத்தி, தொழில்நுட்பம் என்பது இருபுறமும் கூர் வாய்ந்த கத்தி என்பதை எண்பிக்கின்றனர் சமூக விரோதிகள். இன்னும் பலவற்றை அடுக்கலாம். எடுத்துக்காட்டாக, அலைபேசியைப் பயன்படுத்துவதால் இறைவன்மீது கொள்ளும் நம்பிக்கைகூட குறைந்து போகிறது என்று ஆன்மிகவாதிகள் குறைசொல்கின்றனர்.

## சில பரிந்துரைகள்:

***1.அறவே நிறுத்தலாம்.*** அலைபேசியே இல்லாமலும் நிறைவான வாழ்வு வாழ முடியும் என்று எண்பிக்கின்றனர் கொள்கைப் பிடிப்புள்ள சிலர். மனம் இருந்தால், நிச்சயம் நிறைவேற்றலாம்.

***2.நேரக் குறைப்பு:*** கண்டிப்பாக ஒருநாளில் எவ்வளவு நிமிடங்கள் அலைபேசியில் பேசுகிறோம் என்பதைக் கணக்கிட்டு அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

***3.வாரம் ஒருநாள் விடுமுறை:*** வாரத்தில் ஒருநாளைத் தேர்வு செய்து, அந்த நாள் முழுதும் அலைபேசிக்கு ஓய்வு கொடுப்பது ஒரு நல்ல செயல்.


> **அலைபேசியைப் பயன்படுத்தும் அனைவரும் சாவை உடனே சந்தித்து விடுவதில்லை. ஆனால், நிச்சயமாக நோய்களால் தாக்கப்படுவர் என்பதை பல ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையை ரசிப்போம்

கவி



யாருமற்ற தனிமையில் கடற்கரையில் நின்றிருக்கிறீர்களா? மனசு ஏதோ ஒரு பாடல் பாட, உள்ளுக்குள் உற்சாகம் ஊறத் துவங்க, இயற்கையின் மடியில் நாமே ஒரு குழந்தையாகிப் போவோம்!

புதிய புதிய இடங்களுக்குப் பயணப்படும் போதெல்லாம் வழிகளில் தென்படும் நதிகள், வயல்வெளிகள், மலைச்சரிவுகள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் என பார்ப்பதெல்லாமே மனசுக்கு அத்தனை சந்தோஷம் தரும். ஒரு நல்ல பயணம் நம்மைப் புதுப்பித்துத் தரும்.

ஆனால், நம்மில் பெரும்பாலோருக்கு வேலை–வீடு என ஒரு சின்ன வட்டத்துக்குள்ளேயே முடிந்துபோகிறது வாழ்க்கை. சென்னையில் இருந்துகொண்டேகடற்கரையைப்பார்க்காதவர்கள் எத்தனை பேர் உண்டு தெரியுமா! அடுத்த தெருவிலிருக்கிற பூங்காவுக்குள் போய் அரை மணி நேரம் செலவழிக்க முடியாதவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள்.

உலகத்தை முழுக்கப் பார்க்காமலேயே உலக வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று அலுத்துக் கொள்கிறோம். நாம் எத்தனை தூரம் பயணம் போகிறோமோ அந்த அளவுக்கு நம் பார்வையும் ஞானமும் விரியும். எந்த அளவுக்குப் புதிய புதிய நாகரிகங்களையும் புதிய புதிய கலாசாரங்களையும் தெரிந்து கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நம் அறிவும் புரிந்துகொள்ளும் தன்மையும் மேம்படும். நம் ஞானிகளும் முனிவர்களும் இந்தப் பரந்த பாரததேசத்தைத் தாண்டியும் யாத்திரைகள் மேற்கொண்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

உலகின் பல்வேறு பகுதிகளுக்கு நானும் பயணித்திருக்கிறேன். அப்படிச் சில அனுபவங்களை இப்போது பேசலாமா.!

சில மாதங்களுக்கு முன்பு வாழ்வியல் பயிலரங்கம் நடத்துவதற்காக அமெரிக்கா சென்றிருந்தேன். எதிர்பாராதவிதமாக லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பாடாகியிருந்த ஒரு நிகழ்ச்சி ரத்தாகிவிட்டது. சரி, டிஸ்னி லேண்ட் போய்வரலாமே?என்று என் மாணவர்கள் என்னை அழைத்துப்போனார்கள்.

அங்கே ஒரு ரோலர்கோஸ்டரில் நான் பயணம் செய்த அனுபவம் பரவசமாக இருந்தது. நாங்கள் உட்கார்ந்திருந்த ஸீட்டில் பிடிமானமோ, ஸீட் பெல்ட்டோ இல்லை. கொஞ்சம் உஷாராகவே உட்கார வேண்டிய கட்டாயம். ரோலர்கோஸ்டர் ஒரு குலுக்கலுடன் புறப்பட்டு, நாங்கள் உட்கார்ந்திருந்த இருக்கை சர்ரென்று வானத்தில் ஏறியது.

சரசரவென்று திருப்பங்களில் வளைந்து ஓடி, தடாலென்று சறுக்கிக் கொண்டு அதலபாதாளத்தில் கீழே சரிந்தது. சிறுகுடல் பெருங்குடலைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வாய்க்கே வந்துவிடும் போலிருந்தது அந்த அனுபவம். இருந்தாலும் ரோலர்கோஸ்டர் பயணத்தை ரசித்தேன். திடுக் திடுக்கென வரும் திருப்பங்களை ஆனந்தமாக அனுபவித்தேன். என் மாணவர்களும் இந்த த்ரில் பயணத்தில் ரொம்பவே லயித்துப்போனார்கள்.

### லயிப்புக்கு என்ன காரணம்? பயம்!

பயணம் முடிந்து கீழே இறங்கியதுமே அத்தனை பேர் முகத்திலும் அப்படியொரு சிரிப்பு. அவரவர் பயத்தைப் பற்றி அவர்களே ஜோக்கடித் துக்கொண்டார்கள். நிஜம்தானே. எதிர்பாராத திடீர்த் திருப்பங்கள், தலைகீழ் மாற்றங்கள் இவை எல்லாமே சந்தோஷம் கொடுக்க வல்லவை தானே. பிறகு ஏன் வாழ்க்கையில் எதிர்பாராதது நடந்தால் ரோலர்கோஸ்டர் போல சிலிர்த்து மகிழாமல் நொறுங்கிப் போகிறோம்?

சாதாரண ஒரு டிரான்ஸ்ஃபர் வந்தால் கூட, என் மேலதிகாரி என்னைப் பழி வாங்கிவிட்டார் என்று ஏன் அடுத்தவர்களைத் திட்டுகிறோம். வீட்டில் நமது தப்பை அப்பா சுட்டிக்காட்டினால், அக்காக் குரங்கு போட்டுக்கொடுத்துட்டா என்று ஏன் புலம்புகிறோம்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ரோலர் கோஸ்டர் பயணம் எப்படி ஒரு த்ரில்லான அனுபவமோ,ஜாலியான, சந்தோஷமான அனுபவமோ அது மாதிரி தான் வாழ்க்கையும்! ரோலர் கோஸ்டர் மாதிரியே வாழ்க்கையில் வரும் உயர்வுதாழ்வுகளையும் ரசிக்கக் கற்றுக் கொண்டால் போதும்.

என் தாத்தா மைசூர் மகாராஜாவின் அரண்மனையில் பணியாற்றியவர். அவருடைய முக்கிய வேலை ராஜாவுடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்வது. வேட்டையாடுவதில் என் தாத்தா கில்லாடி. கொடிய காட்டுமிருகங்களைக் கொஞ்சம் கூடப் பயமில்லாமல் அவர் சர்வசாதாரணமாக வேட்டையாடுவார் என்று சொல்வார்கள்.

தாத்தா, கும்மிருட்டாக இருக்கும் காட்டுக்குள் வேட்டையாடப் போகிறீர்களே, உங்களுக்குப் பயமாக இருக்காதா? என்று சிறுவனாக இருந்த நான் அவரிடம் ஒரு முறை கேட்டேன்.

அடே பையா, வேட்டைக்குப் போவதே அந்த த்ரில்லுக்காகத் தானே! சிரித்தார் தாத்தா.

ஆமாம். வேட்டைக்குப் போவதென்பது அவருக்கு ஒரு ஜாலியான பொழுதுபோக்காகத்தான் இருந்திருக்கிறது. காடு என்பது பயங்கரமான பிரதேசம். எந்தப் புதரிலிருந்து எந்தக் காட்டுமிருகம் பாயுமோ, எதுவுமே தெரியாது. காட்டுக்குள் வேட்டையாடப் போவது திகிலான விடயம். என்றாலும், ஏன் வேட்டையாடப் போகிறார்கள்?

எதிர்பாராத விடயங்களை எதிர்கொள்வதில் மனிதனுக்கு எப்போதுமே ஓர் அலாதியான இன்பம். மகாராஜா தன் ஆள்களை அனுப்பி ஒரு புலியையோ, சிங்கத்தையோ பிடித்து வந்து மரத்தில் கட்டி வைக்கச் சொல்லி அதை அம்பு எய்து கொல்ல முடியும். ஆனால், அதில் என்ன பெரிய சந்தோஷமோ, த்ரில்லோ இருக்கிறது? எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத திசையில் இருந்து வரும் தாக்குதல்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதில் தானே முழுமையான சந்தோஷமும் திருப்தியும் கிடைக்கும்?

அப்படிப் பார்த்தால் நம் வாழ்க்கையும் ஒரு மாய வேட்டை தானே? எதிர்பாராத நபர்களிடமிருந்து எதிர்பாராத நேரத்தில் சோதனைகள், நெருக்கடிகள் வரும். தாக்குதல்கள் வரும். அதை எதிர்கொள்வதில்தான் சந்தோஷம் இருக்கிறது. ஐயோ.. என் ஆருயிர் நண்பன் இப்படி என்னை ஏமாற்றுவான் என்று கனவிலும் நினைக்கவில்லையே! செழிப்பாக ஓடும் என்று நினைத்துத் தொடங்கிய வியாபாரம் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிட்டதே! என்றெல்லாம் வருத்தப்பட்டுப் புலம்புவதில் அர்த்தம் இல்லை.

வேட்டைக்குப் போகும் யாரும் இந்தப் புலி நான் ஏமாந்த நேரம் பார்த்து என் மீது பாய்ந்துவிட்டது. இது நீதியில்லை என்று புலம்பியதுண்டா?

வாழ்க்கையை ஒரு வேட்டையாக நினைத்துக்கொள்ளுங்கள். போராட்ட உத்வேகமும் புதிய உற்சாகமும் கிடைக்கும்.

*ஆனந்தம் பிரவாகம் எடுக்கும்!*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org